கோகுலம்

GOKULAM

டிசம்பர் '91 ரூ. 3/-





மயில் தோகை நடுவினிலே

கோகுலம்

1991 - டிசம்பர் மாத இதழ்
மலர் : 9 இதழ் : 11



அருமைச் சிறுவர் சிறுமியரே!

கிருஸ்துமஸ் கொண்டாடும் தம்பி தங்கைகள் அனைவருக்கும் இனிய கிருஸ்துமஸ் வாழ்த்துகள். உங்களைப் போன்ற பலரது கோரிக்கைக்கு ஏற்ப இந்த இதழ் கிருஸ்துமஸுக்கு சிறப்பளிக்கும் இதழாக மலர்ந்திருப்பது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அமரர் ராஜாஜியின் பிறந்த நாளைச் சிறப்பிக்கும் வகையில் அவர் உங்களுக்காக எழுதிய சிறுகதை ஒன்றும் இவ்விதழில் வெளியாகிறது. டிசம்பர் மாதம் பாரதியின் பிறந்த நாளாயிற்றே. அவரது வாழ்க்கை நிகழ்ச்சியை மையமாக வைத்து எழுதப்பட்ட சிறுகதை ஒன்றும் இந்த இதழில் சேர்ந்துள்ளது.

கதையரங்கத்திற்காகவும், கவியரங்கத்திற்காகவும் ஏராளமான படைப்புகள் தினமும் வந்து குவிகின்றன. கேள்வி கேட்போர் எண்ணிக்கையும் பெருகி வருகிறது.

''எங்கள் ஊரில் நடந்தது'' என்று ஓர் புதிய பகுதி விரைவில் தொடங்க உள்ளது. இதில் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். உங்கள் ஊரில் நடந்த (வீடு, பள்ளி, கோவில் எல்லாம் உங்கள் ஊர் தான்!) சுவையான ஏதாவது ஒரு நிகழ்ச்சியை அல்லது ஒரு செய்தியை ஒரு அஞ்சல் அட்டையில் எழுதியனுப்புங்கள். இது வரலாறாகவும் கூட இருக்கலாம். உங்கள் முகவரி, வயது, பள்ளி ஆகியவை தெளிவாக இருக்க வேண்டும். அஞ்சல் அட்டையில் மட்டுமே இது எழுதப்பட வேண்டும்.

அரையாண்டுத் தேர்வு நெருங்குகிறதே! உங்களுக்கு என்ன கலக்கம்! நீங்களெல்லாம்தான் திட்டமிட்டுப் படிப்பவர்களாயிற்றே?

தீபாவளி வாழ்த்து அனுப்பியவர்கள் எல்லோருக்கும் நன்றி. மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்



எதுக்கு தாத்தா இது?

ஜெயபாலனுக்கு தோட்டக்காரத் தாத்தா செய்யும் வேலை பிடிக்கவில்லை.

''அது என்ன செடி தாத்தா? பூவும் அழகும் இல்லாத செடியை எதற்கு வைக்கறீங்க?''

''இது துளசிச் செடி தம்பி. இது கற்பூரவல்லி. பூவோ, அழகோ இல்லேன்னாக் கூட இது சமயத்துக்குப் பயன்படும். மற்ற பூச்செடிகளோட இதுவும் ஒரு மூலையில் இருந்துட்டுப் போகட்டுமே?''

''எதுக்குத் தாத்தா இதெல்லாம்? கண்ட கண்ட செடிகளையெல்லாம் நட்டுத் தண்ணீரையும் வீணாக்கி... அப்பா வரட்டும் சொல்றேன்...''

''சின்ன ஐயாவே! உனக்கு இதன் அருமை இப்போ தெரியாது. போகப் போகத் தெரியும்...'' வெற்றிலைக் காவி படிந்த பல்லைக் காட்டி வயதான தோட்டக்காரத் தாத்தா சொன்ன பதில் அவனுக்குப் பிடிக்கவில்லை.

இரவு எட்டு மணி இருக்கும். சாதம், குழம்பு, காய், கீரை வகைகளுடன் சாப்பாட்டு அறை களைகட்டியது.

''இரவு சாப்பாட்டில் கீரை வேண்டாம் என்று சொன்னேனே மறந்து விட்டாயா லட்சுமி?''

''மத்தியானம் செய்த முருங்கைக் கீரை கொஞ்சம் மீந்து விட்டது. என்ன செய்வது? வீணாக்கலாமா?'' - அம்மாவின் சாந்தமான பதிலைக் கேட்டு அப்பா சாப்பிடத் தொடங்கினார்.

''நம்ம தோட்டக்காரத் தாத்தா சுத்த மோசம்பா. பூவோ, அழகோ இல்லாத கண்ட கண்ட செடியையெல்லாம் நம்ம தோட்டத்துல வைக்கிறார். வேண்டாம் எடுங்கன்னு சொன்னா கேட்பதில்லை'' என்று புகார் சொன்னான் ஜெயபாலன்.

''என்ன லட்சுமி? நீ இதையெல் லாம் கவனிக்காம என்ன பண்றே?''

''நானும் பார்க்கிறேனே. ஏதோ சில மருந்துச் செடிகளை நட்டு வெச்சா ஒரு அவசரத்துக்கு, அவசியத்துக்கு ஆகுமே...?''

அம்மா தோட்டக்காரத் தாத்தாவை நியாயப்படுத்துவதாக ஜெயபாலன் நினைத்தான். அப்பா விடவில்லை!

''நம்ம பையனுக்குப் பிடிக்க லேன்னா உடனே எடுத்துட வேண்டியது தானே?''

ஜெயபாலனுக்கு ஒரே ஆனந்தம்.

''நாளையோ அல்லது மறுநாளோ டவுன் பஸ் ஏறி விவசாயப் பண் ணைக்குப் போய் அற்புதமான பூச் செடிகள், குரோட்டன்ஸ் வகையறாக் களை வாங்கி வந்து நடச் சொல்லி.... இந்தத் துளசி, ஓமவல்லியெல்லாம் இங்கு வேண்டாம்...'' - கண்டிப்பாகச் சொன்னார் அப்பா.

ஜெயபாலனுக்குத் திருப்தியானது.

சில வாரங்களுக்குப் பிறகு ஒரு வெள்ளிக் கிழமை. அன்று பொது விடு முறை நாள். சனி, ஞாயிறு லீவும் சேர்ந்து கொண்டது. வியாழக் கிழமை மாலையே ஜெயபாலன் பக்கத்தூரில் இருக்கும் அத்தை வீட்டிற்குப் பயண மானான்.

போகும் போது நன்றாகப் போன வன் வரும் போது முகவாட்டத்துடன் வந்தான்.

''ஏண்டா? என்ன ஆச்சு? உடம்புக்கு என்ன வந்தது?'' கேட்டுக் கொண்டே நெற்றி. முகம். கழுத்து எல்லாம் தொட்டுப் பார்த்தாள் அம்மா. சளி பிடித்து இலேசான ஜுரம் இருப்பது தெரிந்தது.

''வாயைக் கட்டாமல் ஐஸ், நாகப் பழம் சாப்பிட்டிருப்பே. போதாக் குறைக்கு பச்சைத் தண்ணியில் குளித் திருப்பே... தெரியுமே! இதுக்குத்தான்

எஸ். குழந்தைசாமி





உன்னை எங்கேயும் அனுப்புவ தில்லை.''

பக்கத்தில் இருந்து பார்த்த மாதிரி அம்மா அப்பட்டமாக உண்மையைச் சொல்லவே பதில் பேச முடியாமல் ஜெயபாலன் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

டாக்டர் வீட்டுக்கு அழைத்துப் போக அவனுடைய அப்பா அவசரப் பட்டார்.

''இன்றைக்குப் பார்த்துக் கொண்டு நாளைக்குப் போகலாம்பா டாக்டர் வீட்டுக்கு'' என்று முரண்டினான் ஜெய பாலன்.

அந்த டாக்டர் தொட்டதற்கெல்லாம் ஊசி போட்டு விடுபவர். ஜெயபாலனுக்கோ ஊசி என்றாலே பயம்!

''பையனுடைய உடம்புவாகு உங்களுக்கு என்ன தெரியும்? குழந்தையிலிருந்தே அவனுக்கு கை வைத்தியம், நாட்டு வைத்தியம்தான் சட்டுன்னு கேட்கும். சளி பிடிச்சு,அதனாலே இலேசான ஜுரம் இருக்கு. தோட்டத்துப் பக்கம் போய், கைப்பிடி அளவு துளசி இலை கொண்டாங்கோ... கஷாயம் போட்டுக் கொடுத்தா நொடியிலே சரியாயிடும். போங்கோ...'' - அம்மா அப்பாவை விரட்டினாள்.

துளசிக் கஷாயம் குடிக்கச் சொல்லி நன்றாகப் போர்வையை இழுத்துப் போர்த்தினாள் அம்மா.

இரவு ரசம் சாதம் சாப்பிட்டுப் படுக்கும் போது உடம்பு இதமாகவே இருந்தது. சளி ஜுரம் குறையத் தொடங்கியது.

காலையில் எழுந்ததும் ஒரு செம்பில் தண்ணீர் எடுத்துப் போய் துளசிச் செடிக்கு ஊற்றினான் ஜெயபாலன்.

''தாத்தா, மற்ற செடிகளோடு துளசிச் செடியும் கற்பூர வல்லியும் கூட இருக்கட்டும். எடுத்துடாதீங்க'' என்றான் தோட்டக்காரத் தாத்தாவிடம்!

தோட்டக்காரத் தாத்தாவுக்கு முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

மனிதாபிமானம்

தன்னுடைய நண்பர் ஒருவரிடம் 'இது தான் என் அறை' என்று ஹெச். ஜி. வெல்ஸ் என்னும் பிரபல நாவலாசிரியர் கூறிய போது 'உங்கள் வீட்டில் நன்கு காற்று வசதி மற்றும் அலங்கரிக்கப்பட்ட இரண்டு அறைகளை வேலைக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறீர். ஆனால், உங்கள் அறை அவ்வளவு வசதியாக இல்லையே? மேலும் வேலைக்காரர்களுக்குப் போய் இவ்வளவு வசதியான இடமா' என்று நண்பர் அவரிடம் கேட்டார். அதற்கு வெல்ஸ் ''பல வருடங்களுக்கு முன் நான் ஏழையாக இருந்தேன். அப்போது ஒரு பெரிய பணக்காரரின் வீட்டில் நானும், என் தாயாரும் வசித்தோம். அங்கு எங்களுக்கு மிகவும் அசுத்தமான ஓர் அறை கொடுக்கப்பட்டது. நான் இன்னும் என் தாயார் வேலைக்காரியாக இருந்து கவனிப்பாரற்று இருந்த நிலையை நினைத்துப் பார்க்கிறேன். அதனால், நாமாவது நமது வேலைக்காரர்களை சௌகரியமாய் வைத்துக் கொள்ள வேண்டும் என விரும்பினேன். அவர்கள் 20 வருடங்களாக எனக்கு உழைக்கிறார்கள். அவர்களும் மனிதர்கள், நல்ல மனிதர்கள். நேர்மையானவர்கள், நல்ல பழக்க வழக்கங்கள் உடையவர்கள். மற்றவர்களை விட மிகவும் மேலானவர்கள். அதனால் அவர்களுக்கு சௌகரியம் செய்து கொடுப்பதில் தவறில்லை' என்று கூறினார்.

- திருச்சி, இந்திரா கோபாலன்.

படிக்க வைக்கும் கண்ணாடி!



ஓர் ஊரில் விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால், அவனுக்குக் கல்வி கற்க வேண்டும் என்று மிகுந்த ஆவல். ஆவல் இருந்ததே தவிர அவனால் படிக்க இயலவில்லை. ஒரு முறை அந்த விவசாயி நகரத்திற்குச் சென்றான். அங்கே படித்தவர் பலர் மூக்குக் கண்ணாடி அணிந்திருப்பதைப் பார்த்தான். மூக்குக் கண்ணாடி அணிந்தால் தனக்கும் படிப்பு வரும் என்று நினைத்த அவன், உடனே அருகில் இருந்த மூக்குக் கண்ணாடி விற்கும் கடைக்குச் சென்று தனக்குக் கண்ணாடி ஒன்று வேண்டும் என்றான். கடைக்காரர் பலவிதமான கண்ணாடிகளை எடுத்துக் காண்பித்தார். விவசாயி ஒவ்வொரு கண்ணாடியாகப் போட்டுப் பார்த்தான். படிக்கத் தெரியவில்லை! இப்படியாகப் பல மணி நேரம் கழிந்தது. பொறுமை இழந்த கடைக்காரர், ''நீங்கள் என்ன படித்தவரா? அல்லது படிக்காதவரா?'' என்று கேட்டார். இதைக் கேட்டவுடன் விவசாயி கோபமாக, ''உன் கடையில் உள்ள எந்த கண்ணாடியைப் போட்டாலும் எனக்குப் படிக்க வரவில்லையே! நான் என்ன செய்வது?'' என்று பதில் கூறினான்.

– அ. திருமுருகன், செஞ்சி.

முல்லா முல்லாதான்!

முல்லா மிகவும் அறிவாளி என்று கேள்விப்பட்ட அந் நாட்டு அரசர் அவரைச் சோதிக்க எண்ணி அவரை அழைத்து வரச் சொன்னார். அவரிடம் ''முல்லா நீர் இப்போது ஏதாவது ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும். அது உண்மையாய் இருக்குமானால், உமக்கு விஷம் கொடுத்துக் கொன்று விடுவேன்! அந்தச் செய்தி பொய்யானால் உன்னை வாளால் வெட்டிக் கொன்று விடுவேன்'' என்று கூறினார்.



முல்லா திடுக்கிட்டார். என்ன சொன்னாலும் சாவு நிச்சயம். இதிலிருந்து எப்படி தப்பிப்பது என யோசித்தார்.

நன்கு யோசித்த பின்னர், ''அரசே நீங்கள் என்னை வாளால் வெட்டிக் கொல்லப் போகிறீர்கள்'' என்றார் முல்லா.

அரசர் யோசித்தார். முல்லா கூறியபடி அவரை வாளால் வெட்டிக் கொன்றால் அவர் கூறியது உண்மையாக ஆகி விடும். ஆனால் அவர் கூறியது உண்மையானால் விஷமிட்டு கொல்ல வேண்டும். ஆனால், அவரை விஷமிட்டுக் கொன்றாலோ அவர் கூறியது பொய்யாகும். அப்படியானால் அவரை வாளால் வெட்ட வேண்டும்!

குழம்பிப் போன அரசர், ''முல்லா! நீர் உண்மையிலேயே புத்திசாலிதான்'' எனக் கூறி அவரை விடுதலை செய்தார்.

– செஞ்சி. தா. ஷேக்உசேன்.

பிரகாஷ் குடும்பத்தார் ஒரு சிறு நகரில் வசித்து வந்தனர். அவன் தந்தை அச்சிற்றூரிலே நிறைய நிலங்களும், கடைகளும் வைத்து இருந்தார். நகரில் இருப்போர் பெரும்பாலும் பிரகாஷ் வீட்டு நிலத்திலும், கடையிலும் கூலி வேலை செய்பவர்களே.

பிரகாஷின் தந்தை ஊரில் நல்ல காரியங்களுக்கும் பொது நலன்களுக்கும் தாராளமாக உதவி செய்வார். ஊர் மக்கள் அனைவரும் அவரிடம் எதாவது உதவி பெற்றவர்களாகவே இருப்பார்கள். அதனால், அனைவருக்கும் அவர் குடும்பத்தார் மீது மிக்க மதிப்பு இருந்தது. பிரகாஷ் அவ்வூர் பள்ளியிலேயே படித்து வந்தான். அவன் தந்தை பள்ளிக்கு நிறைய நன்கொடை அளித்திருந்தார். ஊரார் பிரகாஷையும் மரியாதையோடு நடத்தினர்.

இதனால் பிரகாஷ் கர்வம் அடைந்தான். 'நானே உயர்ந்தவன், அதனாலேயே எல்லாரும் எனக்குப் பணிகிறார்கள்' என்று மமதையோடு இருந்தான். யாரிடமும் சிறிது இரக்கமோ, பணிவோ காட்டமாட்டான். பள்ளியிலும் கர்வமாக நடந்து கொண்டான். மற்ற மாணவர்கள் இவன் முன்னால் உரக்கப் பேசியபடி நடந்து செல்வதைக் கூட அவன் பொறுக்கமாட்டான். ஊர்ப் பெரியவர் வீட்டுப்பையன் என்று இவனிடம் யாரும் கண்டிப்புக் காட்ட மாட்டார்கள்.

வீட்டிலோ, கேட்கவே வேண்டாம்! வேலைக்காரர்களை அதிகாரமாக அதட்டுவதும், கண்டபடி ஏசுவதுமாக இருப்பான். வயதில் பெரியவர்களைக் கூட ஏக வசனத்தில் பெயர் சொல்லித்தான் அழைப்பான். யாருமே எதிர்க்காதிருக்கவே பிரகாஷிற்கு தலைக னம் அதிகமானது.

பிரகாஷ் சைக்கிளில் செல்லும் போது, யாருக்கும் தன்னை முந்திச் செல்ல வழிவிட மாட்டான்! ஒருமுறை அவன் சைக்கிள் செயின் கழன்டுவிட சைக்கிளை ரோட்டின் குறுக்காக நிறுத்தி விட்டு, அவ்வழியே சென்ற ஒரு தெரிந்தவரை ''யோவ் ராமமூர்த்தி, சைக்கிள் செயினைப் போட்டுக் குடுத்துட்டுப் போ'' என்றான். அவரும் ஓடி வந்து சரி செய்தார். அதுவரை யாரும் ரோட்டைக் கடந்து செல்ல இயலவில்லை! ஒரு வழியாக, பிரகாஷ் சென்ற பிறகுதான் மற்றவர்கள் போக முடிந்தது!

திருடவா வந்தே!

பிரகாஷ் ஏழாம் வருப்புப் படிப்பவன். வெளியில் எங்கும் தனியாகச் சென்றதில்லை. டவுனுக்கோ, சினிமாவுக்கோ செல்வதென்றால் குடும்பத்துடன் செல்வார்கள். வியாபார வட்டத்தில் அவன் அப்பா ஓரளவுக்கு பிரபலமானவர். அவருடன் செல்லும் பொழுது அங்கு தியேட்டர்களிலோ, பெரிய கடைகளிலோ மரியாதையுடன் வரவேற்பார்கள்.

ஒருமுறை டவுனில் பொருட்காட்சி நடந்தது. கோடை விடுமுறை நேரமாதலால் பள்ளி மூலம் செல்ல இயலவில்லை. எனவே, பெற்றோரிடம் மன்றாடி அனுமதி வாங்கிக் கொண்டு தனியாகச் சென்றான்.

பெரிய ராட்டினங்களும் விதவிதமான பிளாஸ்டிக் பொம்மைக் கடைகளும் பார்க்க அழகாகவும் பிரமிப்பாகவும் இருந்தன. பிரகாஷ் ராட்டினத்தின் அருகில் சென்று அது சுற்றுவதைக் கண்டு ரசித்தான். ராட்டினம் நின்றது. ஏற்கனவே அமர்ந்து இருந்தவர்கள் இறங்கினார்கள். புதிதாகச் சிலர் ஏறினர். அவர்களெல்லாம் ஏற்கனவே டிக்கெட்

வாங்கியவர்கள். பிரகாஷும் ஓடிச் சென்று ஒரு தொட்டிலில் அமர்ந்தான்.

ராட்டினத்தை இயக்கியவர்கள், ''ஏய் பொடிப்பயலே! டிக்கெட் வாங்காம உம் பாட்டுக்குப் போய் ஏறினா என்னடா அர்த்தம்? உன் பாட்டன் வீட்டுச் சொத்தா? இறங்குடா கீழே டிக்கெட் வாங்கிக்கிட்டு, வரிசையில வாடா'' என்று விரட்டினர் ஏக வசனத்தில். பிரகாஷ் துணுக்குற்றான். இது போல் யாருமே அவனைத் திட்டியதில்லை! எப்படியோ சமாளித்துக் கொண்டு கட்டணம் கொடுத்து வரிசையில் நின்று வந்து அமர்ந்தான். அவ



[redacted]



நீண்ட எதிரொலி

★ இத்தாலி நாட்டில் ரோம் நகரில் கம்பானா என்னும் மைதானத்தில் சல்லா என்பவருடைய மனைவியின் நினைவுச் சின்னம் உள்ளது. அதன் விசேஷம் என்ன வென்று கேட்கிறீர்களா? அந்த நினைவுச் சின்னத்திற்கு அருகில் இருந்து யாராவது கால் நிமிடம் பாடினால், அப்பாட்டு முழு மையும் எதிரொலியாகக் கேட்கிறதாம்...!

- கே. எல். குமணன், கல்லிடை.

[redacted]

னுடைய மகிழ்ச்சி குறைந்து போனது. ராட்டினத்தில் இருந்து இறங்கி விளை யாட்டுப் பொம்மைகள் விற்கும் கடை யருகே சென்றான். அங்கு நிறையப் பொருட்கள் இருந்தன. சாவி கொடுத் தால் ஓடும் ஹெலிகாப்டர், ஸ்கூட்டர் பையன், ட்ரெயின், அழும் பொம்மை, மேளம் கொட்டும் சிறுமி என்று வித விதமாக எதேதோ அழகுப் பொம் மைகள் இருந்தன.

கடைக்காரர் ஒரு பொம்மையை சாவி கொடுத்து மேஜை மீது விட்டார். அது ஒரு ரயில். அழகாக சப்தமெழுப்பி தண்டவாளத்தில் சுற்றிச் சுற்றி வந்தது. பிரகாஷ் அதை வாங்க ஆசைப்பட்டான். அதைக் கையில் எடுத்துப் பார்த்தான். அந்த சமயம் பார்த்துக் கீழே குனிந்து எதையோஎடுத்துக் கொண்டிருந்த விற் பனையாளர் இவன் பொம்மையை எடுப்பதைக் கண்டதும் 'டக்'கென அவன் கையைப் பிடித்தார். ''ஏய், என்ன திருட வந்தாயா? இதுபோல் எத்தனை முறை எடுத்துச் சென்றிருக் கிறாய்? எத்தனை பேர் இப்படிக் கிளம்பியிருக்கீங்க? உன் கூட்டாளிங்க எங்கே? என்று படபடவென்று திட்டி னார்.

பிரகாஷ் ஆவேசம் அடைந்தான். அப்படியே அந்தப் பொம்மையை அவர் முகத்தில் விட்டெறிந்து திட்ட நினைத்தான். கூடவே ஒரு எண்ணம் தோன்றியது. இங்கு யாரையும்தான் நமக்குத் தெரியாதே. கடைக்காரர் மடக்கி நம்மை அடித்தால் என்ன செய் வது என்று யோசித்தான்! எண்ணத்தை மாற்றிக் கொண்டு "ஸாரி ஸார். இதை நான் திருடனும் என நினைத்து எடுக்க லேங்க. பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளவே எடுத்துப் பார்த்தேன். உங்க ளிடம் கேட்காமல் இதை எடுத்ததற்கு மன்னிக்க வேண்டும்'', என்று பணி வாகக் கூறி பணத்தை எடுத்துக் கொடுத் தான்.

ஆனாலும் கூட பிரகாஷ் நடந்தவை களை எண்ணிக் கூனிப் போனான்.

அவர்கள் ஊராக இருந்தால் இப்படி நடந்திருக்குமா? எல்லோரும் அவ னுக்கு எவ்வளவு பயப்படுவார்கள். இங்கு தலை கீழாக நடக்கிறதே! என்ன காரணம்? அவர்கள் ஊரில் அவன் எப்படி நடந்தாலும் யாரும் தட்டிக் கேட்க மாட்டார்கள். இங்கு அவ னையே தட்டிக் கேட்டு உடல் கூசப் பேசு கிறார்களே!

பிரகாஷ் யோசித்துப் பார்த்தான். அவர்கள் ஊரில் அவனுக்கு இருந்த செல் வாக்கு எல்லோரையும் மௌனமாக்கி வைத்தது. அந்தச் செல்வாக்குக் கூட, அவன் தந்தையால் ஏற்பட்டதுதான். இங்கு அவன் தந்தையை யாரும் அறிய மாட்டார்கள். அதனால், அந்தச் செல் வாக்கு அங்கு செல்லுபடியாகவில்லை. அதாவது உண்மையில் அவனுக்கு என்ன மதிப்பு இருக்கிறது என்பதை ராட்டினக்காரரும், பொம்மைக் கடைக் காரரும் உணர்த்தி விட்டார்கள்!

இந்த உண்மையை உணர்ந்து கொண்டதும், தான் மற்றவர்களைப் படுத்திவைத்த பாட்டை பிரகாஷ் எண்ணிப் பார்த்தான். அவன் மனம் கூசியது!

பிரகாஷின் தலைக் கனம் தானாக இறங்கியது! அவனது ஆணவமும் செருக்கும் இருந்த இடம் தெரியாது மறைந்தன! கர்வம் ஓடி ஒளிந்தது! கண் காட்சியிலிருந்து அவன் புதுமனிதனாக வெளியே வந்தான்! பெரியோர்களிடம் மரியாதையாகவும், சிறியவர்களிடம் கனிவோடும், வேலைக்காரர்களிடம் இரக்கத்தோடும் இனிமேலாவது நடந்து தனக்கென்று ஒரு மதிப்பைப் பெற்றுக் கொள்ள உறுதி கொண்டான்!

- எல். அமுதா

அட்டைப் படம்

தங்கக் கடற்கரையின் தங்கமான மனிதர்!



சென்னையில் உள்ள குழந்தை களிடம் சாக்லேட் நிறைந்த ஒரு பெரிய டின்னையும், வி.ஜி.பி. யின் தங்கக் கடற்கரைக்குள் நுழைய டிக்கெட் ஒன்றையும் கொடுத்து, இவற்றில் எது வேண்டுமோ எடுத்துக் கொள் என்று கூறினால், கண்டிப்பாக சாக்லேட் டின்னை வேண்டாம் என்று கூறிவிடு வார்கள்! உண்மையும் அதுதான்! பெரிய வர்களுக்கான பொழுதுபோக்கு அரங்க மாக மட்டுமில்லாது, டிஸ்னிலாண்ட் பாணியில் குழந்தைகளுக்கான கலை, இலக்கிய, வரலாற்று, விளையாட்டுகள் நிறைந்த பயன்மிக்க இடமாகவும் தங்கக் கடற்கரை மிளிர்கிறது!

இந்தப் பிரமிக்க வைக்கும் தங்கக் கடற்கரையைத் திட்டமிட்டு அமைத் துள்ள வி.ஜி.பி. சகோதரர்கள், தொழில் வளர்ச்சியோடு மனிதாபிமானப் பணி களைச் செய்வதிலும் முன்னணியில் இருக்கிறார்கள். ஆண்டுதோறும் கிருஸ் துமஸ் தாத்தாவாகி ஏழைக் குழந்தை களுக்குப் பரிசளித்து மகிழ்வது இவர் களது வழக்கமான பணி. கோகுலம் வாச கர்களை மகிழ்விக்க முன்னதாகவே கிருஸ்துமஸ் தாத்தாவாகியிருப்பவர் வி. ஜி. பி. சகோதரர்களில் இளையவர் திரு. சந்தோஷம். கூடவே அவரது பேரக் குழந்தைகள்.

வண்ணப்படம் : உத்ரா


கடிகாரம்!

டிக்கு டிக்கு கடிகாரம்
தீனி கேட்கா கடிகாரம்
குட்டி குட்டி முள்ளினால்
காலம் காட்டும் கடிகாரம்!


வாசல் அறைச் சுவற்றிலே
வீற்றி ருக்கும் கடிகாரம்
நேசம் காட்டி எவரையும்
நண்ப ராக்கும் கடிகாரம்!

பாட்டி பிறந்த நாளன்று
பரிசு வந்த கடிகாரம்
வீட்டில் உள்ள அனைவரும்
விரும்பிப் பார்க்கும் கடிகாரம்

- மு. சாத்தப்பன், கோனாப்பட்டு.



சேவலே!



கொக்கரக்கோ சேவலே
கொண்டைக்காரச் சேவலே
தூக்கம் உமக்குச் சேவலே
துளியும் இலையோ சேவலே!

காலைப் பொழுதில் சேவலே
கத்திக் கூவும் சேவலே
வேலை இலையோ சேவலே!
விஷமக் காரச் சேவலே!

கூவி எழுப்புச் சேவலே
கூலி உண்டோ சேவலே?
பாவம் பாவம் சேவலே
பார்த்து நீயும் பிழைச்சுக்க!

உமது கூவல் கேட்டதும்
உதைத்து அப்பா எழுப்பறார்!
நமது நட்பு நீடிக்க
நல்ல திட்டம் கேட்டுக்க!

காலை நேரம் வந்ததும்
கொஞ்சம் தூங்கிப் பாருமே!
மூலை முடுக்கைத் தேடியே
முயன்று தூங்க ஓடுவீர்!

- கே. பிரேமா, மணல்மேடு.

வானொலி!



எங்கள் வீட்டு வானொலி
எமக்கு அதுவே தேனொலி!
சிங்கக் குரலில் செய்திகளை
சீராய் முழங்கும் வானொலி!

திரையில் ரசித்த பாடல்களை
திரும்பத் தந்திடும் வானொலி!
சிறுவர் நிகழ்ச்சி முழுவதையும்
சுவைக்கத் தந்திடும் வானொலி!

அறிவியல் நிகழ்ச்சி நாடகங்கள்
அள்ளித் தந்திடும் வானொலி
அனைத்து உலக நிகழ்ச்சிகளை
அழகாய்த் தந்திடும் வானொலி!

- எம்.வி. குமார், மதுராந்தகம்.

கவியரங்கம்

கேட்டுக்கோ!




பாப்பா பாப்பா கேட்டுக்கோ!
பல்லைக் காட்டிச் சிரிச்சுக்கோ!
அப்பா வருவார் கேட்டுக்கோ!
அழகு பலூன் வாங்கிக்கோ!

கையைக் காலை ஆட்டிக்கோ!
குருவி வந்தால் புடிச்சுக்கோ!
பையில புடிச்சு மூடிக்கோ!
பாடச் சொல்லிக் கேட்டுக்கோ!

கண்ணன் வருவான் பார்த்துக்கோ
கோலி அவனுடன் ஆடிக்கோ
வெண்ணெய் தருவான் வாங்கிக்கோ
வம்புக்கு இழுத்தால் மறைஞ்சுக்கோ!

- பாலுராசா, செம்பேடு.

வண்டே வண்டே வா!வா!வா!



வண்டே வண்டே பறந்து வா!
வட்டம் அடித்தே பறந்து வா!
வண்ண மலரில் தவழ்ந்து வா!
வாயில் தேனை நிறைத்து வா!

அழகாய் வாயால் இசைக்கிறாய்
அடிக்கடி ஏனோ குதிக்கிறாய்
கழனி காடு திரிகின்றாய்
கண்டவா வியக்க மறைகின்றாய்!



இருந்து என்னுடன் பேசிடுவாய்
இனிய கதைகள் கூறிடுவாய்
பறக்கும் வித்தை சொல்லிடுவாய்
பறந்தே எங்கும் சுற்றிடுவோம்!

- ஜே. சுசை, மாத்தூர்.

கிடைப்பாரோ!



படுத்துக் கொள்ள மெத்தையை
பணம் கொடுத்து வாங்கலாம்.
வாட்டம் போக்கும் தூக்கமும்
விலை கொடுத்தால் கிடைக்குமோ?

படத்தைப் பார்க்கப் புத்தகம்
பணம் கொடுத்து வாங்கலாம்.
படித்து மகிழக் கல்வியும்
பணம் கொடுத்தால் கிடைக்குமோ?

வியாதி வந்தால் மருந்தையே
விலை கொடுத்து வாங்கலாம்.
வாயில் போட்டு விழுங்கவே
விலைக்கு யாரும் கிடைப்பரோ?

- எஸ். ராஜேஸ்வரி, திருச்சி.

ஓர் ஊரில் மூன்று சகோதரர்கள் இருந்தனர். மூவரும் ஏழ்மையின் காரண மாக மிகவும் வருந்தினார்கள். ஒருநாள் அவர்கள் மூவரும் ஒரு முனிவரைப் பார்த்தார்கள். அவரிடம் தங்கள் குறை யைக் கூறித் தங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

முனிவரும் அருகிலிருந்த ஒரு தர்ப் பையை எடுத்து மூன்றாகக் கிள்ளி மூவ ரிடமும் கொடுத்தார். ''இதை மூன்று பேரும் தலையில் வைத்துக் கொண்டு செல்லுங்கள். எங்கு உங்கள் தலையில் உள்ள தர்ப்பை விழுகிறதோ அந்த இடத்தைத் தோண்டி, அங்கு கிடப்பதை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

முனிவர் சொன்னவாறே மூவரும் தர்ப்பையைத் தலையில் வைத்துக்



கோட்டை விட்டவன்!

கொண்டு சென்றனர். சிறிது தூரம் சென் றதும் மூத்தவனுடைய தலையில் இருந்த தர்ப்பை கீழே விழுந்தது. அந்த இடத்தை அவன் தோண்டிப் பார்த்த போது உள்ளே நிறைய வெள்ளி இருந்தது. மூத்தவன் தன்னால் முடிந்த அளவுக்கு அதிலிருந்து வெட்டி எடுத்துக் கொண்டான். சிறிது தூரம் சென்றதும் இரண்டாமவனின் தலையில் இருந்த தர்ப்பைப் புல் அங்கே விழுந்தது. இரண் டாமவன் தர்ப்பை விழுந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தான். அங்கு நிறையத் தங்கம் இருந்தது. இரண்டாமவன் தனக்கு வேண்டிய தங்கத்தை எடுத்துக் கொண்டதுடன், தன் தம்பியைப் பார்த்து, ''நீயும் இதிலிருந்து உனக்குத் தேவையானதை எடுத்துக் கொள். நாம் இருவரும் ஒன்றாகவே போவோம்'' என்றான்.

''எனக்கு இதை விட உயர்ந்த பொருள் கிடைக்கும். எனவே, எனக்குத் தங்கம் தேவையில்லை'' என்று கூறி விட்டு மூன்றாமவன் மேலும் முன் னேறிச் சென்றான். சிறிது தூரம் சென்ற தும் அவன் தலையிலிருந்த தர்ப்பையும் கீழே விழுந்தது. மூன்றாமவன் அவசர அவசரமாக அந்த இடத்தைத் தோண்டி னான். அதற்குள் வெறும் தாமிரம்தான் இருந்தது. ஏமாற்றமடைந்த மூன்றா மவன், இரண்டாவது அண்ணன் தோண் டிய பள்ளத்தில் மீதம் இருக்கும் தங்கத்தையாவது எடுத்துக் கொள் வோம் என்ற எண்ணத்துடன் இரண்டா மவன் தோன்றிய பள்ளத்திற்கு வந்தான். அங்கே பார்த்த போது பள்ளத்தில் ஒன்றும் இல்லாதது கண்டு திடுக்கிட் டான்! சரி, மூத்த அண்ணன் தோண்டிய பள்ளத்தில் மீதி இருக்கும் வெள்ளியை யாவது தோண்டி எடுத்துக் கொள்வோம் என்ற எண்ணத்துடன் மூத்தவன் தோண் டிய பள்ளத்திற்கே வந்து பார்த்த போது அதுவும் காலியாக இருந்தது! 'சரி, நமக்கு உண்டானது தாமிரம்தான். அதையாவது எடுத்துக் கொள்வோம் என்ற எண்ணத்துடன் அவனுக்குரிய பள் ளத்திற்கே வந்து பார்த்த போது அதுவும் காலியாகக் கிடந்ததைக் கண்டு பெரிதும் துக்கித்தான்.

– ந. நவமணி, நல்லாலம்.

யாருக்கு வேண்டும் வரம்?

ஓர் ஏழைக் குடியானவன் கண்ண பிரானை மிக பக்தியுடன் பூஜை செய்து வந்தான். கண்ணன் அவனுக்கு இரங்கி, ''உனக்கு என்ன வேண்டும்? கேள், தருவேன். ஆனால் ஒன்று, உனக்குத் தருவதை நான் எல்லோருக்கும் தருவேன். எதையும் உனக்கு மட்டும் என்று தருவதற்கு முடியாது'' என்றான்.

''கோபாலா! எனக்கு வேண்டியதை நீ தந்தால் போதும். அதை நீ எல்லோருக்கும் தந்தாயானால் எனக்கு என்ன ஆட்சேபணை? நான் அப்படித் துர்ப்புத்திக்காரன் அல்ல. எனக்கு யார் பேரிலும் அசூயை இல்லை'' என்றான் குடியானவன்.

''நீ மிகவும் நல்லவன். எனக்குத் தெரியும். உனக்கு வேண்டியதைக் கேள். மனைவியுடன் யோசித்துக் கேள். பிறகு மாற்றிக் கொள்ள முடியாது'' என்றான் கோபாலன்.



''அப்படியானால் மனைவியைக் கேட்டுச் சொல்கிறேன். எனக்கு மூளை

இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக உயர்ந்த பதவி வகித்து, காந்தீயக் கொள்கைகளுக்கு உயிர் கொடுத்து எளிய வாழ்க்கை வாழ்ந்து, இலக்கியப் பணிபுரிந்த ராஜாஜி அவர்கள், குழந்தை இலக்கியமும் படைத்தார் என்பது குழந்தை இலக்கியத்திற்குக் கிடைத்துள்ள பெருமை. இம் மாதம் அவரது பிறந்த நாள் வருகிறது. 1957 ஆம் ஆண்டில் 'கல்கி'யில் வெளியான அவரது இந்தக் கதை, வரங்களால் மனிதர்களுக்குத் தொல்லையே. உழைப்பே மனித சமுதாயத்தை மேம்படுத்தும் உயர்ந்த சக்தி என்பதை எவ்வளவு அழகாக உணர்த்துகிறது!

உன்னைப் பார்த்ததும் கலங்கிப் போயிற்று. நாளை கேட்கலாமா?'' என்றான் குடியானவன்.

''அப்படியே!'' என்றான் கண்ணன்.

குடியானவன் அன்றிரவு தன் மனைவியுடன் யோசனை செய்தான். தன் புருஷன் பெற்ற வரத்தைக் கேட்டு மனைவிக்கு வெகு சந்தோஷம். இதைக் கேட்கலாமா, அதைக் கேட்கலாமா என்று இருவரும் வெகு நேரம் யோசித்துக் கடைசியாக முடிவு செய்து கொண்டார்கள்.

மறுநாள் குடியானவன் கண்ணனைத் தியானித்தான். ஆண்டவன் சிரித்துக் கொண்டே தரிசனம் தந்தான்.

''தம்பீ, என்ன கேட்கிறாய்?'' என்றான்.

''கருணைக் கடலே, கோபித்துக் கொள்ள வேண்டாம். நான் ஏழை,

ராஜாஜி

எனக்கு அறிவு அதிகமில்லை. ஆனபடியால், நீ சொல்லியபடி என் மனைவியுடன் யோசித்தேன்'' என்று ஆரம்பித்தான்.

கண்ணன், ''என்ன வேண்டுமோ அதைக் கேட்டுப் பெறுவாய். அது ஊரில் எல்லோருக்கும் கிடைக்கும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்'' என்றான் கண்ணபிரான்.

''ஆண்டவனே! என் பெட்டி நிறையப் பணம் வெள்ளி ரூபாயாக இருக்க வேண்டும். எவ்வளவு எடுத்தாலும் குறையக்கூடாது. இதையே கேட்கிறேன்!'' என்றான் குடியானவன்.

''அப்பனே உனக்கு ஏன் பண ஆசை பிடித்து விட்டது?'' என்று சொல்லிக் கோவிந்தன் தாமதித்தான்.


தான் கேட்ட வரத்தையே தர வேண்டும் என்று குடியானவன் வணக்கத்தோடு பிடிவாதம் செய்தான்.

''சரி, அப்படியே!'' என்று சொல்லிக் கோவிந்தன் மறைந்து விட்டான்.

'பணம் இருந்தால் எல்லாமே பெறலாம். அவ்வப்போது என்ன வேண்டுமோ அதைப் பெறலாம். ஆனபடியால் இந்த வரத்தைக் கேள்' என்று தன்னுடைய மனைவி சொன்னதைக் குடியானவன் சரி என்று ஒப்புக் கொண்டு இவ்வாறு கேட்டு வரம் பெற்றான்.

வரத்தின்படி பெட்டியில் ரூபாய் நிறைந்து விட்டது. உடனே குடியானவன் கை நிறைய ரூபாய் எடுத்துக் கொண்டு, அடுத்த ஊரில் துணிக் கடைக்குச் சென்றான். வீட்டுக்காரிக்கு நல்லதாக புடைவை இரண்டு வாங்க வேண்டுமெனச் சென்றான்.

குடியானவன் சென்ற வழியில் ஜனங்கள் எல்லாரும் ஏதோ வெகு குதூகலமாக இருப்பதைக் கண்டான். தனக்குக் கோவிந்தன் தந்த வரம்



எல்லாருக்குமே பயன்பட்டு விட்டதை அவன் முதலில் மறந்து விட்டான். பிறகுதான் நினைவுக்கு வந்தது. ஊரில் எல்லோரும் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து அவனும் மகிழ்ந்தான். ஜவுளிக் கடைக்குள் நுழைந்தான்.

நல்ல புடைவைகள் இரண்டு எடுத்துத் தரச் சொன்னான்.

''நீ என்ன கொடுப்பாய்?'' என்று கேட்டார் கடைக்காரர்.

''என்ன விலை சொல்லுகிறீரோ அதைத் தருகிறேன்.''

''விலையா? எங்களுக்குப் பணம் வேண்டாம்! பணத்தை இப்போது மதிப்பார் இல்லை. அது எல்லாரிடமும் ஏராளமாக இருக்கிறது. எத்தனை மூட்டை அரிசி தருவீர்? சொல்லும்'' என்று கேட்டார் கடைக்காரர்.

''ரூபாய்க்கு ஏன் மதிப்பில்லை? அதற்கு என்னவாயிற்று?'' என்றான் குடியானவன். கடைக்காரர் வேடிக்கை செய்கிறார் என்று எண்ணி இப்படிக் கேட்டான்.

''எல்லாரிடமும் ரூபாய் வேண்டிய அளவு குறையாமல் இருக்கிறது. இப்போது யாருக்கும் பணம் வேண்டிய தில்லை. இது உமக்குத் தெரியாதா?'' என்று கேட்டார் கடைக்காரர். குடியானவனுக்கு விஷயம் விளங்கவில்லை. அடுத்த கடைக்குப் போனான். அங்கேயும் ''அரிசியோ, பருப்போ, கடலையோ ஏதாவது உணவுப் பண்டமாகக் கொண்டு வா, பணம் வேண்டாம் அது நம்மிடம் ஏராளமாக இருக்கிறது''



என்றார்கள்.

குடியானவன் துக்கமடைந்தான். எந்தக் கடைக்கு எந்த பண்டம் வாங்கப் போனாலும் இந்த நிலையே இருப்பதைக் கண்டான். ரூபாய்க்கு மதிப்பே இல்லாமல் போயிற்று! மனைவியும் புருஷனும் துயரத்தில் மூழ்கினார்கள்.

''கோவிந்தா, என்னை ஏமாற்றி விட்டாயே'' என்று அழுதான் குடியானவன்.

''நான் ஏமாற்றவில்லை உன்னை! நீயே ஏமாற்றிக் கொண்டாய்'' என்றான் கோவிந்தன்.

''நானும் குடும்பமும் பசியால் செத்துப் போவோமே!'' என்று குடியானவன் அழுதான்.

''வரத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறாயா?'' என்று கேட்டான் கண்ணன்.

''உன் வரத்தை நீயே எடுத்துக் கொண்டு போ! நான் முன்போல் உழைத்துப் பிழைப்பேன். அதற்கு நீ உதவினால் போதும்'' என்றான் குடியானவன் தைரியமாக.

''அதுவே சரி, நீயும் உழைத்துப் பிழை. எல்லோரும் உழைத்துப் பிழைக்கட்டும்'' என்றான் கோவிந்தன்.



கணக்குத் தெரியாத மேதை!

★ அந்தச் சிறுவன் முழு முட்டாளாய் இருந்தான். எந்தவித அறிவுத் தெளிவும் அவனிடம் இல்லை. கல்வி அவன் மூளையில் ஏறவில்லை. கூச்ச சுபாவம் உள்ளவனாகவும் இருந்தான். அதனால் அவன் மற்ற சிறுவர்களுடன் சேர்ந்து விளையாட வெட்கப்பட்டான்.

ஒருநாள் சிறுவன், டிராம் வண்டியில் ஏறிப் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. கண்டக்டரிடம் டிக்கெட்டைக் கொடுத்து, மீதிச் சில்லறையையும் கொடுத்தான். சிறுவன் சில்லறையை எண்ணிப் பார்த்தான். சில்லறை குறைவாக இருப்பது போலத் தோன்றியது. ஆகவே மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்தான். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விதமாகக் கணக்கு வந்தது! சிறுவன் கண்டக்டரை அழைத்து, ''நீங்கள் சரியாகச் சில்லறை கொடுக்கவில்லை போல் தோன்றுகிறதே!'' என்று தயக்கத்தோடு கேட்டான். கண்டக்டர் சில்லறையை வாங்கி எண்ணிப் பார்த்தார். சரியாகத்தான் இருந்தது. ஆத்திரமுற்ற கண்டக்டர், ''முட்டாள் சிறுவனே! உனக்குக் கணக்குத் தெரியவில்லையென்றால் என்னையும் ஏன் குழப்புகிறாய்'' என்று கோபத்தோடு கூறி விட்டு, அப்பால் சென்று விட்டார்.

சிறுவன் மீண்டும் சில்லறையை எண்ணிப் பார்த்தான். அப்போதும் தவறாகத்தான் கணக்கிட்டான். அதனால் சிறுவன், தன்னைத்தானே நொந்து கொண்டான், ''நான் ஒன்றுக்கும் உதவாத முட்டாள், எனக்கு எதுவுமே தெரியவில்லை. நான் உருப்படவே மாட்டேன்'' என்று வேதனையோடு கூறிக் கொண்டான்.

அந்தச் சிறுவன்தான் யார் தெரியுமா? பிற்காலத்தில், உலகப்புகழ்பெற்ற சிந்தனையாளரும் அறிவியல் அறிஞருமாகத் திகழ்ந்த ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்தான்!

- ந. நவமணி, நல்லாலம்.

டிப்ஸ் தெரியுமா?



★ உடனுக்குடன் காரியம் ஏதேனும் நடக்க 'டிப்ஸ்' கொடுப்பது வழக்கமாகி விட்டது. இந்த 'டிப்ஸ்' என்ற சொல் எப்படிப் பிறந்தது தெரியுமா? "To Insure Promptness" என்ற சொற்றொடரில் உள்ள சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு புனையப்பட்டதுதான் இதுவே பின்பு டிப்ஸ் ஆக மாறியது.

- தா. ஷேக் உசேன், செஞ்சி - 2.

மாட்டேன் போ!

பால. நடராஜன்

அய்யாசாமி, தனது மகன் பாரதியோடு ஒரு திருமணத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் ஒரு பிச்சைக்காரன் பிச்சை கேட்டான். அய்யாசாமியின் கையிலோ சில்லறை ஏதும் இல்லை. பையனிடம் சொல்லி அவனிடம் இருந்த பத்துப் பைசாவைப் பிச்சை போடச் சொன்னார். பையன், பாரதியோ ''ஹூம்... ஹூம்... மாட்டேன் போ...! பிஸ்கட் வாங்கணும்....'' என்று அழுது மறுத்தான். பல முறை சொல்லிப் பார்த்தும் பயனில்லாமல் போயிற்று. மேலும் பையனின் விசும்பல்தான் அதிகமாயிற்று.

பிச்சைக்காரன் சிரித்துக் கொண்டே ''பரவாயில்லை சாமி... குழந்தைக்கு என்ன தெரியும்? என் கஷ்டம் அதுக்குத் தெரியுமா? நீங்க போங்க சாமி'' என்றான்.

பிச்சை போட மறுத்த பாரதியைத் திட்டிக் கொண்டே வீடு நோக்கி நடந்தார் அய்யாசாமி. ''தர்மம் செய்தால் புண்ணியம் உண்டு. அந்தத் தர்மம் தலை காக்கும்'' என்பதைத் தன் பையன் பாரதிக்கு எப்படி விளக்கிக் கூறுவது என்று யோசித்துக் கொண்டே நடந்தார் அவர்.

எதிரில் வந்த தமிழாசிரியர் தங்கவேலு 'பாரதி ஏன் அழுகிறான்?' என்று கேட்டாரர். அவரிடம் விஷயத்தை விவரித்த அய்யாசாமி ''இவனுக்குப் பாரதின்னு ஏன் பேர் வைச்சோம்னு இப்ப ரொம்ப வருத்தப் படறேன்'' என்று மனம் நொந்தார்.

பையனைத் தூக்கிக் கொண்ட தமிழாசிரியர் ''பாரதின்னு பேரு வச்சிருக்கிறியே தம்பி, அவரு கதை தெரியுமா உனக்கு?'' என்று மெதுவாகக் கேட்டார்.

பையன் தலையசைத்துத் தெரியாது என்றான். ''ஒரு நாள் புதுச்சேரியில் பாரதியார் நண்பர்களுடனும், அவரது குழந்தை யதுகிரியுடனும் கடலில் குளிக்கப் போனார். போகும் வழியில் ஒரு பாம்பாட்டி, வித்தை காண்பித்துக் கொண்டிருந்தான். பாரதியார் யதுகிரியுடன் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார். அந்த யதுகிரிக்கும் உன் வயதுதான் இருக்கும். கூட்டத்தில் இருந்த ஒருவர் ''காலணா''வை எடுத்துப் பாம்பாட்டி விரித்திருந்த துணியில் வீசி எறிந்தார். திறமைசாலியான பாம்பாட்டி உடனே அந்தக் காலணாவை எடுத்துக் காண்பித்து, ''இந்தக்காலணாவைக் கொண்டு பாம்பின் வயிற்றை நிரப்பி விடலாம். என் வயிற்றுக்குச் சோறு ஊட்டக் காசு வேண்டும்'' என்று கேட்டான் உருக்கமாக.

பாரதியார் பாம்பாட்டியின் பேச்சுத் திறமையைக் கண்டு வியந்தார். குழந்தை யதுகிரியின் கையில் காசு இருந்தது. அதை வாங்கிப் போட்டு விடலாம் என நினைத்தார் பாரதியார். ஆனால், உன்னைப் போலவே அதைப் போட யதுகிரி மறுத்து விட்டாள்! பாரதியாருக்கோ மிகவும் இளகிய மனசு. எனவே, சட்டெனத் தன் இடுப்பில் கட்டியிருந்த வேட்டியைக் கழற்றிப் பாம்பாட்டிக்குப் போட்டு விட்டுக் கையில் வைத்திருந்த துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டார்!

அங்கிருந்தவர்கள் எல்லோரும் சிரித்தார்கள். பாரதியைப் 'பைத்தியக்காரன்' என்றும் பரிகசித்தனர். பாரதியார் அதையெல்லாம் இலட்சியம் செய்யவில்லை. சிரித்துக் கொண்டே நின்றார்.

கதையைக் கேட்டு கொண்டு வந்த சிறுவன் பாரதி, சடாரென இடை

மறித்து, ''யதுகிரி என்ன செய்தாள்? பாம்பாட்டி என்ன சொன்னான்?'' எனக்கேட்டான்.

தமிழாசிரியர் சிறுவனின் கதை கேட்கும் ஆர்வத்தைக் கண்டு வியந்து, ''அதுவா...? பாம்பாட்டி பாரதியாரை வாயார வாழ்த்தினான். குழந்தை யதுகிரிக்கு ஒன்றுமே புரியவில்லை,'' என்றபடி தொடர்ந்தார்.

''பிறகு பாரதியார் துண்டோடு கடலுக்குச் சென்று குளித்து விட்டு வீடு வந்து சேர்ந்தார். கடல் நீரின் உப்புத் தன்னை உடம்பில் அரிப்பைக் கொடுக்குமல்லவா? அதைப் போக்க வீட்டில் மீண்டும் குளித்தார்.

அவரோடு குளிக்க வந்தவர்கள் எல்லோரும் குளித்து விட்டு வேறு ஆடை அணிந்து கொண்டார்கள். பாரதியார் என்ன செய்வார் பாவம்! இருந்த ஒரு வேட்டியையும் பாம்பாட்டிக்குப் போட்டு விட்டாரே! அதனால் சும்மா நின்று கொண்டிருந்தார்.

இதைக் கண்ட பாரதியின் அண்ணா ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று பாரதியாரைக் கேட்டார்.

பாரதியாரோ, ''வேட்டி வேண்டும் அண்ணா'' என்றார். உடனே அவர் சென்று இரண்டு





கொண்டு வந்து ''ஒன்றுக்கு இரண்டாக உடுத்திக் கொள்'' என்று கொடுத்தார்.

பாரதியாருக்கு ஒரே மகிழ்ச்சி. உடனே யதுகிரியிடம் ''பார்த்தாயா! நீ அந்தப் பாம்பாட்டிக்குக் காசு போட மறுத்தாயே? நான் என்னிடம் இருந்த ஒரே ஒரு வேட்டியை அவனுக்குப் போட்டேன். இப்பொழுது ஒரு வேட்டிக்கு இரு வேட்டி கிடைத்து விட்டது. நாம் ஒருவருக்கு உதவி செய்தால் நமக்கு வேறொருவர் உதவி செய்வார். தவிரவும், இல்லாத ஏழை எளியவர்களுக்குத் தர்மம் கண்டிப்பாய்ச் செய்ய வேண்டும். அதை நாம் ஒரு கடமையாகவே கொள்ள வேண்டும். தெரிகிறதா?'' என்று பாரதியார் சொல்லியதிலிருந்து யதுகிரியும் அப்படியே செய்ய ஆரம்பித்தாள்.

தமிழாசிரியர் கதையைச் சொல்லி முடித்ததுதான் தாமதம், சிறுவன் பாரதி வெடுக்கென அய்யாசாமியின் கையை விடுவித்துக் கொண்டு சிட்டாய்ப் பறந்தான். பிச்சைக்காரனிடம் சென்று தனது கையிலிருந்த பத்துப் பைசாவைப் போட்டு விட்டுத் திரும்பி வந்தான்.

இதைக் கண்டு மகிழ்ந்த தங்கவேலு, ''இப்போதுதான் நீ பெயருக்கேற்ற உண்மையான பாரதி!'' என்று பையனைத் தட்டிக் கொடுத்தார்.





கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

★ ஆர். ராஜாராம், திருவண்ணாமலை – 1.

? மனிதர்களுக்கு இருப்பது போல் மிருகங்களுக்கும் இரத்தப் பிரிவு உண்டா? உண்டெனில் மிருகத்தின் இரத்தத்தை மனிதனுக்குச் செலுத்த முடியுமா?



சுவையான கேள்வி. மனிதர்களுக்கு இருப்பதைப் போலவே மிருகங்களுக்கும் இரத்தப் பிரிவு உண்டு. A, B, O என மூன்று வகை இரத்தப் பிரிவுகளும், Rh— பாசிட்டிவ் இரத்தம், Rh— நெகடிவ் இரத்தம் என்ற Rh— பிரிவுகளும் நம்மைப் போலவே மிருகங்களுக்கும் உள்ளன. ஆனால், மனிதர்களுக்கு மிருகத்தின் இரத்தத்தைச் செலுத்த முடியாது. அதற்குக் காரணம் என்னவென்றால் மிருக இரத்தத்தில் உள்ள இரத்த அணுக்களின் அளவு, எண்ணிக்கை, அடர்த்தி, கன பரிமாணம், இரத்த உறை நிலை, குரோமோசோம்களின் எண்ணிக்கை போன்றவை மனித இரத்த அணுக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது. இதுவே மிருக இரத்தத்தையும் வேறுபடுத்திக் காட்டுகிறது! (தகவல் உதவி : டாக்டர். ஜே. கே. சாமுவேல் ராஜ், கால்நடை உதவி மருத்துவர், சிந்தாமணி)

★ எம். ஐ. ரைஸ், காயல்பட்டணம்.

? காரமான பண்டங்களை சாப்பிட்டால் விக்கல் வருகிறதே, ஏன்?



காரமான பண்டங்களைச் சாப்பிடும் போது நம் இரைப்பையில் அமிலச் சுரப்பு அதிகமாகிறது. இதனால், இரைப் பைச் சுவர்கள் விரிகின்றன. அப்போது

இரைப்பைக்கு அருகிலிருக்கும் உதர விதானம் என்ற சவ்வு தூண்டப்பட்டு விக்கலை ஏற்படுத்துகிறது.

★ ஜி. கே. கண்ணன், முத்துராம லிங்கபுரம்.


? இன்ஹேலர் பயன்படுத்துவது கெடுதலா?



கெடுதல் இல்லை. பொதுவாக மூக்கடைப்பைப் போக்கவும், ஜல தோஷத்தைக் குறைக்கவும்தான் நாம் 'மூக்குறிஞ்சி' (INHALER) யைப் பயன் படுத்துகிறோம். இதனால் நமக்கு தற்காலிக நிவாரணம்தான் கிடைக்கிறது. முழு நிவாரணம் கிடைப்பதற்கு மூக்குறிஞ்சியை மட்டும் நாடாமல், மருத்துவர் உதவியையும் நாட வேண்டியது அவசியம்!

★ ப. சேதுராமன் சிவகுமார், விருது நகர்.

? பெண்களுக்கு மட்டும் ஏன் வழுக்கை விழுவதில்லை?



ஏன், உனக்குப் பொறாமையாக இருக்கிறதா தம்பி? பெண்களுக்கு இயற்கையிலேயே அமைந்துள்ள 'சுய தடுப்பு நிலை' (AUTO-IMMUNE STATE) யும், மரபுநுட்ப அம்சமும் (HEREDITY), ஈஸ்ட்ரோஜன் எனும் ஹார்மோன் பெண்களுக்கு அதிகமாக இருப்பதும் அவர்களுக்கு வழுக்கை விழுவதைத் தவிர்க்கின்றன!

★ ஜி. வெங்கி, குத்தாலம்.


? பல்லில் இரத்தமும் சீழும் வடிவது எதனால்? அதைத் தவிர்க்க வழி சொல்லுங்கள், டாக்டர்!

'பயோரியா' எனும் நோய் பற்களையும், ஈறுகளையும் பாதிக்கும் போது பற்களில் இரத்தமும் சீழும் வடிவதுண்டு. பற்களில் கரை படிந்தாலோ, அதிகமாக அழுக்கு சேர்ந்தாலோ, ஈறுகளில் நோய்த் தொற்று ஏற்பட்டாலோ இரத்தம் வடிவதும், சீழ் வருவதும் வாடிக்கை! இதனைத் தவிர்க்க தினமும் காலையில் எழுந்ததும் ஒரு முறையும், இரவில் படுக்கச் செல்லும் முன்பு ஒரு முறையும் பற்களை நன்றாகத் துலக்கி, சுத்தமாக வைத்துக் கொள்வதே சிறந்த வழி!

★ இரா. மணிகண்டன், சென்னை - 88.

? 'டென்சனை' (TENSION) க் குறைக்க ஏதேனும் வழி உண்டா டாக்டர்? என் அம்மாவுக்கு அடிக்கடி டென்சன் வருகிறது!

ஏன் இல்லை? இறைவழிபாடு, தியானம், யோகாசனம் போன்றவை டென்சனைக் குறைக்கக் கைகொடுக்குமே! காலையில் எழுந்ததிலிருந்து இரவு படுக்கச் செல்வது வரை, தினமும் ஒரே மாதிரியாக - இயந்திர ரீதியாக - வாழ்வதைத் தவிர்த்து, சில மாறுபட்ட விசயங்களில் மனதைச் செலுத்தினால் டென்சன் - மன அழுத்தம் - குறையும். ஓய்வாக அமர்ந்து இசையை ரசிப்பது, புத்தகங்கள் படிப்பது, தோட்ட வேலை செய்வது, பதியன் போடுவது, தையல், பின்னல் வேலைகளைச் செய்வது, வாரம் ஒருமுறையாவது வெளியிடங்களுக்குச் சென்று வருவது போன்றவற்றில் நம் கவனத்தைத் திருப்பினால் மன அழுத்தம் குறைந்து மன அமைதி உண்டாகும். நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொண்டாலும், நண்பர்களோடு சேர்ந்து கொண்டு மனம் விட்டுச் சிரித்தாலும் மன அழுத்தம் மறைந்து போகும்!




ரவி, வீட்டிற்கு மிகவும் செல்லப் பிள்ளை. மிகச் சிறிய குடும்பம் அவர்களுடையது. ரவி, அம்மா, அப்பா மூன்றே பேர்தான்.

அன்று பள்ளி விடுமுறை. பண்டிகைக்காக நான்கு நாட்கள் விடுமுறை. காலை நேரம். ரவி தூங்கி எழுந்து காப்பி குடித்துக் கொண்டிருந்தான். வாசலில் யாரோ வருவது தெரிந்தது. ''ஹாய் ரவி, ஹாய் ஆண்ட்டி'' என்றபடி உற்சாகமாய் இரு பையன்கள் கையில் ஆளுக்கொரு பெட்டியுடன் வந்தனர்.

''வா, வா! கிருஷ்ணா, பாபு, அம்மா சௌக்யமா? பிரயாணம் நலமாக இருந்ததா?'' - அப்பா வரவேற்றார்.

''யாரது? ஓ! வாண்டுப் பசங்களா? வாங்க, வாங்க! நான்கு நாட்களுக்கு ஒரே மகிழ்ச்சிதான் வீட்டில். ரவி, உனக்கு விளையாட நண்பர்கள் கிடைத்து விட்டனர்''- அம்மா சந்தோஷமாகச் சிரித்தபடியே பையன்களுக்குக் காப்பி கலக்க



தனக்கு நேர்ந்தால்தானே தெரியும்!

உள்ளே சென்றாள்.

ஆனால் ரவியின் முகத்தில் மகிழ்ச்சி சிறிதும் ஏற்படவில்லை! அது மட்டுமா, அவனுடைய அறைக்குத் தனது பெட்டியைக் கொண்டு சென்று கொண்டிருந்த கிருஷ்ணாவை நோக்கி, ''நில். என் அறையில் நுழையாதே! பெட்டியை ஹாலிலேயே வைத்துக் கொள்'' என்றான் கடுமையாக! எல்லோரும் அவனுடைய போக்கைக் கண்டு திடுக்கிடடனர்.

அடுத்து வந்த நான்கு தினங்களிலும் ரவி ஒவ்வொரு விஷயத்திலும் விருந்தினர்களைப் பாராமுகமாக நடத்தியது கண்டு அம்மாவும், அப்பாவும் வருத்தமடைந்தனர். கிருஷ்ணாவும், பாபுவும் மனம் சங்கடப்பட்டதையும் உணர்ந்தனர்.

பள்ளி தொடங்கியது. ரவி எப்போதும் போல் மற்ற விஷயங்களில் நல்லவனாகவே நடந்து கொண்டான். வீட்டிற்கு விருந்தினர் வந்தால் மட்டும் அவனுக்குப் பிடிக்காது. தன்னுடைய தனிப்பட்ட உரிமைகளும் சுகபோகங்களும் விருந்தினர் வருவதால் பறிக்கப்படுவதாக அவன் எண்ணினான். இந்தச் சுபாவத்தை எப்படியாவது மாற்ற முடிவு செய்தனர் அவன் பெற்றோர்.

தசரா விடுமுறை வந்தது. ''ரவி இந்த விடுமுறையைக் கொண்டாட உனக்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. மாமா வீட்டிற்குச் சென்று வரலாம்'' என்றார் அப்பா. அவர் சொல்லி முடிக்குமுன் ரவிக்கு ஒரே உற்சாகம். ''ஹையா மாமா வீட்டிற்குப் போகப் போகிறேன்'' என்று குதித்தான்.

மாமா வீட்டிற்குச் சென்று இறங்கியவனை அத்தையும், மாமாவும் முகம் மலர வரவேற்றனர். ரவியின் கண்கள் அவன் வயதுத் தோழனான தீபக்கைத் தேடின. தீபக் ரவியின் மாமா மகன். ஆனால், அவன் ரவியைச் சிறிதும் லட்சியம் செய்யவேயில்லை! தன்னுடைய வேலைகளை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தானே தவிர, ஊரிலிருந்து அவன் வந்திருப்பதையே கவனிக்காதவனாக இருந்தான்! பேசவும் இல்லை. எப்போது வந்தாலும் உற்சாகமாகத் தன்னை வரவேற்று உபசரிக்கும் தீபக்கிற்கு இப்போது என்ன வந்து விட்டது? ரவிக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நன்றாகத் தெரிந்தது. தான் தன்னுடைய வீட்டில் கிருஷ்ணாவையும் பாபுவையும் நடத்தியதை அவன் தானாகவே இப்போது நினைத்துப் பார்த்தான். தான் வருத்தப்படுவது போலத்தானே அவர்களும் வருத்தமடைந்திருப்பார்கள் என்று அவன் எண்ணினான். அவ





னுக்குத் தான் செய்த தவறு தெரிந்தது!

அதற்கு மேல் அங்கு தங்கியிருக்க ரவிக்குப் பிடிக்கவில்லை. தீபக்தான் விளையாட வரவில்லையே. எனவே சுரத்தில்லாமல் அத்தை, மாமாவிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

ரவி வீட்டுக்குள் நுழையும் போது அவன் அம்மாவும், அப்பாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். நின்றான்.

''ரவியை அண்ணா வீட்டிற்கு அனுப்பியிருக்கிறீர்களே, அவன் அங்கு எப்படித் திருந்துவான்? அங்கு அவனுக்கு ராஜ உபசாரம் அல்லவா நடக்கும்?'' அம்மா கேட்டாள் அப்பாவிடம்.

''இல்லை. அங்கு நடப்பதே இப்போது வேறாக இருக்கும்! நான் ரவிக்குத் தெரியாமல் ஊருக்குக் கடிதம் எழுதி ரவி வந்தால் தீபக் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தேன். அந்த நாடகம் வெற்றிகரமாக நடந்திருந்தால், நம் ரவி திருந்தியிருப்பான்'' என்றார் அப்பா.

''அப்பா, அம்மா! நான் திருந்தி விட்டேன். தீபக் உண்மையிலேயே அப்படி நடந்து கொள்ளவில்லை என்பதை அறிந்து மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. நான் இப்போதே கிருஷ்ணாவுக்கும், பாபுவுக்கும் கடிதம் எழுதி என்னை மன்னிக்க வேண்டுகிறேன்'' என்று கூறிக் கொண்டே ரவி உள்ளே நுழைந்தான்.

அம்மாவும், அப்பாவும் மனம் மகிழ்ந்தனர்.

- டி. ஆர். பூங்கொடி,
சென்னை - 21.



பெருமைகொள் தமிழா! - கவிஞர் திருச்சி பாரதன் - பக். 120, ரூ 16/- செந்தில் பதிப்பகம், 136, பெருமாள் எடத் தெரு, திருச்சி - 620 001

குழந்தை எழுத்தாளர்களுள் முதன் முதலாகக் கலைமாமணி விருது பெற்ற பெருமைக்கு உரியவர் இந்த நூலின் ஆசிரியர். சுமார் 35 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது பாடல்கள், கதைகள், நாடகங்கள் வாயிலாகக் குழந்தைகளுக்காக எழுதி வரும் பாரதன், தனது பெருமை மிகுந்த இலக்கிய வரலாற்றை இந்த நூலில் சுவையாகக் கூறியுள்ளார். பாரதன் பெற்றுள்ள பல பெருமைகளுக்கு அவர் முற்றிலும் தகுதியானவர் என்பதைப் புத்தகத்தைப் படிப்பவர்கள் உணர்வார்கள். இவர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் சீடர் வரிசையில், முன்னணியில் இருப்பவர் என்பதைக் கொண்டே இவரது பெருமையை உணரலாம். சிறுவர் இலக்கியத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வோருக்கு இது பயனளிக்கக் கூடிய நல்ல நூல்.

குழந்தைப் பாட்டு - கவிஞர் மு. வைத்தியலிங்கம் - பக். 128, ரூ. 15/- அருண் மொழிப் பதிப்பகம், 5-123 அங்கம்மாள் நகர், சேலம் - 636 009.

சிறுவர் பாடல்கள் படைப்பதில் தனித் திறமை பெற்ற ஆசிரியர் ஏற்கெனவே மழலைப் பாட்டு போன்ற புத்தகங்களைச் சிறுவர்களுக்காகத் தந்திருப்பவர். கற்பனை வளத்தோடு, சொல்வளமும் சேர்ந்து கொண்டால் பாடல்களின் சிறப்புக்குக் கேட்க வேண்டுமா? இதோ ஒரு பாடல் :

''எட்டி எட்டித் தாவிவரும்
எங்கள் வீட்டு நாய்க்குட்டி!
பொட்டுச் சத்தம் கேட்டாலும்
பொங்கி ஊரைக் கூட்டிவிடும்!
தெரிந்தவர் வந்தால் வாலாட்டும்
திருடன் வந்தால் சினம் காட்டும்!
அரிய காவல் வீட்டுக்கே
அருமை மிக்க நாய்க்குட்டி!''

உரக்கப் படித்தாலே போதும். தானாகவே கை தாளமிடும்! இதுவரை மற்றவர்கள் பாடாத சில பொருள்களிலும் பாடல்கள் உள்ளன. பாடல்களுடன் படங்களும் நிறைந்த புத்தகம். பரிசளிக்கத் தகுதியானது.

மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். கட்டணம் இல்லை. அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 32.

திமிங்கிலங்கள்

ஆழி

திமிங்கிலங்களில் பல வகைகள் இருக்கின்றன. ஆனாலும் அவற்றை 2 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.
1. பல் உள்ள திமிங்கிலங்கள்,
2. பல் இல்லாத பாலீன் திமிங்கிலங்கள்.

பல் உள்ளவை:



மிகப் பெரியது 'ஸ்பர்ம்' திமிங்கிலம். நீளம்: 23 மீட்டர்.



மிகச் சிறியது டால்பின் என்னும் கடல் பன்றி. 1½ மீட்டர் நீளம்.




கொலைகாரத் திமிங்கிலம் நீளம் 9½ மீட்டர்.



நார்வால் 6 மீட்டர்.



வெள்ளைத் திமிங்கிலம் 2½ மீட்டர்.




பாட்டில் மூக்குத் திமிங்கிலம் 9½ மீட்டர்.



இது வர்க்கத் திமிங்கிலம்

பல் உள்ள இந்த வகைத் திமிங்கிலங்கள் ஊன் உண்பவை. மற்ற கடல் பிராணிகளைக் கொன்று தின்னுகின்றன.


பல் இல்லாதவை:




திமிங்கிலங்களிலேயே மிகவும் பெரியது நீலத் திமிங்கிலம். நீளம் 37 மீட்டர்!



கூன் முதுகுத் திமிங்கிலம் 15½ மீட்டர் நீளம்.




சாம்பல் நிறத் திமிங்கிலம்.




முதுகுத் துடுப்பில்லாத திமிங்கிலம்

இந்த வகைத் திமிங்கிலங்கள் கடலில் உள்ள தாவரங்களையும் சிறு நுண்ணுயிர்களையும் தின்னுகின்றன.




திமிங்கிலம் குட்டிப் போட்டுப் பால் கொடுக்கும் வெப்ப ரத்தப் பிராணி. நுரையீரல்களால் வெளிக் காற்றைச் சுவாசிக்கக் கூடியது. திமிங்கிலங்கள், ஒரு காலத்தில் நிலத்தில் வாழ்ந்த பாலூட்டிகள் என்றும், பிறகு, காலப்போக்கில், அவை கடலை இருப்பிடமாகக் கொண்டு விட்டன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். அவற்றின் துடுப்புகள் ஒருகாலத்தில் கால்களாக இருந்தன என்கிறார்கள் அவர்கள்!




ஒரு நீலத்திமிங்கிலத்தின் நீளம் சுமார் 37 மீட்டர்! எடை சுமார் 160 டன்கள்! இது 40 யானைகளின் எடை! நாக்கு மட்டுமே 4 டன்கள் (ஒரு யானையின் எடை!) கல்லீரல் 1 டன்! இருதயம் ½ டன்! எலும்புகள் மட்டுமே 90 டன்கள்! வாயின் அகலம் 6½ மீட்டர்! ஒரு நீலத்திமிங்கிலம் 50 ஆண்டுகளுக்குமேல் உயிர் வாழும்!

ஒரு திமிங்கிலத்திலிருந்து 20 பீப்பாய் எண்ணெய்யும் 100 பீப்பாய் கொழுப்பும் கிடைக்கின்றன! ஸ்பர்ம் திமிங்கிலத்தின் வயிற்றிலுள்ள சுரப்பியிலிருந்து 'அம்பர்' என்னும் வாசனைப் பொருள் கிடைக்கிறது. திமிங்கில எண்ணெய்யிலிருந்து கிளிசரின், மெழுகுவர்த்தி, லிப்ஸ்டிக், ஷூ பாலிஷ் போன்ற பொருள்கள் தயாரிக்கிறார்கள். இதன் தோல் செருப்புத் தைக்கப் பயன்படுகிறது!




திமிங்கிலத்தின் மூக்குத் துவாரம் தலையின் மேல் பகுதியில் அமைந்திருக்கிறது. அது நீருக்குள் சுமார் 45 நிமிடங்கள் மூச்சை அடக்கிக் கொண்டிருக்கும். ஒரு தடவைக்குச் சுமார் 140 க. அடி காற்றை இழுக்கிறது!






திமிங்கிலம் மூச்சை வெளிவிடும்போது, நுரையீரல்களுக்குள் தேங்கியிருக்கும் வெப்பக் காற்று நீராவியாகி, நீரூற்று மாதிரிப் பீச்சியடிக்கும். உடலின் வெப்பம் இதனால் குறைகிறது.


இதன் கண்கள் மிகவும் சிறியவை. இவ்வளவு பெரிய உருவத்திற்கு ஒரு குதிரையின் கண் அளவுதான் இருக்கின்றன. உலகிலேயே மிகப்பெரிய விலங்கு திமிங்கிலம்தான். ஆனால் இதற்கு வாசனை அறியும் சக்தி கிடையாது!






பெண் திமிங்கிலம் கருவுற்று 11 மாதங்களில் குட்டிப் போடும். திமிங்கிலக் கன்று சுமார் 7·75 மீட்டர் இருக்கும். 1500 கிலோ. ஒரு யானையைவிடப் பெரிதாக இருக்கும்! திமிங்கிலக் கன்று, தாயின் அடி வயிற்றில் வாயை வைத்துப் பால் குடிக்கும். ஒரு தடவைக்கு 40 லிட்டர் பால்! திமிங்கிலப் பால், பசுவின் பாலைவிட 10 மடங்கு அடர்த்தியானது! கன்றுக்குத் தினமும் 100 கிலோ எடை கூடும்! ஒரே ஆண்டில் தன் தாயின் அளவுக்குப் பெரிதாக வளர்ந்து விடும்!

மிகவும் ஆழத்தில் மூழ்கக்கூடியது ஸ்பர்ம் திமிங்கிலம். 5000 அடி ஆழம் வரை மூழ்கும். ஆபத்துக் காலத்தில் இது எழுப்பும் ஒலி, கடலுக்குள் 11 கி.மீ. தூரம் வரை சென்று, அதன் இனத்தைச் சேர்ந்த மற்ற திமிங்கிலங்களுக்குக் கேட்கும். ஒரு திமிங்கிலம் பிரசவித்தாலும், அல்லது ஆபத்தில் சிக்கிக் கொண்டாலும் மற்ற திமிங்கிலங்கள் உடனே உதவிக்கு வருகின்றன. தங்கள் கூட்டத்தில் ஒன்று இறந்து விட்டால், துக்கம் தாளாமல் சில சமயம் சில திமிங்கிலங்கள் இறந்து விடுவதும் உண்டு!




திமிங்கிலம் வாலால் நீந்துகிறது. வாலைச் சுழற்றி அடித்தால் மிகப் பெரிய படகுகளும் கவிழ்ந்து விடும்!






நார்வால் என்னும் திமிங்கிலத்திற்கு முகத்தில் மிக நீண்ட ஒற்றைக் கொம்பு உண்டு. கொம்பு முறுக்கிக் கொண்டு கூர்மையாக இருக்கும். இந்தக் கொம்பு எதிரிகளைத் தாக்குவதற்குப் பயன்படுகிறது. ஆண் நார்வாலுக்கு மட்டுமே கொம்பு உண்டு. பற்களில் ஒன்றுதான் மேல் உதட்டைக் கிழித்துக் கொண்டு இப்படி கொம்பாக வளர்கிறது. கொம்பு சுமார் 2½ மீட்டர் நீளம் வளரும். நார்வால்கள் ஆர்க்டிக் கடலில் மிகுதியாகக் காணப்படுகின்றன!




தூங்கும் போது
மனிதனைப் போல குறட்டை
விடக்கூடிய விலங்கு
திமிங்கிலம்தான்!



மனிதனுடன் நேசமாக இருப்பது டால்பின் என்னும் திமிங்கிலம். கடலில் மாட்டிக் கொண்டு தத்தளிப்பவர்களை இது பல தடவைகள் கரையில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. மனிதனின் பேச்சைக்கூட இது திருப்பிச் சொல்லுகிறது. மனிதனுக்கு வேடிக்கைக் காட்டும் பிராணி டால்பின்!




திமிங்கிலங்களின் உற்பத்தி எண்ணிக்கை அதிகமாகும்போதெல்லாம் அவற்றுக்குத் தற்கொலை உணர்ச்சி வந்துவிடும்! ஏராளமான திமிங்கிலங்கள், தாமே கரையில் வந்து ஒதுங்கி, வயிறு நசுங்கி, மூச்சுத்திணறி இறந்து விடுகின்றன! இது இயற்கையின் உயிரியல் கட்டுப்பாடு!




பழங்காலத்தில், கடலில் படகுகளில் சென்று கயிறு கட்டிய ஈட்டியை திமிங்கிலத்தின் மேல் வீசி வேட்டையாடினர். இதில் ஆபத்து அதிகம் இருந்தது!

...இப்போது நவீன கப்பலில் சென்று, எந்திரத் துப்பாக்கி போன்ற அமைப்பில் திமிங்கிலங்களைத் தாக்கி வேட்டையாடுகிறார்கள்.



இங்கிலாந்தில் எஸ்ஸெக்ஸ் நகரில் உள்ள ஒரு நீச்சல் குளத்தில் ஒரு திமிங்கிலம் வளர்க்கப் படுகிறது. அதன் மதிப்பு ரூ.37½ லட்சம். தினமும் அதற்கு 30 கிலோ மீன் உணவு. அந்தத் திமிங்கிலத்தை வளர்க்க வருடத்திற்கு ரூ. 5¼ லட்சம் செலவாகிறது!



சீப்பால் பரவுமா பேன்?

பள்ளியிலிருந்து களைப்போடு வீட்டுக்குள் நுழைந்த செல்வி, புத்தகப் பையை இறக்கி விட்டு, சோபாவில் அமர்ந்து கொண்டு, இரு கைகளாலும் தலையைப் பயங்கரமாக அழுத்திச் சொறிந்து கொண்டாள்!

''என்ன ஆச்சு உன் தலைக்கு?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் அம்மா.

''எனக்குத் தலை அரிப்புத் தாங்கலே! பாட்டுக்கிளாசில் தாளம் போடும் போது தாக்குப் பிடிக்க முடியலே! எல்லோரும் சிரிச்சாங்க. எனக்கு என்னவோ போல் இருந்தது,'' என்று சிணுங்கினாள் செல்வி.

''தலையில் பேன் இருக்கும். அதான் அரிக்கிறது, உட்காரு, தலைக்கு எண்ணெய் தடவி வாரிப் பார்க்கிறேன்'' என்று எண்ணெய் புட்டியையும் சீப்பையும் கொண்டு வந்தாள் அம்மா. இருவரும் தரையில் உட்கார்ந்து கொண்டனர். அம்மா, செல்வியின் தலையில் நிறைய எண்ணெய் தடவி, சீப்பால் அழுத்தி வாரினாள்.

''சீப்பால் அழுத்தி வாரப் போறாங்க. முடியைக் கெட்டியாப் புடிச்சுக்கோங்க'' என்று எச்சரிக்கை செய்தது அம்மா பேன். எல்லாப் பேன்களும் தங்கள் கால்களால் செல்வியின் முடியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டன. சீப்பின் முதல் இழுப்புக்கு எல்லாம் தப்பித்துக் கொண்டன!

இழுத்து வாரிய சீப்பை நன்றாகப் பார்த்து விட்டு ''ஒரு பேன் கூட வரலையே!'' என்று தனது ஏமாற்றத்தை வெளியிட்டாள் அம்மா.

''பேன் வந்துதோ இல்லையோ... என் தலை அரிப்புக்கு நீ வார்றது இதமா இருக்கு! இன்னும் அழுத்திவார்'' என்றாள் செல்வி.

''இது இரண்டாவது வாரல். எவ்வளவு கவனமா இருந்து உங்கள் உடம்பு சீப்புல சிக்காம இருக்க முடியுமோ... அந்த அளவுக்குப் பார்த்து உயிரைக் காத்துக்குங்க. வேற நான் என்ன சொல்ல முடியும்?'' என்றது தாய்ப் பேன். எல்லாம் உஷாராயின.

அப்பொழுதுதான், தன் உடலிலிருந்து சுரந்த பிசினைக் கொண்டு, முடிக்காலில் ஈர் எனப்படும் முட்டை

ரேவதி

யை இட்டுக்கொண்டிருந்தது ஒரு பெண் பேன்.

''இந்த அபாய நேரத்தில் யார் முட்டையிடறது? சீப்பு தலையில் இறங்கி நம்மை வாரிக்கிட்டுப் போகப் போகுது...! சீக்கிரம் முடியைக் கெட்டியா புடிச்சுக்கிட்டு, சீப்புக் கண்ணிலிருந்து தப்பிச்சுக்குங்க'' என்று குரல் கொடுத்தது மூத்த பேன்.

காலங்கடந்த எச்சரிக்கையாகப் போய் விட்டது அது! அம்மா, செல்வியின் தலையில் அழுத்தி வாரிய சீப்பின் கண் இடுக்குகளில், முட்டையிட்டுக் கொண்டிருந்த அந்தப் பேன் சிக்கிக் கொண்டு விட்டது!

சீப்பைத் தரையில் தட்டினாள் அம்மா. பேன் விழுந்தது. குடுகுடுவென்று அது ஓடி ஒளிவதற்குள் அம்மா பார்த்து விட்டாள்.

''ஒரு பேன் வந்திருக்கு!''

''எவ்வளவு குண்டா இருக்கும்மா!'' - என்று வியந்தாள் செல்வி.

''உன் இரத்தத்தையெல்லாம் குடிச்சுக் குடிச்சுத்தான் இப்படி குண்டாயிருக்கு! இரு, இதை நசுக்கறேன்.''

''ஐயோ நசுக்காதேம்மா'' என்று அம்மாவைத் தடுத்த செல்வி, ''பேனை நசுக்கினால் அது தானாகவே பெருகிடுமாம்! என் வகுப்புல படிக்கற சிநேகிதி சொன்னாள்'' என்றாள்.

''எவ்வளவு பெரிய பொய்! இருந்தாலும் என் உயிர் தப்பியது, வாழ்க அந்த சிநேகிதி...'' என்று கூறி மகிழ்ந்தது அந்தக் குண்டுப் பேன்.

மகிழ்ச்சி நீடிக்கவில்லை!

''மண்ணெண்ணெயைக் கொஞ்சம் டப்பா மூடில கொண்டு வரேன். அதுல போட்டா பேன் செத்துடுமாம்!'' என்று உள்ளே போனாள் செல்வி.

''சீக்கிரம் கொண்டா. இந்தப் பேனைக்கையில வைச்சுக்கவே அருவருப்பா இருக்கு'' என்றாள் அம்மா.

பிடித்த பேனுக்கு மண்ணெண்ணெயில் முடிவு கட்டி விட்டு, அம்மா மறுபடி வாரத் தொடங்கினாள்.

இந்த முறை இரண்டு சிக்கின! மூன்றாவது முறைக்கு ஐந்து!

''சனியன்! சீப்பின் கண் எவ்வளவு நெருக்கமா இருக்கு! உயிர் பிழைப்பது மறு பிறவிதான் போல இருக்கு'' என்று தலையில் இண்டு இடுக்கில் ஓடி, சீப்புப் படாத இடத்தில் மறைந்து பாச்சா



காட்டியது வயதான பேன்!

முட்டுவது போல் வந்து மோதிக் கொண்டது இன்னொரு பேன்.

''காதுப் பக்கமா போயிட்டா தப்பிக்க வாய்ப்பு அதிகம். அங்கே அதிகமா சீப்பை அழுத்த மாட்டாங்க.''

''அதுக்குத்தான் நானும் உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தேன். நமக்குக் கண்களைப் படைச்ச ஆண்டவன், பார்க்கும் சக்தியைத் தராம ஏமாத்திட்டாரே!''

இதற்குள் அடுத்த வாரலுக்கு சீப்பு தலைக்குள் இறங்கியது. இரண்டு பேன்களும் வகையாகச் சிக்கிக் கொண்டன. அம்மா தரையில் தட்டி அவைகளுக்கு விடை கொடுத்தாள்.

இதற்குள் அங்கே வந்த அண்ணன் ரகு, ''சீப்பைக் கொஞ்சம் கொடும்மா. வாரிக் கொண்டு தரேன்'' என்று சீப்பைத் தானே எடுத்து, தனது முடி நீண்ட 'ஹிப்பி' தலையை வாரிக் கொண்டான்.

இரண்டு பேன்களும் இட்டிருந்த ஈர் முட்டைகள் சீப்பில் இருந்தன. அவை ரகுவின் தலையில் இறங்கிக் கொண்டு, அடுத்த நாளே பொரிந்தன. முட்டையிலிருந்து வெளிவந்த பேன் குஞ்சுகள் தலையில் ஆங்காங்கே கடித்து, இரத்தம் உறிஞ்சி, மூன்று முறை தோலுரித்து பத்து நாட்களுக்குள் தாங்களே முட்டையிடத் தொடங்கின! எண்ணெயும் தடவாது, தண்ணியும் காணாத ஹிப்பித் தலைமுடி! வியர்வைக்குக் கேட்கவா வேண்டும்?

பேன்கள் நூற்றுக்கணக்கில் ஈறு வைத்துப் பெருகின!

இரத்தம் குடிக்க அவை கடித்த கடியைத் தாங்க முடியாது ரகு தலையைச் சொரிந்து கொண்டான். தலை முழுவதும் பரவிக் கிடந்த பேனின் மலம், கடித்திருந்த காய ஓட்டைகளின் வழியாக உடலுக்குள் இறங்கி டைபஸ் என்னும் நோய்க் கிருமிகளை உள்ளே தள்ளியது.

''டாக்டர் எனக்கு உடம்பெல்லாம் அரிக்கிறது. ஜுரம் வந்தது போல் உடம்பு இருக்கிறது. படிப்பதை நினைவு வைத்துக் கொள்ள முடியவில்லை. வயிற்றில் அடிக்கடி வலி,'' என்று டாக்டரிடம் சிகிச்சைக்குச் சென்றான் ரகு.

அவனுடைய தலையைப் பார்த்த டாக்டர் ''உனக்கு வந்துள்ள நோய்கள் எல்லாவற்றிற்கும் காரணம் உன் தலையில் உள்ள பேன் கூட்டமே! இதற்கு மருந்து போட்டுக் காணாது! பேசாமல் திருப்பதிக்குப் போய், முடி கொடுத்து விட்டு வா! பேன் ஒழியும். உனக்கு வந்துள்ள நோய்களும் குணமாகும்'' என்று அறிவுரை வழங்கினார்.

அதோடு, ரகுவின் அம்மாவை



அழைத்து ரகு பயன்படுத்தும் துண்டு, தொப்பி, தலையணையின் உறை ஆகியவைகளை நன்றாகக் கிருமி நாசினி போட்டு சுத்தம் செய்து, வெயிலில் போட்டுப் பிறகு உபயோகிக்கும்படி அறிவுரை கூறினார்.

வேறு வழியின்றி ரகு திருப்பதிக்குக் கிளம்பினான்.

சீப்பால் இழுக்கப்பட்டு, மனிதர்களின் நகத்தால் நசுக்கப்பட்டு அல்லது மண்ணெண்ணெயில் தள்ளப்பட்டு அடையும் முடிவை விட இந்த முடிவு எவ்வளவோ பரவாயில்லை என்று மகிழ்ந்தன ரகுவின் தலையில் வசித்த பேன்கள் கூட்டம்!

அறிவியல் உண்மைகள் :

★ பேன்கள் மெல்லுடலிகள். வியர்வை, அழுக்கு, ஈரப்பசை ஆகியவையே இவை பெருகக் காரணங்கள்.

★ இவைகளில் சிலவற்றுக்குக் கண்கள் இருக்கும். ஆனால் பார்வை கிடையாது!

★ கால்களால் முடியைப் பற்றிக் கொண்டு விட்டால், இவைகளை சீப்பைக் கொண்டு கூட எளிதில் இழுக்க முடியாது! விரல்களால் பிடித்தே இழுக்கலாம்.

★ வாயில் சுரக்கும் ஒரு பிசினைக் கொண்டு இவை இடும் முட்டைகளே ஈறுகள்.

★ குஞ்சுகள் வெளிவந்ததுமே ஊறத் தொடங்கி விடும். இவை வளர இரத்தம் தேவை. பத்து நாட்களுக்குள் இரத்தம் குடித்து மூன்று முறை தோலுரித்து முழு நிலையை அடைகின்றன.

★ பேனை நசுக்கினால் அவை பெருகும் என்பது சரியல்ல.

★ இரத்தம் குடிக்க இவை நம் தலையைக் கடித்து நம்மையறியாமலேயே நுண்ணிய காயங்களை ஏற்படுத்தி வைக்கும்! இவை வெளியேற்றும் மலங்கள் இந்த காயங்களின் வழியாக எளிதில் நம் உடலில் கலந்து எவ்வளவோ வகை நோய்களைப் பரப்புகின்றன.

★ தலைமுடியை சுத்தமாக வைத்துக் கொள்வதுதான் பேன்களை ஒழிக்க ஒரே வழி. மற்றவர்கள், குறிப்பாக பேன் உள்ளவர்கள் பயன்படுத்திய சீப்பு, துடைத்துக் கொண்ட துண்டு, தலையணையைப் பயன்படுத்தக் கூடாது.

★ பேன் உள்ளவர்கள் எல்லோருக்குமே தலை அரிக்கும் என்ற கட்டாயம் இல்லை. இதை அவர்கள் தொந்திரவாகவே எண்ண மாட்டார்கள்! அதனால் இவர்களிடம் பேனால் ஏற்படும் நோய்கள் கண்டிப்பாக இருக்கும்!

★ மனிதனிடம் வாழும் பேன் வேறு வகை. விலங்கு பறவைகளிடம் வாழும் பேன் வேறு வகை.

மேதைக்கு விளங்காதது!

★ விஞ்ஞான மேதையான ஐன்ஸ்டீன் ஒருநாள் கணப்புச் சட்டியின் அருகே அமர்ந்து குளிர்காய்ந்த வண்ணம் நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார்.

திடீரென கணப்புச் சட்டியில் உள்ள நெருப்பு நன்றாகக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. உஷ்ணம் மிகவும் அதிகம் ஆகி விட்டதால் ஐன்ஸ்டீனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.



ஐன்ஸ்டீன் வேலைக்காரியைக் கூக்குரலிட்டு அழைத்தார்.


என்னவோ, ஏதோ என ஓடி வந்தாள் வேலைக்காரி.


''இந்தக் கணப்புச் சட்டியில் தீ எவ்வளவு உக்கிரமாக எரிகிறது பார். என் உடம்பே வெந்து விடும் போல் இருக்கிறது. சீக்கிரம் இதை அப்பால் நகர்த்தி வை'' என்றார் ஐன்ஸ்டீன்.


வேலைக்காரி சிரித்துக் கொண்டே ''இதற்காகவா இப்படிக் கூச்சல் போட்டீர்கள்! நீங்கள் கணப்புச் சட்டியை விட்டு விலகி சற்று அப்பால் நகர்ந்து உட்கார்ந்திருக்கக் கூடாதா?'' என்றாள்.

ஐன்ஸ்டீன் வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டே, ''இந்த அற்ப விஷயம் எனக்குத் தெரியாமல் போய் விட்டதே?'' என்றார்.


- ஏ. ஹரிகிருஷ்ணன், மேலப்பாளையம்.



டாக்டர் என் பையனுக்கு பகல்லே கண் சரியாத் தெரியமாட்டேங்குது!
பையன் என்ன பண்றான்?
ஆந்தையைப் பற்றி ஆராய்ச்சி செய்யறான்!


இனிமே 'கொள்ளு' தின்னமாட்டேன்னு அடம் பிடிக்கறான்.
யார்?
என்னோட 'கொள்ளுப்' பேரன்தான்!
← ஏ.கே. ஆனந்தபிரியா →


"வாடா மலருக்கு" எதிர்ப்பதம் சொல்லு?
"போடா மலர்"
கல்லிடை. கே.எல். குமணன்


வார்த்தைக்கு வார்த்தை அளந்து பேசறாரே யார் அவர்?
தந்தி ஆபீஸ் குமாஸ்தா!
சீர்காழி வி. ரேவதி


ஏன் அந்தப் பூசாரி துள்ளி துள்ளி ஓடி வர்றாரு!
'பக்தி மான்'ஆச்சே



யாருக்கு என்ன கிடைக்கும் ?

✳ உலகம் முழுவதும் கொண்டாடப்படும் பண்டிகை கிறிஸ்துமஸ். ஏசுபிரான் பிறந்த திருநாளான டிசம்பர் 25 ம் தேதிதான் கிறிஸ்துமஸ் விழா. குழந்தைகளுக்கு இந்தத் தினத்தில் கிறிஸ்துமஸ் பரிசுகள் கொடுப்பார்கள். இந்தப் பரிசுகளைக் குழந்தைகளுக்கு அளிப்பவர் ''கிறிஸ்துமஸ் தாத்தா'' என்ற 'சாண்டாக்ளாஸ்'.

✳ இங்கிலாந்தில்தான் சாண்டாக்ளாஸ் தாத்தா நீண்ட வெள்ளைத் தாடி, சிவப்புக் கோட்டு, ரெயிண்டீர் என்ற கலைமான் இழுத்து வரும் பனிச் சறுக்கு வண்டியான ஸ்லெட்ஜில் பரிசு மூட்டை

கிறிஸ்துமஸ் வந்தது!

யுடன் பவனி வருவார். குழந்தைகள் தங்கள் கட்டிலின் கால்மாட்டில் ஸ்டாக்கின்ஸ்களைத் தொங்க விட்டிருப்பார்கள். சாண்டா, புகைப் போக்கி வழியாக இறங்கி வந்து இதற்குள் பரிசுப் பொருள்களைப் போட்டு விட்டுப் போவார் என்பது இங்கிலாந்து குழந்தைகளின் நம்பிக்கை.

✳ பிரஞ்சு நாட்டுக் குழந்தைகள் தங்கள் காலணிகளை வீட்டு வாசல் கதவின் அருகே கிறிஸ்துமஸ் இரவன்று வைத்துவிட்டுப் படுத்துக் கொள்வார்கள். தேவ குமாரனைக் காண அந்த வழியாகப் போகும் மூன்று அரசர்கள் வீட்டு வாசலில் நின்று இந்தக் காலணிகளில் பரிசுப் பொருள்களை நிரப்பி விட்டுப் போவார்கள் என்பது அவர்கள் நம்பிக்கை!

✳ பாபோஷ்கா என்றொரு பாட்டி வருவாள். இந்தப்பாட்டி கிறிஸ்துமஸ் தினத்தன்று மாலை தனது கூடையில் பொம்மைகளை நிரப்பிக் கொண்டு படுத்துத் தூங்கும் ஒவ்வொரு குழந்தையின் அருகிலும் வைத்துவிட்டுப்





போவாள் என்பது ரஷ்ய நாட்டுக் குழந்தைகளின் நம்பிக்கை.

✻ **ஹா**லந்து தேசத்துக் குழந்தைகளுக்கு டிசம்பர் மாதத்தின் ஆரம்பத்திலேயே கிறிஸ்துமஸ் பரிசுகளைக் கொண்டு வந்து கொடுத்து விடுகிறார் ஸெயிண்ட் நிக்கோலஸ். எப்படி? குதிரையின் மீது அமர்ந்தபடி நீக்ரோ வேலைக்காரன் பீட்டர் பின் தொ _ரப் பரிசு மூட்டையோடு வருவார் நிக்கோலஸ். என்கிறார்கள் குழந்தைகள்!

✻ **லா**பெஃபானா என்று ஒரு மந்திரக்கிழவி. ஆனால்,இவள் ரொம்பவும் நல்லவள். கிறிஸ்துமஸ் தினத்துக்கு முந்தின நாள் மாலை,புகை போக்கி வழியே வருவாள். ஒரு மணியைப் பலமாக ஒலிக்கச் செய்வாள். இந்த மணியோசைக்குக் கிறிஸ்துமஸ் பரிசு வருகிறது என்று பொருள். இத்தாலி நாட்டில் இப்படி நம்பிக்கை.

✻ **ந**வீன இத்தாலியில் எப்படித் தெரியுமா? அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரத்தில் பரிசுப் பொருட்கள்கட்டித் தொங்கவிட்டிருக்கும். பொதுவாக எங்குமே இதுதான் வழக்கம். ஆனால், இத்தாலியில் 'யூல்' என்ற ஒரு வகை மரத்தின் அடிப்பாகத்தை வீட்டுக் கூடத்தில் கொண்டு வந்து அலங்கரித்து வைத்திருப்பார்கள். அதன் கீழே பரிசுப் பொட்டலங்கள் குவிக்கப்பட்டிருக்கும். குழந்தைகளின் கண்களைக் கட்டிவிடுவார்கள். அவர்கள் அந்த யூல் மரத்தின் அருகே கட்டுண்ட கண்களுடன் போய் ஒரு பாட்டுப் பாட வேண்டும். உடனே அவர்களின் கண்கட்டு அவிழ்க்கப்படும். அந்தக் குழந்தை பரிசுக் குவியலிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்துக் கொண்டு நகரும். அந்த குழந்தை ஆவலோடு அந்தப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்துக் கொண் டிருக்கும் போது அடுத்துவரும் குழந் தைகள் பரிசுக்காக யூல் மரத்தருகே பாடிக் கொண்டிருப்பார்கள்!

✻ **ஆ**ஸ்திரேலியாவில் கிறிஸ்துமஸ் விழா மாறுபட்டது. மற்ற நாடுகளிலெல்லாம் இந்தச் சமயத்தில் பனி மூடிக் கிடக்கும். ஆகவே அதை ''வொயிட்

கிறிஸ்துமஸ்'' என்பார்கள். ஆனால் ஆஸ்திரேலியாவிலோ இது அவர்களுக்கு 'மிட்சம்மர்' வேனில் காலத்தின் இடைப்பகுதி. ஆகவே, கிறிஸ்துமஸ் விழாவை வெயில் குளியல் செய்தும் சுற்றுலா போயும் உல்லாசமாகக் கழிக்கிறார்கள்.

✳ **ஸ்**காண்டிநேவியாவில் பண்டிகையன்று பறவைகளுக்கு விருந்தளிக்கிறார்கள். கோதுமைக் கதிர்களைத் தூண் போலக் கட்டி வயல் வெளியில் வைத்து விடுகிறார்கள். இதன் கீழேயும் கோதுமைத்தானிய மணிகளைப் பரப்பியிருப்பார்கள். பறவைகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான்!


✳ **அ**து சரி, இப்படிக் குழந்தைகளுக்குப் பரிசுப் பொருள் கொண்டு வந்து தரும் சாண்டாகிளாஸ் களைத்துப் போய் விட மாட்டாரா? எத்தனை குழந்தைகள், எத்தனை பரிசுகள்!, எவ்வளவு பெரிய மூட்டை? ஒவ்வொரு வீடாகப் போய் வரும் அவருக்குப் பசி, தாகம் இருக்காதா? இந்தக் கவலை டென்மார்க் குழந்தைகளுக்கு ஏற்பட்டது. தங்களுக்குப் பரிசு தரும் தாத்தாவின் பசிக்கு ஒரு கிண்ணத்தில் பாலும் ஒரு தட்டில் அரிசிச் சாதமும் வைப்பார்கள்!


✳ **ஹா**லந்து தேசத்துக் குழந்தைகள் இன்னும் ஒரு படி மேலே போய் விடுகிறார்கள். ஸான்டாவை இழுத்து வரும் ரெயின்டீர் கலைமானுக்கு உணவாகக் கேரட்டுகளையும் வைக்கோலையும் வைத்து வரவேற்கிறார்கள்.

✳ **அ**யர்லாந்தில் குழந்தை ஏசுவின் வருகைக்கு ஒளிகாட்ட, வீட்டு ஜன்னல்களில் மெழுகுவர்த்தி ஏற்றும் பழக்கம் இருக்கிறது.

✳ **ஆ**ண்டு தோறும், கிறிஸ்துமஸ் தினத்தன்று, கிறிஸ்துமஸ் மரத்தை அமைக்கும் பழக்கத்தை இளவரசர் ஆல்பர்ட் 1840 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார். அப்பழக்கம் இன்னும் தொடர்கிறது.

- ஆர். ஜெயலெட்சுமி,
திருநெல்வேலி - 6.





பிருந்தாவனக் கவியரங்கம்






சின்னப் பாப்பா!


சின்னப் பாப்பா அழுவுது
சிறிய பொம்மை கேட்குது!
செண்டு போன்ற கண்களால்
சிமிட்டி சிமிட்டிப் பார்க்குது!

குனிந்தால் மூக்கைப் பிடிக்குது!
கையைக் காலை ஆட்டுது!
கோணி அழகு காட்டுது!
கோபம் வந்தால் அழுகுது!

விளக்கை விழித்துப் பார்க்குது!
விடிந்த பிறகும் தூங்குது!
தலையைப் பிடித்துக் கொள்ளுது
தானே சிரித்துக் கொள்ளுது!

- எஸ். கவிமுருகு.






அக்கா!


அப்பா எங்கள் அப்பாவாம்
அன்பாய் முத்தம் தருவாராம்!
தப்பாய் எதையும் செய்தாலே
திருத்திக் கொள்ளச் செய்வாராம்!

அம்மா எங்கள் அம்மாவாம்!
அப்பா மதிக்கும் அம்மாவாம்!
கட்டித் தனங்கள் செய்தாலும்
சிரித்தே மகிழும் அம்மாவாம்!

அக்கா அருமை அக்காவாம்!
என்னை இடுப்பில் வைப்பாளாம்
கெக்கே பிக்கே என்றாலும்
கொஞ்சிக் கொஞ்சி மகிழ்வாளாம்!

- எஸ். கார்த்திகேயன்.





எனக்கா

நாட்டின் அரச குமாரனுக்கு இன்னும் சில நாட்களில் பிறந்த நாள் வர இருந்தது. அது பதினெட்டாவது பிறந்த நாள் என்பதால் அதைச் சிறப்பாகக் கொண்டாட நினைத்தார் மகாராணியார். உடனே'ய அரசகுமாரனுக்கு இளவரசனாகப் பட்டம் சூட்ட விரும்பினார்.

அந்த நிகழ்ச்சிக்காக சோதிடர்களைப் பார்த்தபோது, ஒரு முதிய சோதிடர் தயங்கியபடி மகாராணியாரிடம் மெல்லச் சொன்னார் : ''தாயே. சொல்லக் கூசுகிறது. தங்களுக்கு வருத்தம் தரும் செய்தி'' என்று நிறுத்தினார்.

''பரவாயில்லை, சொல்லுங்கள்'' என்றார் மகாராணியார்.

''அம்மணி. தங்கள் குமாரர்; எங்கள் இளவரசர், தமது பதினெட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுவாரா என்பதே சந்தேகமாக உள்ளது! அவரது வாழ்க்கையில் இப்போது ஒரு பெரிய கண்டம் இருக்கிறது! ஆபத்து! நான் இப்படி வெளிப்படையாகக் கூறுகிறேனே என்று என் மீது வருத்தப்படாதீர்கள்'' என்று பணிந்தபடி கூறினார் முதிய ஜோதிடர்.

மகாராணியார் பயந்து, பிரமித்து, கவலையுடன் சோர்ந்து விட்டார். மீளாக் கவலையோடு திரும்பினார்.

''அம்மா. ஏன் இப்படி இருக்கிறீர்கள்?'' என்று அரசகுமாரன்திரும்பத் திரும்ப மகாராணியாரை விசாரித்தான்.

முதலில் ஒன்றும் சொல்ல விரும்பாத மகாராணியார் மகனுக்கும் தெரிந்திருப்பது நல்லதுதான் என்ற முடிவுக்கு வந்தார். துக்கம் அடைக்கும் குரலில், ''மகனே. திறமையான ஜோதிடர்கள் உனக்கு ஆபத்து வர இருக்கிறது என்கிறார்களே! என்ன செய்வேன்!'' என்று புலம்பினார்.


அரசகுமாரன் அறிவாளி. சிந்தித்தான். அருமைத் தாயிடம் சொன்னான் : ''அம்மா. எனக்கு வரும் ஆபத்து

தமிழில்: தம்பி சீனிவாசன்

தெய்வச் செயல் என்றால் யாரால் என்ன செய்ய முடியும்? எனக்கு நெடுநாளாகவே பல நாடுகளையும் நகரங்களையும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று தீராத ஆசை. இப்போது எனக்கு ஆபத்து ஏற்படுவதற்கு முன் அந்த ஆசையையாவது நிறைவேற்றிக் கொள்கிறேன் அனுமதி கொடுங்கள். பல நகரங்களைக் கண்டு களிக்கப் போகிறேன். எனக்கு ஆபத்து என்றால் அது தங்கள் கண் எதிரே நேர வேண்டாம். கடவுள் அருள் இருந்து நான் பிழைத்து வந்தால் சந்திக்கிறேன்'' என்று சொல்லி, மகாராணியார் எவ்வளவு தடுத்தும் கேளாமல் பிடிவாதமாகப் புறப்பட்டான்.

ஓர் உயர்ந்த சாதிக் குதிரை மீது ஏறி அமர்ந்து பல நாடுகளையும் சுற்றி வந்தான் அரச குமாரன். பல நாட்டுக் காட்சிகளையும் கட்டிடங்களையும் விநோதமான மக்களையும் கண்டு மகிழ்ந்தான். ஒருநாள் ஒரு சிற்றூரில் ஒரு தேவாலயத்துக்குச் சென்று வழிபட்டான். ஆலயத்தைச் சுற்றி வரும் போது அங்கே எல்லாப் பரிவார தேவதைச் சிற்பங்களுக்கும் புது வண்ணமிட்டு அழகுபடுத்தியிருப்பதைக் கண்டான். எங்கே பார்த்தாலும் அழகாக இருந்தது. ஆனால், ஒரே ஒரு சிற்பத்துக்கு மட்டும் வண்ணம் இல்லை. பொலிவு இழந்து கிடந்த அந்தச் சிற்பத்தின் அருகே வந்த

கண்டம்?



பிரேசில் நாட்டுக் கதை

போது அதன் மீது தூசியும் அழுக்கும் மண்டிக் கிடந்ததைக் கண்டான் அரச குமாரன்.

அது சாத்தானின் சிற்பம். அரச குமாரன் தூசு படிந்து கிடந்த சாத்தானின் சிற்பத்தைப் பார்த்தபடி சிறிது நேரம் நின்றான். புது வண்ணம் பூசியவர்கள் அதை மட்டும் ஒதுக்கி வைத்துப் புறக் கணித்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. 'கோவிலில் வைக்கும் அளவுக்கு எப் பொழுது அது மதிப்புப் பெற்று விட் டதோ, அதை எல்லாச் சிற்பங்களையும் போல் சிறப்பிக்க வேண்டியதுதானே நியாயம்?' என்று அவன் வித்தியாசமாக எண்ணினான். அதையும் தூசு தட்டி அழகுபடுத்த விரும்பினான்.

நேரே ஆலய அதிகாரிகளிடம் சென் றான்.

''உங்கள் ஆலயத்தில் சமீபத்தில் எல்லாச் சிலைகளையும் நீங்கள் அழகு படுத்தியிருக்கிறீர்கள். ஆனால்,சாத்தான் சிலையைக் கவனிக்கவில்லை. தயவு செய்து அதையும் தூசு தட்டி புதுமெருகு ஏற்றி வையுங்கள். அதற்கு என்ன செலவோ அதை நான் ஏற்கிறேன்'' என்று சொல்லி ஒரு தொகையைக் கொடுத்து விட்டு அடுத்த ஊருக்குச் சென்றான்.

அடுத்த ஊரில் யாரையும் தெரியாத அந்த அரசகுமாரன், ஒரு சத்திரத்திலே இரவு தங்கினான். அவன் அன்று இரவு தன்னிடம் இருந்த பணத்தை கவனமாக எண்ணி வைக்கும் போது,கதவு இடை வெளி வழியே சத்திரக்காரன் கவனித்து விட்டான். அந்தப் பணத்தைக் கவர்ந்து கொள்ள அவன் ஒரு திட்டம் போட் டான்.

அரசகுமாரன் இருந்த அறையை வெளிப்புறம் பூட்டி விட்டு, சத்திரக் காரன் நகரத்து அதிகாரியிடம் சென் றான். ''ஐயா என் சத்திரத்துக்கு வந்து தங்கி என்னிடமே களவாடி விட்ட ஒரு



பலே திருடனைப் பிடித்து விட்டேன். வந்து பாருங்கள். அவனைக் கைது செய்து, பணத்தை மீட்டு எனக்குத் தாருங்கள்'' என்று வேண்டிக் கொண் டான் சத்திரக்காரன்.

நகர அதிகாரி காவலர்களை அனுப்பி அரசகுமாரனைக் கைது செய்து விட்டார். அரசகுமாரன் தான் திருட வில்லை, அந்தப் பணம் தன்னுடையதே என்று எவ்வளவு கூறியும் பயனில்லை. அதிகாரி அவன் கூறியதைக் கேட்கக் கூட இல்லை. தான் ஒரு அரசகுமாரன் என் பதை அரசகுமாரனும் சொல்லவில்லை.

அன்று இரவு அரசகுமாரனைச் சிறையில் அடைத்து, மறுநாள் விசா ரணை என்றார்கள்.

அதே இரவு,இளவரசன் முன்பு தங்கி யிருந்த ஊரின் தேவாலயத்திலே யாரும் கவனிக்கப்படாமல் தூசு படிந்து இருந்த சாத்தான் சிலை இளவரசனின் செலவில் புதுப் பொலிவு பெற்றது. தன்னை ஒருமுறை பெருமையுடன் பார்த்துக் கொண்டது.

அருகே இருந்த ஒரு தேவதூதச் சிலை, ''சாத்தான் இப்போது நீ எவ் வளவு அழகாக இருக்கிறாய் தெரி யுமா?'' என்று கேட்டது.

''வெகு அழகாக இருக்கிறேன். அதோடு மகிழ்ச்சியாகவும் இருக் கிறேன்'' என்றது சாத்தான்.

''உண்மைதான்! புதுப் பொலி வோடு அழகாகத்தான் இருக்கிறாய். ஆனால், யாரால் நீ இப்படிப் பொலிவு பெற்றாய் என்பதாவது உனக்குத் தெரியுமா?''

''தெரியாமல் என்ன? அன்று தேவா லயத்திற்குள் வந்து என் முன் நின்று; எனது நிலையைக் கண்டு மனமிரங்கி தனது செலவில் என்னைப் புதுப்பித்துப் பொலிய வைத்த அந்த அதிசய அரச குமாரன்தானே? ஆகா! அவனுக்கு என்ன களையான முகம்!''

''ஆமாம். அவன்தான் காரணம். ஆனால்,அந்த அதிசய அரசகுமாரன் இப் போது ஓர் ஆபத்தில் சிக்கிக் கொண் டிருக்கிறான் தெரியுமா? அடுத்த ஊரில் ஒரு சத்திரக்காரன் திறமையாகப் பொய் வழக்குப் போட்டு அந்த அரசகுமார னைச் சிறையில் அடைத்து விட்டான். நாளை விசாரணை, தெரியுமா?''

இதைக் கேட்டதும் சாத்தான் கோப மாய்க் குதித்து எழுந்தது. நேரே அடுத்த



ஊருக்குப் பறந்தது.

காலை நேரம். நீதிமன்றத்திலே வழக்கு விசாரணைக்கு வந்தது. சத்திரக் காரன் மிகவும் மகிழ்ச்சியோடு, பேராசையோடு, தனக்கு உரிமை யில்லாத பணத்தை அடையத் தீர்ப்பை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந் தான். நீதிபதி வந்து அமர்ந்ததும் விசா ரணை தொடங்கியது.

''இந்த இளைஞன் குற்றவாளி தான்'' என்றார் நீதிபதி.

வேறு எதுவுமே விசாரிக்கவும் இல்லை! அரசகுமாரனிடம் கேட்கவும் இல்லை. அது மட்டுமா? தண்டனையை யும் உடனே விதித்தார் அந்த நீதிபதி!

''இந்த நாட்டு வழக்கப்படி, இவ் வளவு பணத்தைத் திருடியதற்குத் தண் டனையாக இவனுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்'' என்ற தீர்ப்புச் சொல்லி விட்டார்.

காவலர்கள் அரசு குமாரனைப் பிடித்து அழைத்துப் போக வந்தனர்.

சத்திரக்காரன் பேராசையுடன் மகிழ்ச்சியாக இரண்டடி முன்னேறி னான்.

அந்த நேரத்தில் -

கண்ணுக்குத் தெரியாத ஓர் உருவம் கூரையிலிருந்து குதித்து சத்திரக்கார னைச் சுழற்றி அவன் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்துக் குலுக்கி அவ னைப் பந்து போல் மேலே தூக்கிப் போட்டது!

அது மட்டுமா?

''ஒப்புக் கொள்ளடா! குற்றவாளி நான்தான் என்று நீதிபதியிடம் ஒப்புக் கொள்ளடா! இல்லே, நடப்பதே வேறு... உம்...'' என்று அவன் காதில் கட்டளையிட்டது அந்த உருவம்.

சத்திரக்காரன் பயந்து போய் விட் டான். நடுங்கினான். ''என்னை விட்டு

விடு! விட்டு விடு! உண்மையைச் சொல்லி விடுகிறேன்'' என்று கதறினான்.

நீதிபதிக்கும் மற்றவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை.

சத்திரக்காரன் தரையில் கீழே மண்டியிட்டு அமர்ந்து, ''நீதிபதி அவர்களே! இந்த இளைஞன் குற்றமற்றவன். அப்பாவி. அவன் வைத்திருந்த பணத்துக்கு ஆசைப்பட்டு நான்தான் அவனைத் திருடன் என்று பொய்க் குற்றம் சாட்டினேன். பொய் வழக்குப் போட்டேன். இளைஞனை விடுதலை செய்யுங்கள். தவறு செய்தவன் நான்தான்! என்னை மன்னிக்க வேண்டும். கண்ணுக்குத் தெரியாத என்னை அடித்துப் பந்தாடும் சக்தியும் என்னை மன்னித்து விட்டு விட வேண்டும்'' என்று அழுது புலம்பினான்!

நீதிபதி அதற்குப் பிறகு முழு விவரங்களையும் கேட்டறிந்தார்.

அவருக்கு அடங்காத கோபம் வந்தது. ''படுபாவி. உன்னால் நான் ஒரு நிரபராதிக்குத் தண்டனை தர இருந்தேனே? நல்ல காலம்! பெரிய பாவம் செய்வதிலிருந்து கடவுள் என்னைக் காப்பாற்றினார்!'' என்று நொந்து கொண்டு, அரசகுமாரனை விடுவித்து, சத்திரக்காரனுக்குக் கடும் தண்டனை விதித்தார்.

விடுதலையான அரசகுமாரனுக்கு ஒன்றும் புரியவில்லை. தான் விடுதலை அடையக் காரணமானவர் யார் என்று தெரியவில்லை. குழப்பமான நிலையில் அவன் பயணத்தைத் தொடர்ந்தான்.

சில மாதங்களுக்குப் பின் அரசகுமாரன் அந்தப் பழைய சிற்றூர் அருகேயுள்ள பேதவாலயத்தின் பக்கமாகக் குதிரை மீது செல்ல நேர்ந்தது. திடீரென்று இன்னொரு குதிரை மீது ஒருவன் இளவரசனின் பக்கமாக வந்தான். வலியப் பேச்சுக் கொடுத்தான். அரசகுமாரன் தன் கதையை அவனிடம் சொன்னான். எதையும் மறைக்கவில்லை.

''அது யாரென்பதை அறிந்தால் என்ன செய்வாய்?''

''எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வேன்.''

''அப்படியா! நன்றியை எனக்குக் கூறு!'' என்று தன் சுய உருவை எடுத்துக் கொண்டு சாத்தான் அரசகுமாரனின் முன் நின்றது.

அரசகுமாரன் தி கை த் து ப் போனான்!

''நான்தான் சாத்தான். எல்லாரும் என்னை ஒதுக்கிய போது எங்கிருந்தோ நீ வந்தாய். எனது பொலிவிழந்த உருவத்தைப் பார்த்து வருந்தி உன் செலவில் எனக்கு வண்ணப் பொலிவு தந்தாய். என் அழுக்கைக் களைந்தாய். உனக்கு ஏதாவது உதவ நான் துடித்தேன். வாய்ப்புக் கிடைத்தது. உதவினேன். மகிழ்ச்சியோடு ஊர் திரும்பு'' என்றது சாத்தான்.

''நான் திரும்புவது என்பது நடக்காத காரியம். எனக்கு ஒரு கண்டம் இருக்கிறதாம். என் தாயார் எதிரே அந்த கண்டம் ஏற்பட வேண்டாம் என்றே ஊரை விட்டு வந்திருக்கிறேன்'' என்று அரச குமாரன் சொன்னதும் சாத்தான் சிரித்தது.

''நல்லவனே, கேள்! உன் பதினெட்டாவது பிறந்த நாளில் உனக்கு நேர இருந்ததுதான் அந்தக் கண்டம். அதை உன் நல்ல செயலால் என் உதவி கொண்டு ஏற்கனவே நீ வென்று விட்டாய்! அந்தக் கண்டத்தை அநியாயக்காரனான சத்திரக்காரனின் தலைக்கு நான் மாற்றி விட்டேனே! இனிமே உனக்கு ஏது கண்டம்?'' என்றது சாத்தான்.


நம்ப முடியாத வியப்போடு அரசகுமாரன் சாத்தானுக்கு நன்றி கூறித் தனது நாட்டுக்குத் திரும்பினான். நீண்ட காலம் நல்ல மன்னனாக அரசாண்டான்.

''வேஸ்ட்டா கிடக்கிற புத்தகத்தை எல்லாம் கடையிலே போடுடான்னு என் மகனிடம் சொன்னது தப்பாப் போச்சு!''

''ஏன், என்ன செய்தான்?''


''பத்திரிகைகளோட அவன் படிச்சுக்கிட்டிருக்கிற ஸ்கூல் புத்தகங்களையும் சேர்த்துப் போட்டுட்டான்!''

- கபிஸ்தலம் ஏ. கே. ஆனந்தப்ரியா.




தங்கக் கோடாலி

கதை: ஆனந்தி சித்திரம்: லலிதா—






இது பழ மரம். வெட்டிட்டா குருவியும் கிளியும் பழம் சாப்-பட முடியாதே...
கடைசியில் ஏரிக்கரையில்...
ஆ...! பட்டுப் போன மரம்... வெட்டலாம்!
வெட்ட ஆரம்பித்த போது...
அட! பொந்துல மரங் கொத்திக் குஞ்சுங்க! சரி, சரி, பயப்படாதே! வெட்டலை!
ஏரிக்கரையில் இன்னொரு மரத்தின் மீது ஏறிய பழனி—
இது ஏற்கெனவே ஒடிஞ்சு தொங்குற கிளைதான... வெட்-டிக்கலாம்!
அப்போது கோடாலி கை நழுவ...
ஐயையோ! போச்சே!



ஒரே ஒரு கோடாலி தான் இருக்கு... அதுவும் தொலஞ்சிட்டா பிழைப்பு என்ன ஆகிறது...?
பழனி ஏரியில் குதித்து—
நீருக்கடியில் கோடாலியைத் தேடினான்...
ஆ... அதோ இருக்கு...
கோடாலியுடன் கரை ஏறினான்...
சே! இது என் கோடாலி இல்லே... வெள்ளிக் கோடாலி மாதிரி இருக்கு ...இதால எப்படி மரம் வெட்டறது...?
கோடாலியை மீண்டும் தண்ணீரில் வீசிவிட்டு...
மறுபடியும் இறங்கி தேடறேன்...!


அதோ !
மீண்டும் கரை ஏற...
பூ! இது தங்கக் கோடாலி! இதால என்ன பயன் ?
தங்கக் கோடாலியையும் மறுபடி ஏரியில் வீசிவிட்டு ஏரிக் கரையில்...
நான் என்ன பண்ணு-வேன் ? எப்படி பிழைப்பு நடத்துவேன் ?
அப்போது ஒரு தேவதை தோன்ற—
ஆ! யாரு நீங்க?
இந்த ஏரியின் தேவதை. உன்னைச் சோதித்தேன்.
தண்ணிக்குள்ளேயா இருந்தீங்க ? நல்லவேளை நான் கோடா-லியை வீசினப்ப அடிபடாம தப்பினீங்களே ?
நீ பேராசைக்காரனா என்று பரீட்சை செய்தேன்...!



தங்க, வெள்ளி கோ-டாலிங்க எனக்கு எதுக்குங்க? மரம் வெட்ட உதவுமா? என் இரும்புக் கோடாலியைக் கொடுத்தா உழைச்சு சாப்பிடலாம்...
பழனி! உனக்கு ரொம்ப நல்ல மனசு... பச்சை மரங்களுக்கும், பறவை, வண்டுகளுக்கும் கூட இரக்கப் படுகிறாய்...
ஆமா, நீங்க எப்படி தண்ணிக்குள்ள அவ்வளவு நேரம் இருந்தீங்க?
நான் நீரில் வாழும் சக்தி படைத்தவள்.
இந்தா, உன் இரும்புக் கோடாலி... தங்க, வெள்ளி கோடாலிகளையும் பெற்றுக் கொள்!
பாஞ்சாலியிடம் கொடு!
இது போதுங்க; அதுங்க திண்டம்.
பறவைகள், தேனீக்கள் வந்து சேர...
உனக்கு தினம் ஒரு கூடை பழங்களும், ஒரு ஜாடி தேனும் தர இவை விரும்புகின்றன... வந்து போய்க் கொண்டிரு.


பழனி, வீடு திரும்பி...
பாஞ்சாலி! உனக்காகப் பழம், தேன் கொண்டு வந்திருக்கேன், தங்கம், வெள்ளி கூட.
அட...!
நடந்ததைப் பழனி கூற...
தினமும் தேனும், பழமும் கொண்டாந்துடு. வித்து காசாக்கலாம்!
ஒரு நாள் பக்கத்து வீட்டு வேலாயி...
பாஞ்சாலி! உன் புருசன் தினம் எங்க போய் வாராரு? நீயும் இப்ப -ல்லாம் கடன் கேட்கிறதில்லே...
எங்களுக்குத் தான் தெய்வம் தங்கமும், வெள்ளியும், கொடுத்-திருக்கே... பழமும் தேனும் வியா-பாரம் பண்ணறோம்...
அதை குறையாகப் புரிந்து கொண்ட வேலாயி, தன் கணவனிடம் —
அவங்களுக்குக் கிடைச்சது, நமக்கு மட்டும் கிடைக்காதா...


நீ காட்டுக்குப் போய், ஏரிக்கரை-யில் மரம் வெட்டி, கோடாலியைத் தண்ணீரில் போட்டுடு.
அப்புறம்...?
தேவதை வரும். என்னுது தங்கக் கோடாலின்னு சொல்லு. அவ்வளவு தான்!
மாடன் பேராசையுடன் ஒரு மரத்தை வெட்டிச் சாய்க்கிறான்.
மரம் வெட்டியாச்சு... கோடாலியை எறிஞ்சாச்சு...
எவ்வளவு நேரம் காத்திருக்கிறது? தேவதை வரலையே... இரவல் கோடாலி வேறு... எனக்கு நீச்சலும் தெரியாது...
அப்போது...
மாடா! என்ன வேணும் உனக்கு?


தேவதையம்மா! தங்கக் கோடாலியும், வெள்ளிக் கோடாலியும் வேணும்!
மாடா! சும்மா எதுவும் கிடைக்காது. உழைத்துப் பிழைக்கக் கற்றுக் கொள். மரம், மிருகம், பறவை போன்ற எல்லா உயிர்களி-டமும் அன்பு செலுத்து!
ஐயோ! அப்படீன்னா என் இரும்புக் கோடாலியையாவது திருப்பிக் கொடுத்துடு! வேம்புலியிடம் இரவல் வாங்கினது. சண்டைக்கு வருவான்.
அதோ இருக்கிறது! எடுத்துக் கொண்டு போ!
வரேங்க!
மாடன் வீடு திரும்பினான்...
தேவதை சொன்னது சரி. நல்லா உழைச்சுப் பாடு பட்டால் கடவுள் அருளும் கிடைக்கும்!

முற்றும்



கம்பு சாமி!

மரோ குலத்து மகாராஜா கந்தவர்மன் நல்லவர் தான். ஆனால் திடீரென்று அவருக்கு விபரீதமான சில யோசனைகள் வரும். அதை நிறைவேற்றினால் தான் திருப்தி வரும். அவரது யோசனை சில சமயம் நல்லதாக இருக்கும். பல சமயங்களிலோ கொடுமையாக இருக்கும்.

நல்லவேளையாக அவருடைய பிரதான மந்திரி மதியூகி மிகவும் திறமைசாலி. என்னமாவது செய்து மன்னனை அமைதிப் படுத்திவிடுவார். அதே சமயம், மக்களுக்கும் கேடு வராமல் பார்த்துக் கொள்வார்.

அப்படித்தான் ஒரு சமயம் மகாராஜாவுக்கு ஒரு வினோத யோசனை வந்தது. மந்திரியைக் கூப்பிட்டார். ''மதியூகி! நமது நாட்டு இளைஞர்கள் ரொம்பவும் கெட்டுப்போய் விட்டார்கள் என்று தகவல் வந்துள்ளது. அவர்களை எல்லாம் நாளையே கைது செய்து சிறையில் அடையுங்கள். யாரையும் விடாதீர்கள்'' என்று கட்டளையிட்டார்.

அதிர்ச்சி அடைந்தார் மந்திரி,

''அது எப்படி மகாராஜா? யாரோ ஒரு சிலர் தவறு செய்திருக்கலாம். அதற்காக எல்லோரையுமா - கைது செய்வது?''

ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ''சொன்னதைச் செய்யும்,'' என்று கர்ஜித்தார்.

''அப்படியே ஆகட்டும் மகாராஜா. ஆனால், காரணமில்லாமல் அவர்களை எப்படிக் கைது செய்வது என்றுதான் யோசிக்கிறேன்,'' என்றார் மந்திரி.

''ஓஹோ! அதற்காகவா யோசிக்கிறீர்? ரொம்ப சுலபம். இந்தாரும்'' என்று ஒரு குச்சியை எடுத்து மந்திரியின் கையில் கொடுத்தார். ''இதை இந்த

நகரத்தின் பிரதான சாலை நடுவே மண்ணில் ஊன்றி வையும். அந்த வழியே போகும் இளைஞர்கள் அதைப் பிடுங்கினால் உடனே கைது செய்து விடும்.''

''மகாராஜா! பி டு ங் கா ம ல் போனால்....''

''தெரிந்தோ, தெரியாமலோ, தட்டி விட்டு விட்டுப் போனாலும் கைது செய்து விடும். தொட்டாலே கைது செய்யச் சொல்.''

''அப்படியே ஆகட்டும் மகாராஜா. ஆனால், பார்த்துவிட்டு சும்மா போகிறவர்களை எப்படி...!'' மந்திரி இழுத்தார்.

''அதுவா. ராஜா குச்சியை தொடாமலே போறீயேன்னு கைது செய்துட வேண்டியதுதான்.''

''சரி. மகாராஜா. அப்புறம் பார்க்காமலே போறவங்களையெல்லாம் விட்டுடலாமில்லே....?''

''அது எப்படி? ராஜா நட்ட குச்சியை பாக்காம அலட்சியமா போகலாம்னு உடனே கைது செய்துடு!''

கையைப்பிசைந்து கொண்டு, 'சரி மகாராஜா" என்று வெளியே வந்தார் மந்திரி.

மகாராஜாவின் கட்டளையையும் நிறைவேற்றியாக வேண்டும். அந்த நாட்டு இளைஞர்களையும் காப்பாற்ற வேண்டும். என்ன செய்வது? மதியூகி அமைச்சர் யோசித்து ஒரு திட்டம் போட்டார்.

அன்று இரவு சாமியார் வேடமணிந்து புறப்பட்டார் மந்திரி. கோயிலிலிருந்து வெளியே வந்த பக்தர் கூட்டத்தை நெருங்கி, ''பக்தர்களே! நாளை காலை நமது பிரதான வீதியில் கம்புசாமி அவதரிக்கப் போகிறார். அவர் மேல் சூரிய ஒளி படுவதற்குள் அவருக்கு ஒரு கோயில் கட்டியாக வேண்டும். இல்லையென் றால் மன்னர் இறந்து விடுவார். அதுமட்டுமல்ல, நாடே அழிந்து விடும்! எனவே, நாளை விடியுமுன் வந்து விடுங்கள்,'' என்று சொல்லிவிட்டு நடந்தார்.

மறுநாள் - விடியற்காலை அமைச்சர் கம்பு நட்டதுதான் தாமதம். பக்தர்கள் கூட்டம் கொஞ்ச நேரத்தில் கோயிலைக் கட்டி கம்பே தெரியாதவாறு மறைத்து விட்டது!

மாலை மகாராஜா மந்திரியை விசாரித்தார், ''எல்லா இளைஞர்களையும் கைது செய்து விட்டீர் அல்லவா?''

''முடிய வில்லை மகாராஜா! நான் குச்சியை நடுவதைப் பார்த்து எல்லோரும் 'ராஜா கொடுத்த குச்சியா?' என்று பயபக்தியோடு வெளியே தெரியாதபடி கோயிலைக் கட்டி விட்டா ர்கள் மகாராஜா,'' என்று ராஜாவைப் பார்த்தார் மந்திரி.

''மக்களுக்கு என் மேல் அவ்வளவு பக்தியா? இப்படிப்பட்ட மக்களின் பிள்ளைகளையா கைது செய்யச் சொன்னேன்! வேண்டாம் மந்திரி. யாரையும் கைது செய்யவேண்டாம்,'' என்றார் மகாராஜா.

மந்திரி விரும்பியதும் இதைத் தானே?

என். வெற்றிச் செல்வி,
விழுப்புரம்.

பிறந்தநாள் பரிசு


★ எலிசபெத் அரசியின் மூத்த மகன் பட்டத்து இளவரசர் சார்லஸ். இளவரசர் பிறந்த அதே தினத்தன்று பிறந்த ஒரு குழந்தைக்கு உதவி கிடைத்துள்ளது.

இக் குழந்தையின் பெற்றோர் ஏழைகள். இவர்கள் அரசியாருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்.

''அரசியார் அவர்கட்கு, தங்கள் மகன் பிறந்த தினத்தன்றுதான் எங்கள் குழந்தையும் பிறந்தது. இக் குழந்தைக்கு உணவு கூட இல்லை. வசிக்க இடம் கூட இல்லை. எத்தனை அதிசயம் பாருங்கள் இரு குழந்தைகளுக்கும்!''

கடிதம், அரசியாரின் மனத்தை உருக்கியது. அதன் காரணமாக இளவரசர் பிறந்த நாள் பரிசாக ஒரு புது வீடு கிடைத்தது அவர்களுக்கும்.

- லட்சுமிசிவம், சென்னை.



மலைக்கோட்டை மர்மம்

7. முத்தையாவின் கதை

ஆனந்தும், அஸ்வினியும் தங்கள் வீட்டின் வெளிப்புற திண்ணையில் உட்கார்ந்து மணிமாறனிடம் கதை கேட்டுக் கொண்டிருந்தனர். புவன புரத்தில் ஒரு நல்ல திரைப்படம் ஓடுவதால் அந்த அலுவலர் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் பலரும்' குடும்பத்தோடு புவன புரம் சென்றிருந்தனர். ஒன்றிரண்டு வீடுகளில் மட்டுமே விளக்குகள் எரிந்து கொண்டிருக்க, வீதி ஆள் நடமாட்டமின்றி 'வெறிச்' சென்றிருந்தது.

தனது அபிமான மாய தந்திரக் கதைகளில் ஒன்றை சுவாரசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தான் மணிமாறன். அதில் வரும் கொடியவனான மந்திரவாதி நல்லவர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கிக் கொண்டே இருந்ததால் ஊர் மக்கள் பட்ட அவதியையும், முடிவில் அவனை புத்திசாலியான நல்ல மனிதன் வென்றதையும், அதற்கு ஊர் மக்கள் துணையாக இருந்ததையும் அவன் உணர்ச்சியுடன் விவரிக்கலானான். மணிமாறனின் கதைகளில் ஆனந்துக்கும் அஸ்வினிக்கும் மிகுந்த ஈடுபாடு உண்டு. அந்தக் கிராமத்தில் அவர்களது ஒரே பொழுது போக்கு அவனது கதைகள் தான்.

கடைசிப் போராட்டத்தில் மந்திரவாதி மாண்டு போக, மணிமாறன் கதையை இனிதாக முடித்தான். சற்று நேரம் பேசாமலிருந்த ஆனந்த், அஸ்வினி உள்ளே சென்ற நேரம் பார்த்து ''இந்தக் கதையில் வர்ற மந்திர

ஜெ. வசந்தன்



வாதி, தன்னுடைய மந்திரமாய வித்தைகளால் நல்லவங்களை அடிமைப்படுத்தி வச்சிருக்கான்.... அது போலத்தான் பாஞ்சாவும் இந்தக் கிராமத்து ஜனங்களை அடிமைப்படுத்தி வச்சிருக்கான். இல்லையா? ஆனால், அவன் என்ன தொழில் செய்யறான் என்பது



தான் தெரியலே. நீயும் அதைச் சொல்லாமல் ஏமாற்றிக்கிட்டே வரே?'' என்று கூறினான்.

தொலை தூரத்தில் இருளில் நிழலாகத் தெரிந்த மலைத் தொடரையே பார்த்துக் கொண்டிருந்த மணிமாறன், 'இன்னிக்கு ராத்திரி சொல்லிடறேன்' என்று தணிந்த குரலில் கூறிவிட்டு, ''மந்திரவாதியை ஜெயிக்க ஒரு நல்லவன் வந்த மாதிரி, இந்தப் பாஞ்சாவை ஜெயிக்க ஒரு நல்ல மனிதன் வந்து மக்களை மீட்பானா?'' என்றான் ஏக்கத்துடன்.

ஆனந்தின் கண்கள் ஒரு கணம் ஒளிபெற்று ஜொலித்தன. உள்ளேயிருந்து வந்துவிட்ட அஸ்வினி அவன் தோளைப் பற்றிக் கொண்டு, ''பாஞ்சா இந்த ஊர் ஜனங்களை அடிமைப்படுத்தியா வச்சிருக்கான்!'' என்று கேட்டாள்.

''ஆமாம், சாதாரண அடிமையாக் கூட இல்லே, கொத்தடிமையா.....! குறைஞ்ச அளவு பணத்தை அவங்களுக்குக் கடனா கொடுத்துவிட்டு, அதுக்கு வட்டியா ஒரு பெருந்தொகையைச் சேர்த்து, அந்த ஏழைகளால திருப்பிச் செலுத்த முடியாத ஒரு நிலையை உருவாக்கி, பின் பயமுறுத்தி அவங்க உழைப்பை இலவசமா பெற்றுக்கிட்டு இருக்கான்.... இது சட்டப்படி மிகப் பெரிய குற்றம்.... சட்டத்தோட கண்களை மறைச்சு, பாஞ்சா செய்யற இந்த அநீதியை அம்பலப்படுத்தணும்... அப்ப இந்த ஜனங்களை நிச்சயமா மீட்கலாம்'' என்றான் ஆனந்த்.

மணிமாறன் நிமிர்ந்து உட்கார்ந்து அவனிடம், ''நீ என்ன அம்பலப்படுத்தினாலும் இந்த ஜனங்களை மீட்க முடியாது ஏன் தெரியுமா...? பாஞ்சாகிட்ட அடிமைப்பட்டிருக்கோம்னு அவங்க யாருமே சொல்ல மாட்டாங்க... பிறகு எப்படி நீ மீட்க முடியும்...? அதுதான் இந்த விஷயத்துல நீ சிரத்தை எடுத்துக்காதேன்னு சொல்றேன்'' என்றான் அழுத்தமாக.

ஆனந்த் பிடிவாதமாக, ''கண் தெரியாதவன் தவறிப் போய்க் கிணற்றுக்

குள்ளவிழறதைப் பார்த்துட்டுப் பேசாம நின்னா, அப்புறம் நமக்குக் கண் இருந்து என்ன பயன்?'' என்று கேட்டான்.

அஸ்வினி குறுக்கிட்டு, ''ஆமாம் மணிமாறா, பாஞ்சா செய்யற அக்கிரமம் அதிகமாத்தான் இருக்கு. அவனை சும்மா விடக் கூடாது'' என்று படபடத்தாள். மணிமாறனின் குடிசையைத் தீக்கிரையாக்கியதால் பாஞ்சாவின் மீது அவளுக்கு அளவுக்கதிகமான ஆத்திரம் இருந்தது.

மணிமாறனின் முகம் வெளிறியது. அவன் இருவரையும் பார்த்து, ''பாஞ்சாவோட வழியிலே குறுக்கிட்டா என்னவாகும் தெரியுமா....? நான் யாருமில்லாத அனாதையா நிக்கக் காரணமே எங்க அப்பா பாஞ்சாவை எதிர்த்தது தான்'' என்றான். அவன் குரலில் மிகுந்த எச்சரிக்கை தொனித்தது.

அண்ணனும் தங்கையும் வியப்புற்றவர்களாய் ''என்னது! உங்க அப்பா பாஞ்சாவை எதிர்த்தாரா?'' என்று ஒரே குரலில் கேட்டனர்.

''ஆமாம்'', என்று அமைதியாகத் தலையசைத்த மணிமாறன் அந்தக் கதையை அவர்களுக்குச் சொல்லலானான்.

நாற்புறமும் மலைகளால் சூழப்பட்ட சந்திரகிரி கிராமம், மக்கள் வாழ்வதற்கு எந்த வசதியும் இல்லாமல் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தது. ஆனாலும், அங்கிருந்த மக்கள் ஓரளவு பயிர் வளர்த்தும், ஆடு மாடுகளை மேய்த்தும் அரைப் பட்டினியோடு வாழ்ந்து கொண்டிருந்தனர். அங்கு விளையும் தானியங்களையும் பாலையும் அவர்கள் புவனபுரத்திற்கு எடுத்துச் சென்று விற்று வருவார்கள். மணிமாறனின் தகப்பனார் முத்தையா, புவனபுரம் ரயில் நிலையத்தில் மாட்டு வண்டி வைத்திருந்தார். ரயிலில் வரும் பயணிகளுக்கு வண்டி ஓட்டுவதால் கிடைக்கும் வருவாயில் நிம்மதியாக எளிய வாழ்க்கை நடத்தி வந்தார்.

அது போலவே, புவனபுரம் பேருந்து நிலையத்தில் நாகராஜனின் தகப்பனான வீர மாணிக்கம் வண்டியோட்டி வந்தார். இருவரும் நெருங்கிய நண்பர்களாக இருந்ததோடல்லாமல் ஊர் மக்களின் அன்பையும், அபிமானத்தையும் பெற்றிருந்தனர். முத்தையாவே ஊருக்குத் தலைவராகவும் இருந்தார். ஊரில் நடக்கும் எல்லா வற்றிற்கும் அவரே தலைமை ஏற்று நடத்துவார். அதோடு நில்லாமல் அவருக்கு வெளியுலகத் தொடர்பு இருந்ததால் சந்திர கிரியைப் பல வகைகளிலும் முன்னேற்றுவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தார். அவரது அயராத முயற்சியின் விளைவாக சந்திரகிரியில் மூங்கிலால் கைவினைப் பொருட்கள் செய்யும் ஒரு தொழிற் கூடத்தை நிறுவ அரசாங்க ஒப்புதல் கிடைத்திருந்தது. அந்த மலைப் பகுதியில் வளர்ந்து செழித்துக் கிடக்கும் மூங்கில்களை நல்லவழியில் பயன்படுத்துவதோடல்லாமல் அந்தக் கிராம மக்களுக்கும் தொழில் செய்து பணம் சம்பாதிக்க ஒரு வழி பிறந்தது.


இந் நிலையில்தான் பாஞ்சா ஒரு நாள் தன் கையாட்களோடு சந்திரகிரிக்கு வந்து சேர்ந்தான். தனக்குப் பல ஏக்கர் தோட்டம் இருப்பதாகவும், அதில் வேலை செய்ய வருபவர்களுக்கு நல்ல ஊதியம் தருவதகாவும் ஆசை காட்டினான். அவன் ஆசை வார்த்தையில் மயங்கியவர்களுக்கு ஏராளமான தொகையை முன் பணமாகவும் வழங்கினான். தன் வலையில் அவர்களைச் சிக்க வைப்பதற்கே, அவன் பணம் தருகிறான் என்பதை அறியாத அப்பாவி மக்கள் அவனிடமிருந்து மேலும் மேலும் பணத்தை வாங்க ஆரம்பித்தனர். அத்தற்குப் பதிலாக மலைக்கு மேல்

''என்ன இது...! வெய்டிங் ரூம்ல நாய், பூனை, கழுதைன்னு ஒரே விலங்குகள் கூட்டமா இருக்கு?''

''பிரயாணிகள் தங்குமிடம்னு போர்டு போடுறதுக்கு 'பிராணிகள் தங்குமிடம்'னு போர்டு போட்டுட்டோம் சார்!''

- மொரப்பூர். அ. நவ்சாத்





''ஏண்டா ஹோம்வொர்க் நோட்டுல கையெழுத்துக் கிறுக்கலா இருக்கு...?''
''எங்க அப்பாவுக்கு வலது கையில நகச்சுத்து சார்.''

- ஆர். ரத்தினசாமி

எங்கோ இருக்கும் அவனது தோட்டத்தில் வேலை செய்ய முழு மனதுடன் ஒப்புக் கொண்டனர்.

முத்தையாகவும், வீரமாணிக்கமும் பகல் நேரங்களில் புவனபுரத்திற்குச் சென்று விடுவதால் கிராமத்தில் நடைபெற்று வந்த காரியங்கள் தெரியாமலேயே இருந்தது. முத்தையாவின் நேர்மையைப் பற்றி பாஞ்சா கேள்விப்பட்டிருந்ததால் இதைப்பற்றி அவரிடம் எதுவும் பேச வேண்டாம் என்று கிராம மக்களை உஷார் படுத்தியிருந்தான்.

ஆனால், எவ்வளவு நாட்கள் மறைக்க முடியும்?

திடீரென்று ஊர் மக்கள் இரவு நேரங்களில் எங்கோ வேலைக்குச் செல்வதைக் கவனித்த முத்தையா காரணம் புரியாமல் திகைப்படைந்தார். நன்றாக விசாரித்த போதுதான் ஒரு புதிய மனிதன் ஊருக்குள் வந்து ஏராளமான பணம் கொடுத்து வருவதாகவும், மலைக் கோட்டைச்சரிவிலுள்ள அவனது தோட்டத்தில் வேலை செய்யவே அவர்கள் செல்கிறார்கள் என்பதும் தெரிய வந்தது.

அவருக்குச் சந்தேகம் ஏற்பட ஆரம்பித்தது. ஊர் மக்கள் இரவில் இரகசியமாகச் செல்வதும், அதைப் பற்றி அவர்கள் பேச மறுத்ததும் அவரது சந்தேகத்தை வலுப்படுத்தின.

ஒரு நாள் அவர் ஊரிலுள்ள மக்களையெல்லாம் ஒன்று திரட்டி அவர்களது திடீர் மாறுதலுக்குக் காரணம் கேட்கவே யாரும் சரியாகப் பதில் கூறவில்லை. ஒரு நாள் அவர் அதிர்ச்சியுடையும் படி வீரமாணிக்கமே அந்த மக்கள் சார்பாகப் பேசலானான். ''இந்த ஊர் ஜனங்க ஒரு வேளை கஞ்சி குடிப்பதற்கே எவ்வளவு கஷ்டப்பட்டாங்கன்னு நமக்குத் தெரியும்... இப்ப அவங்க ரெண்டு வேளை சோறு சாப்பிட முடியுதுன்னா அந்த வாய்ப்பை ஏன் நழுவ விடணும்?'' என்று கேட்டான்.

முத்தையா அமைதியாக, ''நல்ல வாய்ப்புன்னா பயன் படுத்திக்கலாம்.... ஆனா, நம்மைப் படுகுழியில் தள்ளற வாய்ப்புன்னா கொஞ்சம் யோசிக்கணும் இல்லியா...? இப்போதைக்குப் பணம் கிடைக்கிறது என்பதற்காக எதையும் நாம செய்துட முடியுமா, சொல்லு?'' என்று வீர மாணிக்கத்திடம் கேட்டார்.

ஆனால் வீரமணிக்கமும் சரி, அந்த ஊர் ஜனங்களும் சரி, யாருமே முத்தையாவின் பேச்சைக் கேட்கவில்லை. புதிய மனிதனாகிய பாஞ்சாவின் மலைத் தோட்டத்தில் வேலை செய்வதால் தங்கள் வறுமை தீர்ந்து வருவதாகவும், பாஞ்சா மிகவும் நல்ல மனிதன் என்றும் வாதாடினார்கள். பாஞ்சா செய்வது ஒரு சட்ட விரோதமான செயல் என்றும், என்றாவது ஒரு நாள் மாட்டிக் கொள்ளும் போது எல்லோரும் தொல்லைக்குள்ளாகும்படி இருக்கும் என்றும் முத்தையா எடுத்துரைத்தார். ஆனால், அவர் சொல்வதை யாரும் கேட்க விரும்பவில்லை.

வீரமாணிக்கம் அவரிடம் மிகவும் நயமாக அவரையும் அந்தத் தொழிலில் ஈடுபட்டு ஒத்துழைக்கும் படியும், ஊர் ஜனங்கள் ஒற்றுமையாக இருந்தால் சட்டத்தின் பார்வையில் இருந்து எல்லோரும் தப்பித்துக் கொள்ள முடியும் என்றும் சொன்னான். ஆனால், முத்தையா மறுத்து விடவே, ஊர் ஜனங்கள் ஒன்று சேர்ந்து வீரமாணிக்கத்தையே தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

அதற்குப் பிறகு வீரமாணிக்கம் புவனபுரத்திற்கு வண்டி ஓட்ட வருவதை நிறுத்திக் கொண்டான். பதிலாக அவனது மகன் நாகராஜன் வண்டி ஓட்டலானான்.

இந்தப் பாமர ஜனங்களை பாஞ்சாவின் பிடியிலிருந்து எப்படி விடுவிப்பது என்று தெரியாமல் தவித்த முத்தையா

ஒரு நாள் அவனையே நேரடியாகச் சந்தித்துப் பேசினார். கடும் கோப மடைந்த பாஞ்சா, தன்னுடைய வழியில் குறுக்கிட்டால் அவர் இனி ஊருக்குள் உயிரோடு வாழ முடியாது என்று மிரட்டினான். முத்தையா பயப்படவில்லை. ''இந்த ஊர் ஜனங்களை மீட்காமல் விடப் போவதில்லை'' என்று சபதமிட்டார்.

இதற்குள் கொஞ்சம் கொஞ்சமாக அங்கு வந்து கூடி விட்ட ஊர் மக்களைப் பார்த்து பாஞ்சா ஆவேசத்தோடு கத்தினான். ''கேட்டீங்களா இவன் பேசற பேச்சை....? என்னவோ, பட்டினி இல்லாம நீங்களெல்லாம் பிழைக்கணுமேன்னு நான் நெனச்சா, இவன் எல்லோரையும் காட்டிக் கொடுத்துடுவான் போல இருக்கே! எதுக்கு வீண் தகராறு? எனக்கு வேலைக்கு வேறு ஆட்களா கிடைக்காது? உங்க தொடர்பே இனி வேண்டாம்... இவன் சொல்றதைக் கேட்டு நீங்க பட்டினி கிடந்தா என்ன, பாழாப் போனா என்ன?'' என்று எகிறிக் குதித்தான்.

பணத்திற்கு ஆசைப்பட்டு முத்தையாவின் எதிரியாகி விட்ட வீர மாணிக்கம், பாஞ்சாவின் கூக்குரலைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்டவனாய், ''ஐயா, நீங்க அப்படியெல்லாம் பேசக் கூடாது.... எங்களுக்கு வாழ வழி காட்டிய தெய்வம் மாதிரி நீங்க! இவன் ஏதோ பேசினான் என்கிறதுக்காக நீங்க எங்களைக் கை விட்டுடாதீங்க....! இவனுக்குப் பிடிக்கலைன்னா, இவன் வேற ஊரைப் பார்த்துப் போகட்டும்... நீங்க எங்களை விட்டுப்போக வேணாம்.... என்ன நான் சொல்றது சரிதானே?'' என்று கூடியிருந்த கிராமத்தினரைப் பார்த்துக் கேட்டான்.

தங்கள் நல் வாழ்க்கைக்கு முத்தையா முட்டுக்கட்டை போடுகிறார் என்று நினைத்த கிராம மக்கள், வீர மாணிக்கம் சொன்னதை ஆமோதித்துத் தலையசைத்தனர்.

இதனால் துணிவு வரப் பெற்ற பாஞ்சா, முத்தையாவிடம், ''இவங்க எல்லோரும் முட்டாள்களா நீ சொல்றதைக் கேட்க....? பேசாம, எங்களோட சேர்ந்து வேலை செய், இல்லேன்னா இந்த ஊரை விட்டே ஓடிப் போயிரு.... பாஞ்சாவோட விளையாடறது பாம்போட விளையாடறதுன்னு இப்பத் தெரியாது.... பிறகு தெரியும்'' என்று மிரட்டி விட்டுச் சென்றான்.

அவமானத்தோடும் மனவேதனையோடும் திரும்பி வந்த முத்தையா அன்று இரவெல்லாம் தூங்காமல் புலம்பிக் கொண்டேயிருந்தார்.

ஒரு வருடத்திற்கு முன்பே தன் மனைவியை இழந்திருந்ததால் வேதனையுற்றிருந்த முத்தையாவுக்கு ஊர் மக்களின் இந்தப் புறக்கணிப்பு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியது. போலீசிடம் புகார் செய்வதாலோ, பாஞ்சாவைக் காட்டிக் கொடுப்பதாலோ சந்திரகிரி மக்களின் வெறுப்பிற்குத்தான் மேலும் ஆளாக நேரிடும் என்பதை அவர் உணர்ந்தார்.


இந் நிலையில் முத்தையாவால் தனக்கு ஆபத்து வரும் என்று நினைத்த பாஞ்சா அவருக்குப் பெரும் தொல்லைகளைக் கொடுக்க ஆரம்பித்தான். ஒரு நாள் இரவில் அவர் மலைப் பாதையில் வண்டி ஓட்டி வரும் போது, முன் பின் தெரியாத முரடர்கள் சிலர் வண்டியை மறித்து, அவரைத் தாக்கினர். நிராதரவாய்த் தவித்த அவரிடம், ''சந்திரகிரியை விட்டு ஓடிப் போகாவிட்டால் உயிரோடு விட்டு வைக்க மாட்டோம்'' என்று மிரட்டினர் முரடர்கள். முத்தையா அதைப் பொருட்படுத்தவில்லை. எனினும், வரவர பாஞ்சாவின் மிரட்டல்கள் அதிகரித்துக் கொண்டேயிருந்தன.

ஒரு நாள் இரவு தனது மகன் மணிமாறனை அழைத்த முத்தையா, ''மணிமாறா, எனக்கு என்ன நேர்ந்தாலும் நீ கலங்க வேண்டாம்.... உனக்கு நான்

''தங்கத்துக்கு மட்டும் தாங்க கடன் தருவோம்.''

''ஏன் மீனாட்சிக்கெல்லாம் தர மாட்டீங்களாக்கும்.''

– எம். சரவணன்



விட்டு வைத்திருக்கிற பெரிய சொத்து உண்மையும், நேர்மையும்தான்... எந்தச் சூழ்நிலையிலும் தவறான வழியில் பணம் சேர்க்க நீ நினைக்கக் கூடாது. இந்த வண்டியையும், மாட்டையும் வைத்து நாணயமா நீ வாழணும்'' என்று கேட்டுக் கொண்டார்.

தாயை இழந்த மணிமாறனுக்குத் தன் தந்தையின் பேச்சு மிகுந்த திகிலை உண்டு பண்ணியது. அவன் அழுது கொண்டே, ''ஏம்பா இப்படியெல்லாம் பேசறீங்க...? வேறு எங்கேயாவது கண் காணாத இடத்துக்கு நாம ரெண்டு பேரும் போயிடலாம். வண்டி மாட்டை வச்சுப் பொழைச்சுக்கலாம்'' என்று தேம்பினான்.

தந்தை ஏன் இப்படிப் பேசுகிறார் என்று மணிமாறனுக்குப் புரியவில்லை. ஆனால், இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் ஒரு நாள் முத்தையா வெள்ளியாற்று வெள்ளத்தில் மூழ்கிப் போய் விட்டதாக ஊர் மக்கள் வந்து தெரிவித்து போது அவன் அலறிப் புலம்பினான். பதறியடித்துக் கொண்டு ஆற்றங்கரைக்கு ஓடினான். அங்கு அவன் தந்தை அணிந்திருந்த உடைகள் மட்டும் கரையில் இருப்பதைப் பார்த்தான்.

முத்தையா குளிப்பதற்காக ஆற்றில் இறங்கியதாகவும், ஒரு நீர்ச் சுழலில் சிக்கிக் கொண்டு தவித்ததாகவும், தான் காப்பாற்ற முனைவதற்குள் மூழ்கி விட்டதாகவும், பார்த்த ஒருவர் தெரிவித்தார். அழுவதற்குக் கூடத் தோன்றாமல் எதிரே நொப்பும் நுரையுமாக ஓடும் வெள்ளத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான் அவன்.

முத்தையாவின் திடீர் மறைவு பற்றி ஊருக்குள் பலவிதமான கருத்துக்கள் பரவலாயின. அவர் உண்மையிலேயே நீர்ச்சுழலில் மூழ்கிப் போய் விட்டதாகச் சிலரும், பாஞ்சா,தன் ஆட்களை வைத்து மூழ்கடித்துக் கொன்று விட்டதாகச் சிலரும், பாஞ்சாவுக்குப் பயந்து அவர் ஓடிப் போய் விட்டதாகச் சிலரும் பேசலாயினர்.

தந்தையின் திடீர் மறைவால் நிலை குலைந்து போன மணிமாறன் வெகு விரைவிலேயே மனம் தேறினான். தந்தை கடைசியாகக் கேட்டுக் கொண்டவாறு நேர்மையாக வாழ வேண்டும் என்ற வைராக்கியம் அவனிடம் உறுதியடைந்தது. வண்டி மாட்டோடு புவனபுரம் ரயில் நிலையத்தில் பயணிகளுக்காக காத்திருக்க ஆரம்பித்தான். தன் தகப்பனாரைப் போலவே ரயிலில் வரும் பயணிகளுக்கு வண்டி ஓட்டினான். அதில் கிடைத்த சொற்ப வருமானம் அவனுக்கும், அவனது மாட்டிற்கும் போதுமானதாக இருந்தது.

அவன் மீது பரிதாபப் பட்ட ஊர் ஜனங்கள், அவனையும் பாஞ்சாவிடமே வேலை செய்ய வந்து விடும்படி எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் இணங்கவில்லை.

பெருமூச்சோடும், கண்ணீரோடும் தன் கதையைச் சொல்லி முடித்தான் மணிமாறன். கேட்டுக் கொண்டிருந்த ஆனந்துக்கும், அஸ்வினிக்கும் கூடக் கண்கள் கலங்கின. அவன் மீது ஏற்கெனவே அவர்களுக்கிருந்த பரிவும், அன்பும் அதிகமாயிற்று.

உள்ளேயிருந்து வந்த அம்மா கமலா, ''என்ன, இன்னுமா கதை பேசிட்டு உட்கார்ந்து இருக்கீங்க....! நேரம் ரொம்பவும் ஆச்சே, காலையில் பேசலாம், வந்து படுங்க'' என்று சொன்னாள்.

ஆனந்தும், அஸ்வினியும் படுப்பதற்காக எழுந்து உள்ளே சென்றார்கள். மணிமாறன் மாட்டிற்குப் புல்லும், தண்ணீரும் வைப்பதற்காகக் கொல்லைப் பக்கம் சென்றான். பாவம் அங்கே தனக்குப் பெரும் ஆபத்துக் காத்திருப்பதை அவன் எப்படி அறிவான்?


(வளரும்)


''ஆசிரியர்களுக்குப் பிடிக்காத பதில் எது?''

''தெரியாது சார்!''


''வெரிகுட்! சரியா சொல்லிட்டே; உட்காரு!''

– சீர்காழி. வி. ரேவதி





எதோடு எது பொருந்தும்?



ஆண்டவன் அருள்!



எந்தக் காரியம் ஆனாலும்
ஏனோ மிகவும் அவசரமாய்
கந்தன் செய்து வந்தனனே
கவனக் குறைவே கொண்டிருந்தான்

பெட்டி ஒன்றைத் தூக்கிடவே
பெரிதும் அவசரம் காட்டியதால்
பெட்டி தவறி விழுந்ததுவே
பாவம்! கட்டை விரலிழந்தான்!

அதனால் வாழ்வை மிகவெறுத்தான்
அய்யோ இறப்பதே நலமென்றான்
குமுறிக் குமுறி அழுதபடி
கண்ணீர்ப் பெருக்கித் துடித்திருந்தான்

அன்னை தந்தை இருவருமே
அவனை மருத்துவ மனைசேர்த்தார்
நன்கு குணமே அடைந்தவுடன்
நாடிப் பலரின் நலங்கேட்டான்

கைகள் இழந்தவர் பலர்கண்டான்
கால்கள் இழந்தவர் பலர்கண்டான்
மெய்யில் பற்பல கட்டுடனே
முனகும் பலரையும் அவன்கண்டான்

கட்டை விரலை இழந்தாலும்
கவலை மேலும் தொடராது
அற்புதக் கருணை யுடன்காத்த
ஆண்டவன் அருளில் மெய்சிலிர்த்தான்

திருச்சி. பாரதன்



GOKULAM, GUINDY, MADRAS - 600 032.

பிரான்சின் தலைசிறந்தவர்!

ஜானகிமணாளன்

பிரான்சு நாட்டில் ஒருமுறை வாக்கெடுப்பு ஒன்று நடந்தது. அது நாட்டை ஆள்பவரைத் தேர்ந்தெடுப்பதற்காக அல்ல. பிறகு எதற்கு?

பிரான்சு நாட்டிலேயே தலை சிறந்தவர் யார் யார் என்பதை நிர்ணயிப்பதற்காக வாக்குப் பதிவு நடந்தது. எண்ணிப்பார்த்தார்கள். அதன் முடிவு அனைவரையும் அதிசயிக்க வைத்தது. ஏனெனில், அனைவரும் தலைசிறந்த முதல் நபராக அந்நாட்டின் சக்ரவர்த்தி மாவீரன் நெப்போலியனைத்தான் தேர்ந்தெடுத்திருப்பார்கள் என்று எண்ணியிருந்தனர். ஆனால், நெப்போலியன் பெற்றிருந்த இடம் ஐந்தாவதுதான்!

அப்படியானால், அவருக்கு முந்தைய நான்கு இடங்களில் முதல் இடம் பெற்று அந்நாட்டின் தலை சிறந்த நபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் யார்?

அவர் ஓர் விஞ்ஞானி. பெயர் லூயி பாஸ்டியர். 1822 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் நாள் பிறந்தவர். சொந்த ஊர் கிழக்கு பிரான்சில் உள்ள டோல் என்ற கிராமம். அவரது தந்தை ஒரு ராணுவ வீரர். நெப்போலியனின் காலத்தில் பணியில் இருந்தார். நெப்போலியன் வீழ்ந்த பிறகு பணியிலிருந்து ஓய்வு பெற்றுத் தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தி நடத்தினார்.

பாஸ்டியர் ஸ்டிராஸ்பர்க் கல்லூரியில் சேர்ந்து பயின்றார். அப்போது அவருக்குத் திருமணம் நடந்தது. மனைவி பெயர் மேரி. அந்தக் கல்லூரி முதல்வரின் மகள். படித்து முடித்ததும் பாஸ்டியர் அந்தக் கல்லூரியிலேயே ரசாயனத் துறைப் பேராசிரியரானார். அத்துடன் அறிவியல் ஆய்விலும் ஈடுபட்டார். மனைவி அவருடைய ஆய்வுக்கு உறு துணையாக இருந்தாள். குடும்பம், உற்றார், உறவினர் என்ற தொல்லைகள் எதுவும் இல்லாமல் பாஸ்டியர் ஆராய்ச்சியில் ஈடுபட அந்த அம்மையார் மிகவும் துணை புரிந்தார். அத்துடன் அவள் தன் கணவனின் ஆராய்ச்சி முடிவுகளைக் குறிப்பெடுத்தும் உதவி செய்தாள்.

அது சரி. பிரான்சின் மக்கள் பாஸ்டியரை நாட்டின் தலை சிறந்த மனிதராகத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ன?

அதற்குக் காரணம் அவர் மனித குலத்துக்கு ஆற்றியுள்ள தொண்டு தான். அவரது கண்டு பிடிப்புகள் ஆண்டு தோறும் கோடிக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற உதவி புரிந்து வருவதுதான். அவருடைய கண்டுபிடிப்புகள் மிகவும் அற்புதமானவை.

காற்றில் கண்ணுக்குத் தெரியாத மிகமிக நுண்ணிய உயிரணுக்கள் ஏராளமாக உள்ளன. அவற்றை நுண் கிருமிகள் என்பார்கள். அவையே பாக்டீரியா எனப்படுபவை. அவற்றில் சில நன்மை புரிபவை. தீமை பயக்கும் பாக்டீரியாக்களும் உண்டு. பாலையும் மது வகைகளையும் புளிக்கச் செய்பவை

இந்த பாக்டீரியாக்கள் தான். நம் உடலின் புண்களில் சீழ் பிடிக்கச் செய் பவையும் இந்த பாக்டீரியாக்கள் தான். நமக்கும் சரி, அல்லது பிராணிகள் மற்றும் தாவரங்களுக்கும் சரி, பலவிதத் தொற்று நோய்கள் ஏற்படக் காரணம் இந்த பாக்டீரியாக்கள் தான். இந்த மாபெரும் உண்மையைக் கண்டுபிடித் தவர் பாஸ்டியர் தான். அதுமட்டுமல்ல, அந்தப் பாக்டீரியாக்களிடமிருந்து நாம் தப்புவதற்கான வழி முறைகளைக் கண்டறிந்து நமக்கு வழிகாட்டியவரும் அவரே! எனவேதான் பிரான்சு நாட்டு மக்கள் அவரைத் தலைசிறந்த மனித ராகத் தேர்ந்தெடுத்தனர்.

அதுவரையில், 'உயிர்கள் இயற்கை யில் தாமாகவே உருவாகிப் பெருகு கின்றன; அவற்றின் பெருக்கத்தை நம் மால் எதுவும் செய்ய முடியாது' என்று மக்கள் கருதி வந்தனர். அந்த எண்ணத் தைத் தகர்த்து எறிந்தார் பாஸ்டியர்.


பிரான்சு நாட்டில் திராட்சைத் தோட் டங்கள் மிகுதி. எனவே, திராட்சை ரசத்தி லிருந்து சாராயம் தயாரிக்கும் தொழி லில் அந்த நாடு முன்னணியில் இருந்தது. ஒரு சமயம் என்ன ஆயிற்று தெரியுமா?

சாராயம் தயாரிக்கத் திராட்சைச் சாற்றைப் புளிக்க வைப்பார்கள். அதற் காகப் பல பீப்பாக்களில் சாற்றை ஊற்றிப் புளிக்க வைத்தனர். சில பீப் பாய்களில் வழக்கம் போல் நல்ல சாரா யம் கிடைத்தது. ஆனால், பல பீப்பாய் களின் சாறு வீணாகி விட்டது. அழுகி நாற்றம் எடுத்து விட்டது. உடனே, சாராயத் தொழிற்சாலை முதலாளிகள் பாஸ்டியரை அழைத்து அது பற்றி ஆராயச் சொன்னார்கள்.

பாஸ்டியர் நல்ல மது, வீணாகி விட்ட சாறு இரண்டின் மாதிரியையும் எடுத்து ஆய்வு செய்தார். அப்போது தான் பாஸ்டியர் அந்த அற்புதக் கண்டு பிடிப்பை நிகழ்த்தினார். பாக்டீரியா எனப்படும் நுண்ணிய கிருமியை அவர் கண்டு பிடித்து விட்டார்.


நல்ல மதுப் பீப்பாயின் உயி ரணுக்கள் வட்ட வடிவில் ஒழுங்குடன் காணப்பட்டன. வீணாகியவற்றின் உயி ரணுக்கள் கோணல் மாணலாக ஒழுங்கு அற்ற உருவத்தில் இருக்கக் கண்டார். பழச்சாறு புளிப்பதற்குக் காரணம் அந்த உயிரணுக்கள் தான் என்பதை அறிந்தார். ஒழுங்கான வட்ட வடிவம் உடைய பாக் டீரியாக்கள் நல்ல மதுவைத் தரு கின்றன. ஒழுங்கற்ற உருவம் உடை யவை சாற்றை அழுக வைத்து வீணடித்து விடுகின்றன என்பதை அவர் அறிந்து வெளியிட்டார். கூடவே, அந்தத் தீமை தரும் பாக்டீரியாக்களை அழிப்பது எப்படி என்பது பற்றியும் அவர் ஆராய்ந் தார். வெப்பத்தின் மூலம் அவற்றை அழித்து விடலாம் என அறிந்தார். அதா வது, ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலைக குச் சூடாக்கும் போது, அந்தப் பொருள் களில் உள்ள பாக்டீரியாக்கள் இறந்து அழிந்து விடும் என்பதை அறிந்தார். இந்தக் கொதிக்க வைத்துக் கொல்லும் முறைக்கு 'பாஸ்டியர் முறை' என்றே பெயர். பால் கெட்டு விடாமல் பத்திரப் படுத்த இம்முறை பெரிதும் பயன்படு கிறது. கறந்த பால் மிகவும் சுத்தமானது என்று நாம் நினைப்போம். அதுதான் இல்லை. அதில் பல கிருமிகள் இருக்க லாம். அவை காசநோய் போன்றவற்றை ஏற்படுத்தலாம். அந்தக் கிருமிகளை அழிக்க நாம் பாலை நன்கு கொதிக்க வைத்துச் சாப்பிட வேண்டும். இதைத் தான் பாஸ்டியர் தனது 'பாஸ்டியர் முறையில் விளக்குகிறார்.

மது உற்பத்தியைப் போலவே, பிரான்சு நாடு பட்டு உற்பத்தியிலும் தலைசிறந்தது. திடீரென்று ஒரு சமயம் பட்டுப் பூச்சிகளுக்கு ஒருவிதத் தொத்து நோய் பரவியது. பூச்சிகள் ஆரம்ப



★ கேரம் விளையாடுவது என்றால் சிறுவர்களுக்கு மிகவும் விருப்பம். அந்த கேரம் என்ற வார்த்தை பிரெஞ்சுச் சொல். இந்தச் சொல்லின் அர்த்தம் அடித்துத் தள்ளு என்பதாகும்.

- சி. அருள்மணி, மொரப்பூர்.



நிலையிலேயே அழிந்தன. பட்டு நூல் எடுக்க மு டி ய வி ல் லை. அந்தத் தொழிலே நசிந்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டு விட்டது. உடனே பாஸ் டியருக்கு அழைப்பு பறந்தது.

பாஸ்டியர் நல்ல பூச்சிகள், நோயி னால் பீடிக்கப்பட்ட பூச்சிகள் இரண்டை யும் ஆராய்ந்தார். நோய்க்கான காரணம் நுண் கிருமிகளே எனக் கண்டறிந்தார். நோயினால் பீடிக்கப்பட்ட பூச்சிகளைக் கண்டறிந்து அவற்றை முற்றிலுமாக அழித்து, நல்ல பூச்சிகளைக் காப்பாற் றினார். அத் தொழில் காப்பாற்றப் பட்டது. மக்கள் அவரைப் பாராட்டினர்.

பட்டுப் பூச்சிகளுக்கு நோய் வந்தது போலவே ஒரு சமயம் கோழிகளுக்கும் கொடிய காலரா நோய் பரவியது. உடனே பாஸ்டியர் அல்லும் பகலும் பாடுபட்டு, அயராத ஆராய்ச்சியில் ஈடு பட்டுத் தடுப்பு ஊசி மருந்து ஒன்றைக் கண்டறிந்து, தயாரித்து அளித்தார். அதனைக் கோழிகளுக்குப் போட்டு நோய் பரவாமல் தடுத்தார். அது முதல் தடுப்பு ஊசி போட்டு நோய் வராமல் தடுக்கும் முறை பிரபலம் அடைந்தது. இப்போது மனிதர்களுக்கும் கால்ரா, தட்டம்மை, கக்குவான், டெட்டனஸ் இப்படிப் பலவித நோய்கள் வராமல் தடுப்பு ஊசிகள் போடும் முறை பிரபலம் அடைந்து விட்டது.

ஒரு சமயம் ஒரு நாய்க்கு வெறி பிடித்து விட்டது. அது மற்ற நாய்களைக் கடித்தது. கடிபட்ட நாய்களுக்கும் வெறி பிடித்து அவை துன்பப்பட்டன. அதைக் கண்டார் பாஸ்டியர். கடிபட்ட நாய் களைக் குணப்படுத்த ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார். அதற்கு ஸீரம் என்று பெயர். அதைக் கொண்டு பல நாய்களின்

வெறித்தன்மை குணப்படுத்தப்பட்டது.

ஒரு சமயம் வெறி நாய் ஒன்று ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவனைக் கடித்து விட்டது. உடனே பாஸ்டியருக்கு ஒரு யோசனை உதித்தது. வெறி நாயால் கடிக்கப்பட்ட நாய்களைக் குணப்படுத்தும் அந்த ஸ◌ூரத்தால், ஏன் வெறிநாய்க் கடிபட்ட மனிதனைக் குணப்படுத்த முடியாது என்று நினைத்தார். அதைக் கொண்டு அந்தச் சிறுவனுக்கு மருத்துவம் செய்தார். என்ன ஆச்சர்யம்! அந்தச் சிறுவன் காப்பாற்றப்பட்டான். அது முதல் வெறி நாய்க் கடிக்கு மருந்து கிடைத்து விட்டது. இப்போது அது உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் கூட அது பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே! நாய் கடித்தால் கடிபட்டவரின் தொப்புளைச் சுற்றி ஊசி போடுவார்களே! அதைக் கண்டு பிடித்தவர் லூயி பாஸ்டியர்தான்.

இப்படி லூயி பாஸ்டியர் இந்த மனித சமுதாயத்துக்குச் செய்த சேவை மகத்தானது. எனவேதான் அந்த நாட்டு மக்கள் அவரைப் பிரான்சின் தலை சிறந்த மனிதர் என்ற தீர்ப்பை வழங்கிச் சிறப்பித்தனர்.

லூயி பாஸ்டியர் 1895 ஆம் ஆண்டு செப்டெம்பர் 27 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார். அவர் மறைந்துவிட்டார். எனினும் அவரது கண்டுபிடிப்புகள் உலகெங்கும் தினசரி லட்சக்கணக்கானவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஒன்பது முறை உருவான நகரம்!



★ முதன் முதலில் குத்புதீன் ஐபெக் என்ற இஸ்லாமிய மன்னரால் 12-வது நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது.

★ இரண்டாவது முறையாக அலாவுதீன் கில்ஜி 1303-ஆம் ஆண்டு உருவாக்கினார். இதற்கு சிரி என்று பெயர் இடப்பட்டது.

★ 1321- ஆம் ஆண்டு நகரைப் புதுப்பித்து ''துக்ளாபாத்'' என்று கியாஜுதீன் துக்ளக் பெயரிட்டார்.

★ 1327 - ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முகம்மது பின்துக்ளக் ஜகன் பானா என்று பெயரிட்டார்.

★ 1354-இல், பெரோஷா மன்னர் பெரோஷா எனப் பெயரிட்டார்.

★ ஆறாவது முறையாக ஹுமாயூன் உருவாக்கிய நகருக்கு ''புராண குவியா என்று பெயரிட்டார்.


★ 1633-இல் ஷாஜகான்பாத் என்று இந்த நகரம் அழைக்கப்பட்டது.

★ ஆங்கிலேயர் ஆட்சியில் லூடெயென்ஸ் என்பவர் இதற்கு டெல்லி என்று பெயரிட்டார்.

இப்போது கடைசியாக புது டெல்லியாகி உள்ளது.

- செஞ்சி குமார், செஞ்சி - 2.

உலகமே என் காலடியில்



★ ஒருநாள்... உலக நாடுகள் பற்றி... ஒரு உலக வரைபடத்தை வைத்து வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தேன்... அப்போது, வரைபடம் (மேப்) கழன்று என் காலடியில் விழுந்தது. உடனே ஒரு குறும்புக்கார மாணவன், ''இப்போது... உலகமே... ஆசிரியரின் காலடியில் விழுந்து கிடக்கிறது!'' எனக் கூற... மற்ற மாணவர்களுடன் நானும் சேர்ந்து சிரித்து விட்டேன்...''

- இரா. திலிப், திருச்சி - 14.

விசித்திரப் போட்டி

மங்களபுரி நாட்டை கமலவர்த்தன் என்னும் ராஜா நன்கு ஆண்டு வந்தார். அவருடைய அமைச்சர் மதி சீலன் நாட்டை நல்வழியில் நடத்திச் செல்ல ராஜாவுக்கு உறுதுணையாக இருந்து வந்தார். ராஜா கமலவர்த்தன் அவ்வப் பொழுது வேடிக்கையான போட்டிகள் பல வைப்பார். அதில் சில பைத்தியக்காரத்தனமாகவும் இருக்கும்! மதி சீலன் எவ்வளவு கூறியும் ராஜா தொடர்ந்து விசித்திரமான போட்டிகள் பல வைத்தார்.

ஒரு முறை கமலவர்த்தன் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது தண்ணீர் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி கூஜா கை தவறிக் கீழே விழுந்து உடைந்து விட்டது. கண்ணாடிச் சில்கள் அங்கும் இங்கும் தெறித்தன. மன்னர் கீழே பார்க்க, கண்ணாடி கூஜாவின் அடிப் பாகம் ஒரு மா இலையின் வடிவில் அழகாக உடைந்திருந்தது. மன்னருக்கு அதைப் பார்த்ததும் ஆச்சரியமாக இருந்தது. மா இலை வடிவில் உடைந்திருந்த கண்ணாடிச் சில்லை மட்டும் எடுத்துக் கொண்டார்.


மறுநாள் அரண்மனையில் அனைவரும் கூடியிருந்தனர். அப்பொழுது மன்னர் ''இன்று நான் உங்களுக்கு போட்டி ஒன்று வைக்கப் போகிறேன்'' என்றார்.

''இந்தக் கண்ணாடிச் சில்லைப் பார்த்தீர்களா....? என் எதிரிலேயே கண்ணாடி கூஜாவை உடைத்து இதைப் போலவே மா இலை வடிவில் கண்ணாடிச் சில்லைத் தருபவர்களுக்கு இரண்டு கிராமங்கள் பரிசாகத் தரப்படும். இந்தக் கண்ணாடி கூஜாவை மா இலை வடிவில் உடைக்கத் தவறியவர்கள் ஒரு மாத காலம் அரண்மனைக்கு வரக்கூடாது'' என்று சொன்னார்.

சபையில் தொடர்ந்து நிசப்தம் நிலவியது. ஒருவர் கூடக் கண்ணாடி கூஜாவை உடைக்க முன் வரவில்லை. கண்ணாடி கூஜா எப்பொழுதும் மா இலை வடிவத்தில்தான் உடையுமா என்ன?

மன்னருக்குக் கோபம் கோபமாக வந்தது. ''இவ்வளவு பெரிய சபையில் இதைக் கூட ஒருவராலும் செய்ய முடியாதா?'' என்று மன்னர் கோபம் கொப்பளிக்கச் சொன்ன சமயம் சபையில் உள்ள ஒரு மூதறிஞர் எழுந்து ''மன்னா எனக்கு ஒரு கண்ணாடி கூஜா தாருங்கள். நாளை நான் சபைக்கு வரும்போது மா இலை வடிவ கண்ணாடிச் சில்லோடு வருகிறேன்......'' என்றார்.

மன்னரோ உடனே மறுத்து ''... என் கண் எதிரிலேயே உடைத்து மா இலை வடிவ கண்ணாடிச் சில்லைத் தர வேண்டும்...'' என்றார். மா இலை வடி



யாரென்று கண்டுபிடி - போட்டி முடிவு

அப்பாடி! மூச்சுத் திணற வைக்கும் அளவுக்கு (1612 பேர்) இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை இருந்தது! மற்ற பணிகள் எதையுமே கவனிக்க முடியாமல் திணற அடித்து விட்டார்கள் தம்பி தங்கைகள்! ஒருவரே பல கூப்பன்களை இணைத்து விடையெழுதிய அதிசயத்தையும் இதில் காண முடிந்தது. ஏராளமானவர்கள் சரியான விடை எழுதியிருந்ததால், குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்கும்படி ஆயிற்று.

ரூ. 10/- பரிசு பெறுவோர்

1. சி. சிவக்குமார்,
   ரிஷிவந்தியம் அஞ்சல்,
   காமராஜர் வீதி, 606 205.
2. சுனில், த/பெ சிவதாஜுப் பிள்ளை,
   சன்னதித் தெரு, குளச்சல்.
3. பி. ஜானகிராணி, 13, அம்மன் நகர்,
   சிம்கோ மீட்டர்ஸ் ரோடு,
   திருச்சி 620 021.
4. ஆர். தஸ்லீம்கான்,
   22, காமராஜர் சாலை,
   கும்பகோணம் 612 001
5. வெ. கோவர்த்தனன்
   1/47, மருதூர்,
   புங்கம் பாளையம் அஞ்சல்,
   காரமடை வழி,
   கோவை மாவட்டம்.
6. எம். ஏ. முகமது ஹாரிஸ்,
   19, காயத்ரி நகர்,
   அஸ்தினாபுரம், சென்னை - 64.
7. பி. அருண்பிரசன்னா,
   த/பெ திரு. டி. வி.
   பாலசுப்ரமணியன்,
   பிளாட் எண்: 35, பெருமாள்
   கோவில் தெரு விரிவு,
   மாணிக்க வேலு லே அவுட்,
   வேலப்பாடி, வேலூர் - 632 001.
8. கே. யுவராஜ்,
   20/14/3 பாரதியார் தெரு,
   என். எஸ். நகர், ஆரணி - 632 301.
9. கே. பெலிக்ஸ்,
   புனித அன்னாள்
   மேல்நிலைப் பள்ளி,
   திண்டிவனம் - 604002.
10. என். சங்கீதா,
    த/பெ. திரு. எஸ். கோவிந்தராஜன்,
    351, பாரி தெரு,
    சதாசிவ நகர், மதுரை - 625020.
11. சரவணன்,
    25, பீட்டர்ஸ் ரோடு,
    விருத்தாசலம் ஜங்ஷன்,
    தென்னார்காடு மாவட்டம் - 606 002.
12. ஆர். சி. எழில் அரசி,
    த/பெ திரு. ஆர். சந்திரமோகன்,
    41, பாக்கியம் தெரு,
    அனுபானடி ரோடு,
    மதுரை - 625 009.
13. ஜெ. மெரிலின்,
    36, கூனன் குளம், தெற்குத் தெரு,
    திருவில்லிப்புத்தூர் 626125.
14. பி. சுவாமிநாதன்,
    அறை எண் 5,
    கமல்தீப் விகாஸ் கோவாபரேடிவ்
    ஹவுசிங் சொசைட்டி லிமிடெட்,
    சாஸ்திரி நகர், தானே 421 202.
15. பி. கிருத்திகா,
    578 செக்டார்
    பஜ ராமகிருஷ்ணாபுரம்,
    புது டில்லி - 110 022.
16. எஸ். அனுஷ், 23,
    மிதிலாவிலாஸ்,
    ராகவேந்திரபுரம்,
    ஸ்ரீரங்கம், திருச்சி- 6.

பரிசு பெற்றோர் அனைவருக்கும் கோகுலம் வாசகர் சார்பில் வாழ்த்துகள்!

வத்தில் கண்ணாடிச் சில்லைச் செதுக்கி மன்னரிடம் தரலாம் என்று நினைத்த அந்த அறிஞரது யோசனை மறுக்கப் பட்டது!

மன்னர் கோபம் கலந்த பார்வையை சபையில் உள்ள அனைவரின் மீதும் வீச, அவர்களோ தங்கள் தலையைக் குனிந்து கொண்டார்கள்.

அப்பொழுது அமைச்சர் மதிசீலன் எழுந்து நின்றார். சபையில் உள்ள அனைவரின் கண்களும் ஒட்டு மொத்தமாக அவரையே பார்த்தன.

''இத்தனை பெரிய சபையில் மன்னர் வைத்த போட்டியில் பங்கு பெற ஒருவர் கூடவா இல்லை...! எனக்கே வெட்கமாக இருக்கிறது...!'' என்று சொல்லிவிட்டு மன்னருக்குப் பக்கத்தில் ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி கூஜாவை எடுத்தார். மீண்டும் சபையோர்களைப் பார்த்து ''... உங்க



விடைகள் :

1. வாஸ்கோடகாமா
2. ஷாஜஹான்
3. திப்புசுல்தான்
4. கிருஷ்ணதேவராயர்
5. புத்தர்
6. கபீர்தாஸ்
7. மும்தாஜ்
8. சிவாஜி
9. அக்பர்
10. ராஜாராம் மோகன்ராய்
11. ஆண்டாள்



ளுக்காக மன்னர் இன்னொரு முறை கண்ணாடி கூஜாவைக் கீழே போட்டு உடைத்து, மா இலை வடிவ கண்ணாடி சில்லை உங்கள் முன் காட்டுவார்....'' என்றதும் மன்னரைத் தவிர மற்றவர்களின் முகம் பிரகாசமாகியது.

மன்னர் மட்டும் கண்ணாடி கூஜாவை இன்னொரு முறை கீழே போட்டு உடைத்தால், மா இலை வடிவ கண்ணாடிச் சில் எப்படி கிடைக்கும்?

மன்னர் கமலவர்த்தன் தான் வைத்த போட்டியைக் கண்டு மனம் வெட்கினார். அமைச்சரின் சமயோசித புத்தியைக் கண்டு மகிழ்ச்சியுற்று, அவரைப் பாராட்டிப் பரிசுகளும் வழங்கினார். அதோடு, அன்றிலிருந்து விசித்திரமான போட்டிகள் வைப்பதையும் விட்டு விட்டார்!

- என். பொன் சேகர்,
தூத்துக்குடி - 628 003.



கேளுங்கள் சொல்லப்படும்

★ கு. கமலக்கண்ணன், நீடூர்.

? காந்தியடிகளைப் பார்த்து பிரிட்டிஷ் அரசு உண்மையாகவே பயந்ததா?

இதிலென்ன சந்தேகம்! காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை அறியாததால் ஏற்பட்ட சந்தேகமே இது. உங்களுக்கெல்லாம் பிடித்தமான ஒரு உதாரணம் கூறுகிறேன். 1921 ஆம் ஆண்டில் 'பக்தவிதுரா' என்ற இந்தி திரைப்படம் ஒன்று பம்பாயில் தயாரானது. இதில் விதுரராக நடித்தவர் அசப்பில் காந்தி மாதிரியே இருந்தார் என்பதற்காக படம் நிரந்தரமாகத் தடை செய்யப்பட்டது! பக்திப் படம் இது. ஆங்கில அரசாங்கம் காந்தியடிகளைப் பார்த்து நடுங்கியது என்பதை அறிய இது போதாதா?

★ மு. புகாரி, நாகூர்.

? கிரிக்கெட் வீரர் ஈ.ஏ.எஸ். பிரசன்னா புத்தகம் ஏதாவது எழுதியிருக்கிறாரா?



எழுதியிருக்கிறார். புத்தகத்தின் பெயர் ஒன்மோர் ஓவர் (ONE MORE OVER)

★ சு. மணிமேகலை, சேலம்.

? சுடப்பட்டு இறந்த அமெரிக்க ஜனாதிபதி ஜான் எஃப் கென்னடி ஏதாவது புத்தகம் எழுதியிருக்கிறாரா?



எழுதியிருக்கிறார். புத்தகத்தின் பெயர் PROFILES IN COURAGE. இது புலிட்ஸ்ஸார் (PULITZER) பரிசைப் பெற்ற புத்தகம்.

★ சு. செல்லக்கனி, திருமங்கலம்.

? ஆஸ்கார் பரிசுகளை எந்த அரசாங்கம் வழங்குகிறது?

எந்த அரசாங்கமும் இதை வழங்கவில்லை. ACADEMY OF MOTION PICTURE ARTS AND SCIENCES என்ற அமைப்புதான் இதை வழங்குகிறது.

★ வ. ஜான் சுந்தர், மயிலாடுதுறை.

? பார்வை இழந்தவர்களுக்கு ஃப்ரெய்லி எழுத்தைக் கண்டுபிடித்தது போல், காது கேளாதவர்களுக்கு யாராவது மொழி கண்டுபிடித்திருக்கிறார்களா?

நீ தொலைக்காட்சி பார்ப்பதில்லை என்

பது தெரிகிறது. ஞாயிற்றுக் கிழமை தேசிய நிகழ்ச்சிகளில் காது கேளாதவர்களுக்குச் செய்திகள் கூட ஒளிபரப்புகிறார்களே? இந்த சங்கேத மொழியைக் கண்டுபிடித் தவர் ABBE CHARLES MICHEL APEE என்ற பிரெஞ்சுக்காரர்.

★ பு. முத்துக் குமரன், கம்பம்.

? விலங்குகளை வைத்து எடுக்கப்பட்ட முதல் கார்டூன் திரைப்படம் எது?



வால்ட் டிஸ்னியின் "SNOW WHITE AND THE SEVEN DWARFS" தான் விலங்கு களை வைத்து எடுக்கப்பட்ட முதல் கார்டூன் படம்.

★ வ. முடியரசன், நாமக்கல்.

? இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணி நாம் மகிழ்கிறோம். பயனடைகிறோம்! இதற்கு ஒரு உதாரணம் கொடுங்கள். 18வது முறையாக நான் கேட்கும் கேள்வி இது! இதற்கு இதுவரை பதிலில்லை! இதற்கு உங்களால் பதிலளிக்க முடியவில்லை என் பதை ஒப்புக் கொள்ளுங்கள்!

பதிலளிக்கத் தெரியாமல் இல்லை! ஆனால், இது சிறுவர்களுக்கு அப்பாற் பட்டது! இருந்தும் இந்தக் கேள்விக்கான பதிலை, சிறுவர்கள் பயனடையும் உதாரண மாகவே தருகிறேன். ஆராய்ச்சிப் பணிகளுக் காகவும், நமது வசதிக்காகவும் உலகத்தை லாஞ்சிடியூட், லேடிட்யூடு (பூமத்திய ரேகை, கடக ரேகை) என்று விஞ்ஞானிகள் பிரித்திருக்கிறார்கள் இல்லையா? இப்படிப் பட்ட ரேகைகள் உண்மையில் இல்லை! ஆனால் இருப்பதாக எண்ணி, ஒரு நதியையோ, மலை அல்லது நகரங் களையோ உலகப் படத்தில் குறிப்பிடு கிறோம் இல்லையா? இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணிப் பயனடைகிறோம்! சரிதானே?

★ வ. முத்துமொழி, விருத்தாசலம்.

? தூக்கம் கெடுதல்தானே?

மனித உடலுக்கு உழைத்த களைப்புத் தீர உறக்கம் அவசியம். ஆனால் அதிக உறக்கம் முன்னேற்றத்திற்குத் தடை. அல்ஃ பெரட் வெர்னர் (ALFRED WERNER) என் பவர் ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த கெமிஸ்ட். இவர் தூக்கத்தில் ஒரு கனவு கண்டார். அதன் அடிப்படையில் செய்த ஆராய்ச்சி, MOLECULAR STRUCTURE பிரிவில் இவருக்கு நோபல் பரிசை (1913) வாங்கித் தந்தது!

★ பூ. புகழேந்தி, பூ. அன்புமணி, விருதுநகர்.


? எந்த ஒரு குழந்தைப் புத்தகத்தை யாவது அரசாங்கம் தடை செய்திருக்கிறதா?

அரசு தடைவிதிக்கும் அளவுக்கு இது வரை எந்த குழந்தைப் புத்தகமும் வர வில்லை! அந்த அளவுக்கு விபரீதமாக எந்த எழுத்தாளரும் எழுதவில்லை! ஆனால்,



சைனா ஒரு குழந்தைப் புத்தகத்திற்குத் தடை விதித்தது. அது உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர் லூயி கரால் எழுதிய "ஆலிஸ் இன் வொண்டர் லாண்ட்"! அறிவியல் அடிப்படையில் குழந்தைகளைச் சிந்திக்க விடாமல் செய்து விடும் என்று இந்த நூலுக்குத் தடைவிதித்த காரணத்தையும் சீன அரசு கூறியது. ஆனால், இந்தத் தடை இரண்டு ஆண்டுகளே இருந்தது! பிறகு நீக்கப்பட்டது. இது லூயி கராலுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி!

சோழநம்பி



இறைவன் அவதரித்தார்!

இறைமகன் யேசு அவதரித்த
இனிய நாளே இந் நாளாம்;
பெருமான் எங்கள் யேசுபிரான்
பிறந்த பொன்னாள் இந் நாளாம்!

குடிலில் பிறந்த கோமானாம்;
குவலயம் போற்றும் சீமானாம்!
விடியல் பொழுதாய், வீசு கதிராய்
விளங்கிடும் எங்கள் யேசுபிரான்!

கன்னி மேரி வயிற்றினிலே
கருணைத் தெய்வம் வந்துதித்தார்;
விண்ணும் மண்ணும் போற்றிடவே
விமலன் வந்து அவதரித்தார்!


அன்பு அஹிம்சை போதித்தார்;
அனைவரும் ஒன்றெனப் பாலித்தார்!
மன்பதை காக்கும் மாமருந்தாய்
மானிட தெய்வம் வந்துதித்தார்!

நல்ல மேய்ப்பன் நானெனவே
நாதன் வந்து அவதரித்தார்;
எல்லாம் வல்ல பரமபிதா
இங்கே வந்து அவதரித்தார்!


- அ. சுப்பையன், செட்டிகுறிச்சி



கடல் கரித்தது!
கதை: லட்சுமி விஸ்வநாதன்
அமைப்பு: 'ரே'
படம்:
ஒரு நாள் காட்டில் ஏழை விறகு வெட்டி பாபுவிடம் ஒரு கிழவர்—
பசிக்கிறது ஏதாவது கொடும்!
பாபு தன் உணவை கிழவருக்குக் கொடுத்தான்.
மகிழ்ச்சியுடன் உண்ட கிழவர், பாபுவுக்கு ஒரு மந்திரக் கோணியைத் தந்தார்...
இது என்ன கேட்டாலும் தரும். புளியங் கொட்டையைப் போட்டால் நிறுத்திக் கொள்ளும்!
வீட்டிற்கு வந்த பாபு கோணியிடம்— சோறு துணி கேட்டுப் பெற்று குடும்பத்தோடு மகிழ்ச்சியுடன் இருந்தான்.
1


பாபுவின் அண்ணன் கோபு பொறாமை கொண்டான்.
ஒரு நாள் தம்பியிடம் கோபு—
கோணியைக் கொடு, நான் வேண்டியதை வாங்கிக் கொண்டு திருப்பித் தந்து விடுகிறேன்!
சரி அண்ணா!
மந்திரக் கோணியுடன் கோபு கப்பல் ஏறினான்!
கப்பல் சமையல்காரர் கோபுவிடம்—
உப்பு எடுத்து வர மறந்துட்டோமே! இப்ப என்ன பண்றது?
என் கோணியிடம் கேட்டால் உப்புத் தரும் இதோ!


கோணியைத்திறந்த கோபு-
கோணியே! உப்புக் கொண்டு வா!
அடுத்த விநாடி... கோணி உப்புக் கொட்ட ஆரம்பித்தது!
ஆனால், நிறுத்த முடியவில்லை!
உப்பை... நிறுத்தப்பா!
ஐயோ! நிறுத்தத் தெரியலையே!
சற்று நேரத்தில் உப்பு கப்பலில் நிறைந்தது.


கப்பல் கொஞ்சம் கொஞ்சமாகக் கடலில் மூழ்கியது-
அப்பவும் உப்பு கொட்டுவது நிற்கவில்லை!
நல்ல நீருடன் இருந்த கடல் உப்புக் கரிக்கத் தொடங்கியது-
என்னது! இப்படி கரிக்கிறதே திடீரென!
இன்னமும் உப்புக் கொட்டிக் கொண்டுதான் இருக்கிறது. கடல் நீர் ஏன் கரிக்கிறது என்று இப்பொழுது தெரிந்ததா?



தேவனே... தேவனே...

திருத்தி மதிப்பெண் போடப்பட்ட விடைத்தாள்களை ஆசிரியர் கொடுத்து முடித்தார்.

''இந்தக் காலாண்டுத் தேர்வைப் பொறுத்தவரை நமது வகுப்பின் முதல் மாணவன் என்ற தகுதியை பால்ராஜ் பெறுகிறான். இரண்டாவது இடத்தைப் பெறுபவன் பரிசுத்தம். எங்கே, இருவருக்கும் உங்கள் வாழ்த்துகளைத் தெரிவியுங்கள்'' என்று ஆசிரியர் கூறியதுதான் தாமதம், மாணவர்கள் கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

''பால்ராஜ், எனது வாழ்த்துக்கள்'' என்று கைகொடுத்தான் பரிசுத்தம்.

''நன்றி பரி. உனக்கும் எனது வாழ்த்துகள்,'' என்று நண்பனைப் பாராட்டிய பால்ராஜ் ''உன் மொத்த மார்க் எவ்வளவு?'' என்று கேட்டான்.

''எழுநூற்றி முப்பத்தெட்டு''

''என்னுடைய மார்க் எழுநூற்று நாற்பது. இரண்டு மார்க்தான் நான் கூட. அவ்வளவுதான்'' என்று தனது நண்பனின் திறமையைப் பாராட்டி மகிழ்ந்தான் பால்ராஜ்.

வீட்டுக்கு வந்த பரிசுத்தம், வழக்கப்படி விளையாடப் போகாமல், தன் அறைக்குச் சென்று விடைத்தாள் மடித்த கட்டை எடுத்தான். அறிவியல் தாளை உருவி முதலில் எடுத்தான். நூற்றுக்கு அறுபத்திரண்டு மார்க் அதில். இன்னும் மூன்று மார்க் அதிகமாக வாங்கி விட்டால் வகுப்பில் அவன்தான் முதல். பால்ராஜ் இரண்டாவதுதான்.

பரிசுத்தத்தின் தந்தை ஞானசேகர், ''இந்த அரையாண்டுத் தேர்வில் நீ முதல் மாணவனாக வந்து காட்டு. கிறிஸ்துமஸுக்கு, உனக்கு நீ கேட்ட புது சைக்கிளை உடனே வாங்கித் தந்து விடுகிறேன்'' என்று உசுப்பி விட்டிருந்தார்.

பரிசுத்தம் நன்றாக உழைத்துப் படிக்கக்கூடியவன்தான். எப்படியும் மூன்று அல்லது நான்காவது இடத்தைப் பிடித்து விடுவான். அவனுக்குப் போட்டியாக வரக் கூடியவன் பால்ராஜ் தான். தந்தை சைக்கிள் ஆசையைக் காட்டி உசுப்பி விட்டதும், பரிசுத்தம், எப்பாடுபட்டாவது முதல் இடத்தைப் பெறுவது என்று உறுதி எடுத்துக் கொண்டுதான் கடுமையாகப் படித்தான். ஆனால், அறிவியல் அவன் காலை வாரி விட்டது.

விடைத்தாளைக் கையில் வாங்கிப் பார்த்ததுமே பரிசுத்தத்திற்குத் தெரிந்து விட்டது தன்னால் முதல் இடத்தைப் பிடிக்க முடியாது என்று. இரண்டு வினாக்களுக்கு அவனால் விடை எழுத முடியவில்லை.

சைக்கிள் ஆசை மனதை அடிமை கொண்டிருந்ததால், பரிசுத்தம் ஒரு மோசமான காரியத்தைச் செய்தான். தனக்கு விடை தெரியாத இரண்டு அறிவியல் கேள்விகளுக்கும் உரிய எண்களைக் கொடுத்து, விடைத்தாளில் விடை எழுத இடம் விட்டு வைத்து, மடித்துக் கொடுத்து விட்டான்!

அவன் எதிர்பார்த்தது போலவே

-சின்ன பாபு-

எத்தனை சொற்கள்?

போட்டி

''டில்'' என்று முடியும் எத்தனை சொற்களை உங்களால் கண்டுபிடிக்க முடியும்? உதாரணம் : தொட்டில். நீங்கள் கண்டுபிடிக்கும் சொற்களுக்குப் பொருள் இருக்க வேண்டும். பொருளில்லாது உதாரணமாக ''கனைட்டில்'' என்ற பொருளில்லாத ஒரு சொல்லை எழுதியனுப்பினால், அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டோம். அதிக அளவில் யார் எழுதியனுப்புகிறார்களோ அவர்களுக்குக் கண்டிப்பாகப் பரிசு உண்டு. கூப்பனை இணைக்க மறந்து விடாதீர்கள்.

எத்தனை சொற்கள்?—போட்டி

பெயர் : ________________

வயது : ________________

முகவரி ________________

____

____

பின்கோடு : ________________

முடிவு தேதி : 16.12.91

ஆசிரியர் அந்த இடங்களைத் தொடாது மற்ற விடைகளுக்கு மார்க் போட்டு, மொத்தமாகக் கூட்டிப் போட்டிருந்தார்!

விட்டு வைத்திருந்த இரண்டு இடங்களிலும் இப்பொழுது 'பரபர'வென்று விடையை, குறிப்பேட்டைப் பார்த்து எழுதி முடித்தான் பரிசுத்தம்! ஆசிரியர் வீடு அவனுக்குத் தெரியும். உடனே எடுத்துச் சென்று 'சார், மார்க் போட இரண்டு வினாக்களுக்கு மறந்து விட்டீர்கள்!' என்று கேட்டு, மார்க்கை வாங்கிக் கொண்டு, முதலிடத்தைப் பெற்று, தந்தையிடமிருந்து கிருஸ்துமஸ் பரிசாக புது சைக்கிளை வாங்கி விட வேண்டியதுதான் என்று கிளம்பினான்!

தந்தை அளித்த பிறந்த தினப் பரிசை, ஏழு ஏழை மாணவர்களோடு பகிர்ந்து கொண்ட போதும், 'சர்ச்' ஆண்டு விழா விருந்தின் போது, மெழுகுவர்த்தி விற்கும் காலில்லாத ஏழைச் சிறுமி லில்லியை முதுகில் தூக்கி வந்த போதும் பாதிரியார் அவனை மனம் நெகிழ்ந்து வாழ்த்தி இருக்கிறார்.

''பரிசுத்தம், சில பேர்களுக்குத்தான் பெயர்ப் பொருத்தம் சரியாக அமையும். உனக்கு மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது குழந்தாய்! உன் பெயர் மட்டுமல்ல, உன் செயல்களும் கூடப் பரிசுத்தமே! கர்த்தர் உன் அருகில் இருந்து உன்னைக் காப்பார்!''

'அப்படிப் பல பேராலும் நல்லவனாகப் பாராட்டப்பட்ட நாம், இப்பொழுது இப்படி அசுத்தமான செயலைச் செய்கிறோமே! இது கர்த்தருக்கு மகிழ்ச்சியைத் தருமா? அவரை மனம் வருந்த வைக்காதா?' என்று பரிசுத்தம் தயங்கினான். ஆனாலும் மனதில் பிரும்மாண்டமாக வளர்ந்து விட்ட சைக்கிள் ஆசை எல்லாவற்றையும் விழுங்கி விட்டது! வாசல் அறையை நெருங்கியதும் ஒரு தயக்கம்.

அந்த அறையில்தான் பரிசுத்த இதயம் கொண்ட ஏசுபிரானின் கனிவு கனியும் படம் மாட்டப்பட்டிருந்தது. மார்பில் ஒளி இதயத்தோடு மிளிர்ந்த அந்தத் திருவுருவைப் பார்த்து வீட்டை விட்டு வெளியே செல்கையிலெல்லாம் அவன், ''ஏசு பிரானே! உங்கள் பரிசுத்த இதயத்திற்கு அருகில் இருக்கும் தகுதி எனக்கு இருக்கிறது'' என்று அருகே சென்று சிலுவைக் குறியிட்டுக் கொள்வான். இப்பொழுது அந்தப் படம்



மாட்டியிருந்த அறையைக் கடக்கவே அவன் தயங்கினான்! அறிந்தே பாவ மல்லவா செய்யப் போகிறான்! அந்த அறை வழியாகப் போகாது, பின்பக்க வழியாக வந்து, தோட்டப் பக்கமாக சுற்றிக் கொண்டு போனான்! குற்றம் செய்யப் போகும் பாவ உணர்வு மனதை முள்ளாய் உறுத்திக் குத்தினாலும், சைக்கிள் ஆசை எல்லாவற்றையும் துரத்தி விட்டது!

அவன் போன போது ஆசிரியர் வீட்டில் இருந்தார்.

''வா பரிசுத்தம்,'' என்று வரவேற்ற அவர், ''இப்பத்தான் பால்ராஜ் வந்து விட்டுப் போகிறான். நீ கூட எதிரில் பார்த்திருப்பாயே?'' என்று கேட்டார்.

''இல்லையே சார்'' என்றான் பரிசுத்தம்.

''பரிசுத்தம்... உனக்கு என் நல் வாழ்த்துக்கள்! ஆமாம், நீதான் முதல் மாணவன்!''

புரியாமல் ஆசிரியரைப் பார்த்தான் பரிசுத்தம்.

''கூட்டிப் போடும் போது. தமிழ் விடைத்தாளில் மூன்று மார்க் அதிகம் போட்டு விட்டேனாம்! அதைக் கொண்டு வந்து காட்டி திருத்திக் கொண்டு 'நீதான் முதல் மாணவன்' என்பதை உறுதி செய்து விட்டுப் போனான் பால்ராஜ்.''

'மனசாட்சிக்குப் பதில் சொல்லி முதல் இடத்தை விட்டுக் கொடுத்து தேவனுக்கு அருகே இடம் பிடித்துக் கொண்டு விட்டான் பால்ராஜ். ஆனால் நானோ, சைக்கிள் ஆசையால் தேவனுக்கு அருகே இருந்த இடத்தைப் பறி கொடுத்து வகுப்பில் முதல் இடம் பிடிக்க வந்திருக்கிறேனே!' என்று அழுத பரிசுத்தம், மண்டியிட்டு சிலுவைக் குறியிட்டான்.

''தேவனே! நான் உமக்குப் பிரியமுள்ள பரிசுத்தமாகவே இருக்க வேண்டும். சாத்தானிடம் என்னைத் தள்ளி விடாதீர்கள்!''

ஆசிரியர் புரியாமல் அவனைப் பார்த்தார்!

வண்ணம் தீட்டுங்கள்!





வேணுமானா வாங்கு!

முருகனின் தந்தை பள்ளி ஆசிரியர். அந்தக் கிராமத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்புதான், மாற்றலாகி வந்திருந்தார். எட்டாம் வகுப்பு வரை உள்ள அந்தப் பள்ளியில் முருகன் ஆறாம் வகுப்பில் படித்து வந்தான்.

முருகன் படிப்பில் முதல் மாணவன். ஒழுக்கத்திலும் கூட அவன்தான் முதல் மாணவன்.

முருகனுக்கு பொய் பேசுபவர்களையும் பிறரை ஏமாற்றுபவர்களையும் கண்டால் கொஞ்சங்கூடப் பிடிக்காது.

அந்தக் கிராமத்தில் பொன்னுசாமி என்பவர் கடை வைத்திருந்தார். அவரது கடையை விட்டால் அக் கிராமத்தில் வேறு கடைகளே கிடையாது. எந்த சாமான்கள் வாங்க வேண்டும் என்றாலும் 15 கல் தொலைவில் இருந்த டவுனுக்குத்தான் செல்ல வேண்டும்.

பொன்னுசாமி கடையில் மளிகை சாமான்கள் முதல், காய்கறி, எண்ணெய் மற்றும் ஷாப் சாமான்கள் வரை அனைத்தும் கிடைக்கும். அவர் கடையில் இல்லாத சாமான்களே இல்லை எனச் சொல்லலாம்.

கிராமத்தில் ஒரே கடை என்பதால் அவர் கடையில் எப்போதும் கூட்டம் இருக்கும்.

பொன்னுசாமி பேராசைக்காரர். படிக்குப் பாதி இலாபம் வைத்துப் பொருள்களை விற்று வந்தார். போட்டிக்கு வேறு கடை ஏதும் கிராமத்தில் இல்லாதது அவர் காட்டில் மழைதான்.

அதிக இலாபம் வைத்து விற்பதோடு பொன்னுசாமி நிறுத்திக் கொள்ளவில்லை. பொருளில் கலப்படம் செய்து விற்றார். அரிசியில் ஏராளமான கல். மக்கிப் போன ரவை. சிக்கு வாடை வீசும் எண்ணெய். உளுத்துப் போன தானியங்கள். சொத்தையும் முற்றலுமான காய்கறிகள்.

சாமான்களில் உள்ள குறைபாடுகளை யாராவது சுட்டிக்காட்டினால் அவர்களிடம் எரிந்து விழுவார் பொன்னுசாமி. ''இந்த பொட்டல் காட்டில் இதுனாச்சும் கிடைக்கிறதேன்னு சந்தோஷப்படுங்க!'' என்பார் என்னவோ இலவசமாகக் கொடுப்பது போல!

அப்படித்தான் ஒரு தடவை முருகன் வெண்டைக்காய் வாங்க பொன்னுசாமி கடைக்குச் சென்றான். வெண்டைக்காய் குவியலில் இருந்து முற்றல் இல்லாது நல்லதாகப் பொறுக்கி எடுத்து வைத்து, அரை கிலோ கொடுக்கச் சொன்னான்.

அவ்வளவுதான். பொன்னுசாமிக்கு வந்ததே கோபம்! முருகன் பொறுக்கி வைத்திருந்த வெண்டைக்காய்களை அள்ளி அப்படியே மீண்டும் குவிய

எஸ். மஹாலக்ஷ்மி

லுடன் சேர்த்தார்.

''தம்பி! இந்தப் பொறுக்கற வேலையெல்லாம் இங்கே வேண்டாம். அப்படியே அள்ளிப் போட்டு அரைக் கிலோ வாங்கிக்கத் தயாராயிருந்தா, வாங்கிக்க! இல்லே, நடையைக் கட்டு'' என்றார் கடுகடுப்புடன்.

''ஐயா! சொத்தையும் முற்றலுமாக இருப்பதை வாங்கிச் சென்று எப்படி உபயோகிப்பது? அதனால்தான் கூடிய வரை நல்லதாகப் பார்த்து எடுத்து வைத்தேன்'' என்றான் முருகன் பணிவோடு.

''வெண்டைக்காயை நான் ஒன்றும் தயார் பண்ணலே! செடியிலிருந்து கிடைக்குது. முற்றல் சொத்தைன்னு பூதக் கண்ணாடி வைச்சுப் பார்த்து நான் வாங்கலை! சும்மா போவியா'' என்று கடுமையாகப் பேசினார் பொன்னுசாமி.

முருகன் மனம் வெதும்பினான். பொன்னுசாமியைப் போல் உள்ள ஏமாற்றுக்காரர்களைத் தட்டிக் கேட்போர் யாருமே இல்லையா? அவர் செய்வது தவறு என்பதை அவரே உணர்வதற்கு என்ன வழி?

தீவிர யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தான் முருகன். தனக்கு உதவியாக அக் கிராமத்துப் பெரிய மனிதர்கள் நால்வரைத் துணைக்கு அழைத்துக் கொண்டான். அவர்களைப் பொன்னுசாமி கடைக்குச் சற்று அருகேயுள்ள மரத்தடியில் நிற்கச் சொல்லிவிட்டு, தான் மட்டும் பொன்னுசாமி கடைக்குச் சென்றான். தேவைப்படும்போது முருகனுக்குத் துணை வரத் தயாராக அந்தப் பெரிய மனிதர்கள் காத்து நின்றார்கள்.

முருகனைக் கண்டதும், ''தம்பி! காலை வேளை, தகராறு ஏதும் பண்ணாமல் உனக்கு வேணுங்கிற சாமான்களை வாங்கிக்கிட்டு போ! குத்தம் குறை சொல்லாதே. கடையிலே கூட்டம் ஜாஸ்தியாயிருக்கு'' என்றார் பொன்னுசாமி.

''ஐயா, வெண்டைக்காய் அரைக் கிலோ கொடுங்கள்'' என்றான் முருகன்.

பொன்னுசாமி முற்றலும், சொத்தையும், வாடலுமான வெண்டைக்காயை நிறுத்தி முருகன் வைத்திருந்த பையில் கொட்டினார். ''நாலு ரூபாய் கொடு'' என்றார்.

முருகன் தன் சட்டைப் பையிலிருந்து இரண்டு, இரண்டு ரூபாய் நோட்





டுக்களைப் பொன்னுசாமியிடம் கொடுத்து விட்டு கடையிலிருந்து சற்றே நகர்ந்தான்.

''தம்பீ, தம்பீ! இந்தா! இந்த நோட்டுக்கள் செல்லாது. வேறு நோட்டு கொடு'' என்ற பொன்னுசாமி, முருகன் கொடுத்த நோட்டுக்களை அவனிடமே திருப்பிக் கொடுத்தார்.

''ஐயா, என்னிடம் வேறு ரூபாய் நோட்டு இல்லையே!'' என்றான் முருகன்.

''இல்லையென்றால் காயை எடுத்து வை. நீ கொடுத்த நோட்டு எண்ணெய் படிந்து லேசாகக் கிழிந்திருப்பதால் அது செல்லாது. செல்லாத நோட்டை என் தலையில் கட்டி ஏமாற்றலாம் என்று பார்க்கிறாயா?'' என்றார் கடைக்காரர் கடுமையாக.

''என்னங்க! அரசாங்கத்தில் அச்சடிச்ச நோட்டு. நானா இதைத் தயார் செய்கிறேன்? இதைப் போய் பூதக் கண்ணாடி வைத்துப் பெரிசு பண்ணலாமா?'' என்று பணிவாகக் கேட்டான் முருகன்.

''இத பாரு! காலங்கார்த்தாலே தகராறு வைச்சுக்காதே! வெண்டைக் காயை வைத்து விட்டு இடத்தைக் காலி பண்ணு'' என்று முருகனை மிரட்டினார் பொன்னுசாமி.

முருகன் பயப்படவில்லை. ''ஐயா! செல்லாத சாமான்களையும் காய்கறிகளையும் எங்களைப் போன்ற அப்பாவிகள் தலையில் கட்டலாமா? செல்லாதது என்று இந்த ரூபாய் நோட்டுக்களை நீங்கள் வாங்க மறுத்து வேறு நல்ல ரூபாய் நோட்டுக்களை கேட்கும்போது, நாங்கள், கொடுக்கும் பணத்திற்கு நல்ல தரமான சாமான்களைத் தருமாறு கேட்பதில் என்ன தவறு? உங்களுக்கு உள்ள அதே நியாயம், எங்களுக்குக் கிடையாதா? நன்றாக சிந்தித்துப் பாருங்கள்'' என்றான்.

மரத்தடியில் நின்று கொண்டிருந்த கிராமத்துப் பெரியவர்களும் மெதுவாக வந்து முருகனோடு சேர்ந்து கொண்டார்கள்.

பொன்னுசாமி ஒருகணம் திகைத்துப் போனார். முருகன் வயதில் மிகவும் சிறியவனாக இருப்பினும் அவனது கூற்றில் உள்ள நியாயத்தைப் பொன்னுசாமி உணரத் தொடங்கினார். அன்று முதல் பொன்னுசாமி கடையில் தரமான பொருள்கள் நியாயமான விலைக்குக் கிடைத்தன.

முருகனை கிராமத்து மக்கள் வெகுவாகப் பாராட்டினர்.



''மிக தொலைவில் உள்ளது ஆப்பிரிக்காவா? சந்திரனான்னு கேட்டா.. ஆப்பிரிக்கான்னு சொல்றியே! எப்படி?''

''இங்கிருந்து பார்த்தால் சந்திரனைப் பார்க்க முடிகிறது. ஆனால், ஆப்பிரிக்காவை பார்க்க முடியலையே சார்...!''

- ஏ. வி. இளங்கோ.

''இது பரம்பரை வியாதி!''

''எது டாக்டர் சக்கரை வியாதியா?''


''இல்லே, இது மாதிரி ஊசி போட்டுக்கிட்டுக் கடன் சொல்றது!''

- ஆர். கே. அருண், குந்தா.






பூமா
தேவி
கொடுத்தா!
கருத்து: கே.என்.முத்து, சென்னை.
அமைப்பு: ரே... சித்திரம்: கோவி.
ராமுவும் கோபுவும் வரும்போது...
அட! மணிபர்ஸ்!.
கீழே ஒரு பர்ஸ் கிடக்கிறது.
ராமு பர்ஸை எடுத்துப் பார்த்து..
இருநூறு ரூபாய் இருக்கு!.
முகவரி இருக்கா பார்! சேர்த்துடலாம் ...
இருக்கு! ஆனா இது பூமாதேவியா தந்த பரிசு. எதுக்கு திருப்பித் தரணும்?
இது அநியாயம்.
உன் பங்குக்கு வேணுமானா நூறு ரூபாய் தரேன்
எனக்கு வேண்டாம்பா! தொலைத்தவர் என்ன பாடு படறாரோ!


படட்டுமே! நாம்ப என்ன பண்றது? நன்றி கோபு!..
கோபு எவ்வளவு கூறியும் ராமு மனம் மாறவில்லை.
ஒரு நாள் ராமு பக்கத்து ஊருக்குச் சென்றான்.
இதோ! ஒரு மஞ்சள் கர்சிப் முட்டை!..
பிரித்துப் பார்த்தான்.
ஐம்பது ரூபாய்! பூமாதேவி! நன்றி! யாருக்கு வேணும் இந்த முகவரி?..
இரவு வீடு திரும்பிய போது...
அடிபட்ட போது ராமுக்காக வேண்டிக்கிட்ட பிரார்த்தனைப் பணம் ஐம்பது ரூபாயை...



உண்டியல்லே போட மஞ்சள் கர்ச்சீப்பிலே முடிஞ்சு வைச்சேன். இப்பக் காணோம்! முகவரி கூட எழுதி வைச்சிருந்தேன்.
அட! மாமா! பிரார்த்தனைப் பணமா அது?
எனக்காக மாமா உண்டியல்லே போட இருந்த பணமா அது?.. அதையா நான்?.. சச்சே!
நல்லவன் கையிலே கிடைச்சா திரும்பிவிடும்! இல்லே ராஜி மாதிரிப் பையனிடம் கிடைச்சால் அவ்வளவுதான்...
நம்ப ராஜிவா இப்படி?
பூமாதேவி கொடுத்தான்னு தானே எடுத்துக்குவான்!
பிறர் பணம்! விசாரிச்சுக் கொடுக்கணும்னு நினைக்கவே மாட்டான்!
எனக்காக மாமா வைத்திருந்த பிரார்த்தனைப் பணத்தையா நானே வைத்துக் கொண்டேன்!


எத்தனை பேரை வருந்த வைத்திருக்கிறேனோ!
... கோபு சொன்னதைக் கேட்காமப் போனேனே!
உன்னோ வந்து...
டாடா! பணம் எங்கும் போகலே! இதோ! நான் மாறிட்டேன்...
இனிமே கீழே ஏதாவது பொருள் கிடந்தா நானே வைச்சுக்க மாட்டேன்! விசாரிச்சுக் கொடுத்துடுவேன்!

கற்பனைக் கடிதம்



ஒன்பதாம் வகுப்பின் தமிழாசிரியர் மாணவர்களுக்கு ஒரு போட்டியை அறிவித்தார்.

''இது கடிதம் எழுதும் போட்டி. இரண்டு பக்கங்களுக்கு மிகாமல், உங்கள் நண்பன் உங்களுக்கு எழுதுவதாக அது இருக்க வேண்டும். அதோடு முக்கியமானது, அக்கடிதம் இருபதாண்டுகளுக்கு முன்னதாக எழுதப்பட்டதாக இருக்க வேண்டும்!'' என்று கூறினார் ஆசிரியர்.

நிபந்தனைகளைக் கேட்ட மாணவர்கள் வியந்து நின்றனர். மாணவர்களில் ஒருவன் எழுந்தான்.

''ஐயா, இருபது ஆண்டுகளுக்கு முன் நாங்கள் பிறந்திருக்கவே மாட்டோமே?

''அடுத்து வரும் இருபத்தென்றாம் நூற்றாண்டில் வாழ்க்கை எப்படி இருக்கும்? அறிவியல் முன்னேற்றத்தால் என்னென்ன மாறுதல்கள் உண்டாகக் கூடும் என்பதை எல்லாம் கற்பனை செய்து எழுதப் பெற்ற நூல்கள் பல வெளிவரத் தொடங்கியுள்ளன. அப்படிக் கற்பனை செய்து எழுதுவது சற்று சிரமமானதே. ஆனால், இருபதாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றிருக்கக்கூடிய காரியங்களைக் கற்பனை செய்து எழுதுவது எளிது. இருபதாண்டுகளுக்கு முன்னால் நீங்கள் இதே ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அச்சமயத்தில் கொடைக்கானலில் படித்துக் கொண்டிருக்கும் உங்கள் நண்பன் உங்களுக்குக் கடிதம் எழுதுவதாகக் கற்பனை செய்து கொண்டு எழுதுங்கள். உங்கள் நண்பனின் பெயர் கற்பனையாக இருக்கலாம்; ஆனால் கடிதத்தில் எழுதப்படும் செய்தி அந்த காலகட்டத்தைச் சேர்ந்த உண்மையான நிகழ்ச்சியாக இருக்க வேண்டும்,'' என்று விளக்கினார் ஆசிரியர்.

''ஐயா, இப்போட்டி சற்று வித்தியாசமானதாக இருக்கிறது; இருந்தாலும் எங்கள் கற்பனைத் திறனுக்கு விடுக்கப்பட்ட சவாலாக இதை ஏற்று, எங்கள் திறமையைக் காட்டுவோம்'' என்றான் வகுப்பு மாணவத் தலைவன் கண்ணன்.

''நாளை மாலை நான்கு மணிக்கு இப்போட்டி, இதே வகுப்பறையில் நடைபெறும். போட்டியின் முடிவு மறுநாள் அறிவிக்கப்படும். முப்பது கடிதங்

ஜோர்ஜ் சந்திரராஜ்

களும் பரிசீலிக்கப்பட்டு இரு கடிதங்கள் மட்டும் பரிசுக்குரியனவாகத் தேர்வு செய்யப்படும். அவற்றிற்கான பரிசுகள், பள்ளி ஆண்டு விழாவின் போது வழங்கப்படும்,'' என்று கூறி ஆசிரியர் விடை பெற்றார்.

இப்போது மாணவர்கள் அனைவரும் பள்ளி அலுவலகத்தை நோக்கிச் சென்றனர். அலுவலகத்தின் முன் உள்ள சில தகவல் பலகைகளைக் கவனமாய் வாசித்தனர்; சில குறிப்புகளையும் தயார் செய்து கொண்டனர். இருபதாண்டுகளுக்கு முன்னர் பணி செய்த தலைமை ஆசிரியர், பிற ஆசிரியர்களின் எண்ணிக்கை, பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி சதவீதம் போன்றவை பற்றிக் குறிப்பெடுத்துக் கொண்டனர்.

ஆசிரியர் கூறியபடியே மறுநாள் மாலை கற்பனைக் கடிதப் போட்டி நடைபெற்றது. முப்பது மாணவர்களும் அந்த முப்பது நிமிடங்களில், உண்மைச் செய்திகள் அடங்கிய அழகான கற்பனைக் கடிதங்களை எழுதி முடித்தனர்.

ஆசிரியர் எல்லாக் கடிதங்களையும் பரிசீலனை செய்தார். மாணவர்களின் கற்பனா சக்தியை மனதுக்குள் பாராட்டினார். ஒருவருக் கொருவர் சளைத்தவர் அல்ல என்பதைப் புரிந்து கொண்டார்.

சில மாணவர்கள் கோடைக்கானலின் அழகை அற்புதமாக வர்ணித்திருந்தனர். சிலர் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சிப் பூவைக் குறித்து எழுதியிருந்தனர். இருபதாண்டுகளுக்கு முன்னால் குறிஞ்சிப்பூ மலர்ந்த ஆண்டினைக் கணக்கிட்டு, அது பூத்துள்ளதையும் அதன் அழகைக் காணவருமாறு அழைத்தும் கூடச் சிலர் கடிதம் எழுதி இருந்தனர்.


இன்னும் சிலர் இருபதாண்டுகளுக்கு முன்னர் பெற்ற தேர்ச்சி சதவீதத்தை எழுதி அப்போதைய தலைமை ஆசிரியரைப் புகழ்ந்து எழுதி இருந்தனர். இப்படி எல்லாக் கடிதங்களும் சுவையாகவும் உண்மையாகவும் இருந்தன.

கடிதத்தின் தொடக்கம், வணக்கம் தெரிவித்திருந்த முறை, செய்தி, முடிவு முகவரி அனைத்தும் அழகுற எழுதப் பெற்றிருந்தன. பரிசுக்குரிய இருகடிதங்களைத் தேர்ந்தெடுக்க ஆசிரியர் மிகவும் சிரமப்பட்டார்.

குற்றங்குறை உள்ள கடிதங்களைத் தள்ளிவிடலாம் என்று மீண்டும் மீண்டும் எழுத்துப் பிழைகளைத் தேடித் தேடிப் பார்த்தார். எந்தக் கடிதத்திலும் எழுத்துப் பிழை இல்லை.

முப்பது கடிதங்களின் தொடக்கப் பகுதிகளை மட்டும் ஒருசேர வாசித்தார். பின்னர் எல்லாக் கடிதங்களின் செய்திப் பகுதிகளை மட்டும் தொடர்ந்து வாசித்துப் பார்த்தார். அவரால் தேர்வு செய்ய முடியவில்லை. எல்லாமே சிறப்பாக எழுதப்பெற்றிருந்தன.

பின்னர் எல்லாக் கடிதங்களின் முகவரிப் பகுதிகளையும் ஒருசேர வாசித்தார். இப்போது அறிவில் பொறி




தட்டியது. அதன்படி பரிசீலித்தார். ஒரே ஒரு கடிதத்தை மட்டும் தேர்வு செய்து கொண்டு அதற்கு மட்டும் பரிசு வழங்கத் தீர்மானம் செய்து கொண்டார்.

மறுநாள், போட்டியின் முடிவை அறிந்து கொள்ள மாணவர்கள் மிகுந்த ஆர்வமாய் இருந்தனர்.

''மாணவர்களே! பரிசுக்குரியதைத் தேர்வு செய்வதற்கு நான் மிகவும் சிரமப் பட்டேன். ஏனென்றால் அத்தனை கடிதங்களும் மிகவும் அழகாக அமைந்திருந்தன. கற்பனைத்திறன், சொல்லாட்சி ஆகியவற்றில் ஒன்றை ஒன்று விஞ்சி இருந்தன. அது மட்டுமல்ல, எல்லாக் கடிதங்களும் இருபதாண்டுகளுக்கு முன்னர் நமது பள்ளிச் சிறப்புக்களில் எதையேனும் ஒன்றைக் கோடிகாட்டி இருந்தன. அவற்றை மதிப்பீடு செய்யும் போது எந்தக் கடிதத்திலும் கருத்துப் பிழை இல்லை என்பதை அறிந்தேன். உண்மைச் செய்திகளைத் தான் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றிருந்தன. அதனால், பரிசுக் குரியதைத் தேர்வு செய்வது மிகவும் சிரமமாயிற்று,'' என்றார் அவர்.

பரிசு பெற்றவர்களை அறிந்து கொள்ள மாணவர்கள் மிகவும் ஆர்வமாய் இருந்தனர். அவர்கள் ஆவலும் எதிர்பார்ப்பும் கூடிக் கொண்டே இருந்தன.

''கடிதங்களின் முகவரிப் பகுதிகளை வாசிக்கும் போதுதான் ஒரே ஒரு கடிதத்தில் மட்டும் ஒரு முக்கிய மாற்றத்தைக் கவனித்தேன். அந்த ஒரே ஒரு கடிதத்தில் மட்டும்தான் முகவரியில் பின்கோடு எண்ணைக் குறிக்கவில்லை; மற்ற அனைவரும் அதைக் குறிப்பிட்டு இருந்தனர். அதனால் முதற் பரிசுக்குரியதாக அதையே முடிவு செய்தேன். முதற் பரிசு பெற்ற மாணவன், தான் பின்கோடு



என்னைக் குறிப்பிடாததன் காரணம் என்ன என்பதைக் கூறுவான்,'' என்று கூறி நிறுத்தினார் ஆசிரியர்.

ஆசிரியர் யாரை அழைக்கப் போகிறார் என்பதை அறிய மாணவர்கள் ஆர்வம் காட்டினர்.

ஆசிரியர் தொடர்ந்து பேசினார். ''பனியரசு, நீ பின்கோடு எண்ணைக் குறிப்பிடாதது ஏன் என்பதை இப்போது கூறு.''

பனியரசு எழுந்து நின்றான். ''ஐயா, இருபது ஆண்டுகளுக்கு முன் நம் இந்திய நாட்டில் பின்கோடு எண் அறிமுகம் செய்யப்படவில்லை. அது 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள்தான் அறிமுகமானது. எனவே, இருபது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்ற கடிதத்தில் பின்கோடு இருக்காதல்லவா? எனவேதான் நானும் எனது கடிதத்தில் பின்கோடு எண்ணை எழுதவில்லை,'' என்றான்.

''நீ உன் கற்பனைக் கடிதத்தின் முகவரியில், பின்கோடு எண்ணை எழுதாததால் தான் முதற் பரிசு பெறுகிறாய்,'' என்று ஆசிரியர் சொன்னார்.

பிற மாணவர்கள் அனைவரும் தங்கள் கற்பனைக் கடிதத்தில் ஏற்பட்ட தவறை அறிந்து கொண்டனர்; பனியரசைப் பாராட்டினர்.



மகாத்மாவும் குழந்தைகளும்

இந்தியாவிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் சிறுவர் சிறுமியர் எழுதும் கடிதங்களுக்குப் பதில்களைத் தவறாது அனுப்புவது காந்திஜிக்கு வழக்கம். அவருக்குக் கடிதம் வரைந்த எந்த ஒரு குழந்தையும் பதில் கிடைக்காது ஏமாந்து போனதில்லை!

எல்லாக் குழந்தைகளும் பதில் எழுதுவதால் பாபுஜியினால் குழந்தைகளுக்கு நீண்ட கடிதங்கள் எழுத முடியவில்லை. அது பற்றிக் குழந்தைகளுக்கு அவரிடம் கோபம் கோபமாக வரும். ஒரு சமயம் ஒரு குழந்தை எழுதிய கடிதத்தில், 'பாபுஜி நீங்கள் எப்பொழுதும் கீதையைப் பற்றிக் கூறுகிறீர்கள். கீதையில் அர்ஜுனன் ஒரு கேள்விதான் கேட்கிறான். பகவான் கிருஷ்ணனோ முழு அத்தியாயமாகப் பதிலளிக்கிறார்! நீங்களோ, நாங்கள் பக்கம் பக்கமாகக் கேள்வி கேட்டு எழுதினாலும் ஒரே வார்த்தையிலோ அல்லது ஒரே வாக்கியத்திலோ பதில் கூறி முடித்து விடுகிறீர்கள். இது நியாயமா பாபுஜி? என்று கேட்டிருந்தனர். அதற்கு தாம் அளித்த பதிலில் பாபு கூறியிருந்ததாவது:

''கிருஷ்ண பகவான் ஒரு அர்ஜுனனுக்குத்தான் பதில் சொல்ல வேண்டியிருந்தது; நானோ பல அர்ஜுனர்களுக்கு பதில் சொல்ல வேண்டியுள்ளதே! எனக்குச் சற்று கருணை காட்ட வேண்டாமா? இந்தப் பதிலைப் படித்ததும் சிறுவர் சிறுமியர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர்.

- நீடூர், ஆர். ஆமினா பீவி.



மாவீரன் அலெக்சாண்டர் சிறுவயதில் லியோனிடாஸ் என்ற ஞானியிடம் கல்வி பயின்றார். ஒருநாள் பூஜை செய்யும் போது அலெக்சாண்டர் சாம்பிராணியை வாரி அள்ளிக் கொட்டியதைக் கண்ட லியோனிடாஸ், ''சாம்பிராணி இப்போது குறைவாக உள்ளது. இப்படி அள்ளிப் போடாதே! நீ இத்தகைய பொருள்கள் நிறைந்த நாடுகளைக் கைப்பற்றும் போது நன்றாக வாரிக் கொட்டு'' என்று கேலியாகக் கூறினார்.

பிற்காலத்தில் 'அலெக்சாண்டர் சிரியாவைக் கைப்பற்றியவுடன் அங்கு சாம்பிராணியும் குங்கிலியமும் மண்டிக் கிடந்ததைக் கண்டார். அலெக்சாண்டருக்கு ஆசிரியர் அன்றொரு நாள் கூறியது நினைவுக்கு வந்தது. உடனே நிறைய சாம்பிராணியை ஆசிரியருக்கு அனுப்பி வைத்த அலெக்சாண்டர் கூடவே கீழ்க்கண்டவாறு ஒரு கடிதத்தையும் எழுதினார்.

''ஆசிரியர் அவர்களே, இத்துடன் தங்களுக்கு ஏராளமான சாம்பிராணி அனுப்பி வைத்துள்ளேன். இனித் தாங்கள் ஆண்டவனிடம் சிக்கனம் காட்டத் தேவையில்லை!''

கடிதத்தைப் படித்த லியோனிடாஸ் திகைத்து விட்டார்.

மு. மதிவாணன், அரூர்.

நகரவாசி ஒருவர் ஒரு ஜோடிக் குதிரைகளை விலைக்கு வாங்கியிருந்தார். அவற்றை வண்டியில் பூட்டி ஓட்டிப் பார்க்கத் தீர்மானித்தார். குதிரைகள் எதிர்பார்த்ததை விடப் பிரமாதமாக தலைகால் தெரியாமல் ஓடின. அவருக்கு சந்தோஷம் தாங்கவில்லை.



பெரிய சாலைகளில் மட்டுமின்றி, காட்டுப் பாதைகளிலும், கிராமப்புற மண் ரஸ்தாக்களிலும் வண்டியைத் திருப்பித் திருப்பி ஓட்டினார். நகரை விட்டு எத்தனையோ மைல்களுக்கு அப்பால் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. குதிரைகளை மெச்சிக் கொண்டு நகருக்குத் திரும்பலானார். ஆனால், வழி தெரியவில்லை. எத்தனையோ பாதைகளில் வண்டியைத் திருப்பி, சந்தோஷத்தோடு ஓட்டிக் கொண்டு வந்ததால் நகருக்கு திரும்பிச் செல்லும் பாதையைத் தவற விட்டு விட்டார். கடைசியில் ஏதோ ஒரு பாதையில் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்த போது ஒரு கிராமம் தென்பட்டது. அதை நோக்கி வந்தார். அப்போது கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் எதிரே வந்தான்.

''தம்பி இங்கே வா!'' என்று நகரவாசி அவனை அழைத்து ''இந்தப் பாதை எங்கே போகிறது?'' என்று கேட்டார்.

''இது எங்கேயும் போக நான் பார்த்ததில்லையே! தினமும் இங்கேயே தான் இருக்கிறது'' என்றான் கிராமத்துச் சிறுவன்.

''இங்கிருந்து பக்கத்து நகருக்கு எவ்வளவு தூரம்?''

தெரியாது! தெரியாது!

''எனக்குத் தெரியாது. நான் அளந்து பார்த்ததில்லை.''

நகரவாசிக்கு எரிச்சலும், கோபமும் ஏற்பட்டது. ''உனக்கு ஒன்றுமே தெரியலையே! உன்னைப் போல முட்டாளை நான் பார்த்ததே இல்லை'' என்றார் நகரவாசி.


அதற்குக் கிராமத்து பையன், ''எனக்கு ஒன்றுமே தெரியாது என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு முட்டாள் என்பது கூட எனக்குத் தெரியும். ஆனாலும், நான் பாதையைத் தவற விட்டது கிடையாது'' என்று சொல்லி விட்டுப் போனான்!

– அ. முஸ்தபா, தக்கோலம்.

''அண்ணா காக்கை ஏன் கா, கான்னு கத்துது?''

''அதுக்கு அவங்க டீச்சர் கி, கீ சொல்லிக் கொடுக்கலே போலிருக்குது.''

– வி. ராஜன்





கோகுலம் இழுத்துக் கொண்டது!

★ கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் இருந்தால்தான் வாழ்க்கையில் எதிலும் வெற்றி பெறலாம் என்பதை அழகாக விளக்கியது 'தன்னம்பிக்கை' படக்கதை!
கல்லிடை, கே. எல். குமணன்.

★ தாய்க்காக எந்தத் தியாகத்தையும் செய்யலாம். தாயின் சிறந்தது ஒரு கோயிலும் இல்லை என்று விளக்கியது தூக்கத் திற்குத் தண்டனை சிறுகதை.
மகிழஞ்சேரி, கே. கணேசன்.

★ ராம - ஆஞ்சநேய யுத்தம் வண்ணப் படக்கதை அருமை. கதையாசிரியை ஆனந்தி அவர்களுக்கும், ஓவியம் வரைந்த செல்லம் அவர்களுக்கும் பாராட்டுகள்.
செஞ்சி, தா. ஷேக் உசேன்.

★ ஆந்தை என்றாலே முகம் சுளிக்கக் கூடிய இன்றைய காலத்தில், ஆந்தையிடம் உள்ள சில நல்ல விஷயங்களைக் கூறி, இப்போது ஆந்தை இருக்குமிடம் நோக்கி எங்களை ஓடச் செய்து விட்டீரே!
சிதம்பரம், என். ஆர். பாஸ்கரன்.

★ குழந்தைக் கவிஞரின் வாழ்வில் நடந்த சம்பவத்தை வெளியிட்ட கோகுலத்திற்கு டன் கணக்கில் பாராட்டுகள்.
செஞ்சி, மழலைச் செல்வன்.

★ ''தீபாவளிக்கு முன்னமே கோகுலம் கையில் தவழ்ந்து விட்டதால், தீபாவளியைச் சிறப்பாகவே கொண்டாட முடியவில்லை! எல்லா ஆர்வத்தையுமே கோகுலம் இழுத்துக் கொண்டது.''
தக்கோலம், அ. முஸ்தபா.

★ 'மனிதனைக் கடிப்பது பெண் கொசுவே' என்பது முன்பே தெரிந்த உண்மை என்றாலும், கொசுவைப் பற்றிய மற்ற அறிவியல் உண்மைகள் உண்மையிலேயே என்னை அசர வைத்து விட்டன.
ஸ்ரீமுஷ்ணம், சா. கிருஷ்ணசாமி.

★ அடேயப்பா! சுமார் 20 சிறுகதைகள்! இதென்ன சிறுகதை ஸ்பெஷலா?!
குத்தாலம், பி. பிரசாத்.

★ நேரு மாமா சிறையில் ஒன்பது ஆண்டுகள் இருந்தார் என்பதைப் படித்த போது எனக்கு அழுகையே வந்து விட்டது.
சென்னை - 15, ஜி. கே. வெண்ணிலா.

★ கமலவேலன் எழுதிய 'ஒரு ஸ்வீட் போதாதா?' நாடகம் ஸ்வீட்டைப் போல இனிமையாக, சுவையாக இருந்தது.
சேலம் - 5, என். சுரேஷ்.

★ பிறரைப் பார்த்து நாம் செய்யும், கிண்டல், நமக்கே வினையாகலாமென்பதைக் கிண்டல் செய்த வேலை, சிறுகதை உணர்த்தியுள்ளது!
குடந்தை, எஸ். கே. மூர்த்தி.

★ ''ஒரு ஸ்வீட் போதாதா?'' நாடகம் சிறப்பாக இருந்தது! ஆனால், எப்போதுமில்லாமல் இத்தனை ஆங்கிலச் சொற்கள் இருந்தமை வருத்தத்துக்கு உரியது சார்!
நாகமலை, ப. கா. மணிமொழியன்.

★ ''பிருந்தாவனக் கவியரங்கம்'' மிகவும் அருமையாக இருந்தது. ''கிளியைப் பார்'' சூப்பர். ''வானவில்'' மிக... மிக... சூப்பர்.
நாகரசம்பட்டி, த. கதிர்வேல்.

★ 'கேளுங்கள் சொல்லப்படும்' பகுதி மாணவர்களாகிய எங்களுக்கும் மற்றவர்களுக்கும் பொது விஷயங்களில் ஏற்படும் சந்தேகங்களைப் போக்க பயனுள்ளதாய் இருக்கிறது. கோகுலத்திற்கு ஜே!
சீர்காழி, ஜே. பலராமன்.


★ நாணயங்களைப் பற்றிய அனைத்தும் வரலாற்று மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருந்தது.
திட்டச்சேரி, ஏ. நிஷான் ஹலீம்.

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
அறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.

விருந்து எதுவும் வேண்டாங்க
விரலின் அமுதம் போதுங்க!



REGISTERED NO. TN MS (5) 281
Registered as a Newspaper in Srilanka



அசையா யானையின் ராஜாவே
அழகு மணிகளின் கணக்கென்ன?